
கல்கி
க்டோபர் 2:
அறிவிப்பு!



அவன் : ஏ புள்ள காத்தாயி
எந்திருச்சி வாயேண்டி
அந்தாண்டெ இடமிருக்கு
அதுக்குள்ளெ ஒண்டிக்கலாம்!

அவன் : ஐய்யய்யோ வேணுங்க
ஆசையெ விட்டுடுங்க
அஞ்சாறு பெத்தாச்சு
அவஸ்தெ இன்னும் புரியலியே...?!

அவன் : அவஸ்தெ நமக்கெதுக்கு
அரசாங்கம் எதுக்கிருக்கு?
பொறுப்பு அவங்களுக்கு
புலம்பாமெ வாயேண்டி!

அவன் : அவஸ்தெ நாமபடாமெ
அரசாங்கம் என்ன செய்யும்?
பொறுப்பு அவங்களுதா?
புரியலியே சொல்லு மச்சான்!

அவன் : அடிப் புரியாத பொட்டெப்புள்ளெ
அரசாங்கத் திட்டம் புள்ளெ
வெவரமா சொல்லறேண்டி
வெசயத்தை நீ புரிஞ்சுக்கோமெ!

அவள் : புரியாத சிரிக்கி மவ
புகையூதி கெடக்கிறவ
சொன்னாத்தான் புரியும் மச்சான்
சொல்லு நானும் புரிஞ்சுக்கறேன்

அவன் : பள்ளிக் கூடத்திலெ
புத்தகம் தர்றாங்க
பணங்காசு கேட்காமலெ
படிப்பும் சொல்லித் தர்றாங்க!

சத்துணவுத் திட்டத்துலெ
சாப்பாடு போடறாங்க
சீருடைத் திட்டத்திலெ
சட்டைத்துணி தர்றாங்க!

இன்னும் சொல்லப் போனா
என்னென்னமோ தர்றாங்க
சின்னப் புள்ளெங்களுக்கு
செருப்பு கூடத் தர்றாங்க!

அவன் : அப்ப கவலேயில்லெ
அவஸ்தையும் நமக்கு இல்லெ
கொஞ்சம் பொறுத்துக்குங்க
நம்பர் அங்க தூங்கவில்லெ!

— பாரதி பா. மு. தாசன்



ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளைச் சந்தித்த போது அவர் எப்போதும் போல் உற்சாகத்துடன் காணப்பட்டார். சமீபத்திய பத்திரிகைச் செய்திகள் காரணமாகத் தம்மைச் சிலர் 'பேப்பர் சுவாமிகள்' என்று அழைப்பதைச் சிரித்தபடியே சொன்னார். பேட்டியின் சுருக்கமான தொகுப்பு:

"தேசீய நோக்குடன்

கே: சமீபத்திய நாட்டு நடப்பும் பிரச்னைகளும் தங்களை வெகுவாகப் பாதித்ததாக அறிகிறோம். எவ்வகையில், எந்த அளவில் இந்தப் பாதிப்பு ஏற்பட்டது என்று கூற முடியுமா?

ப: நான் பீடத்துக்கு வந்த இந்த முப்பத்து மூன்று வருடங்களில் இந்தியாவெங்கும் சுற்றுப்பயணம் செய்திருக்கிறேன். தனியாகவும் எனது குரு — பெரியவருடனும் பல இந்தியக் கிராமங்களையும் நகரங்களையும் கண்டு, உன்னிப்பாகக் கவனிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இந்தச் சுற்றுப்பயணங்களின் போது என்னை உறுத்திய உண்மை இதுதான்: பாமர மக்களும் படிப்பறிவு இல்லாதவர்களும், அறியாமையில் உழன்று கொண்டிருந்தனர். வலியவர்கள் அவர்களைச் சுலபமாக ஏமாற்றிக் கொண்டிருந்தனர். அறியாமையைப் போக்குவதன் மூலம்தான் பாமர மக்களுக்கு உதவ முடியும் என்று எனக்குத் தோன்றும். பரமாச்சாரியரும் நானும் அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டோம். பிரச்னையின் பரிமாணத்தை அப்போதுதான் உணர்ந்தோம். எங்கள் சிறு முயற்சி சமுத்திரத்தில் கரைத்த பெருங்காயமாய்ப் போய்விடுவதைக் கண்டோம்.

வடநாட்டில் யாத்திரை செய்தபோது, நமது தென்னாடே தேவலாம் என்று சொல்லும் அளவுக்கு நிலைமை மோசமாயிருந்தது. அங்கு ஜாதி, இன வேற்றுமைகள் மிகவும் பாராட்டப்பட்டு வருகின்றன. இத்தகைய நிலைமை நமது அரசியல்வாதிகளுக்கு மிகச் சாதகமாக இருப்பதால் அவர்களும் இதைப் பற்றிக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. ஜாதி வேற்றுமைகளில் ஊறிப்போன சமூக அமைப்பும் இப்பிரச்னையைப் பெரிதாகக் கருதவில்லை — பாமர மக்களின் அறியாமையும் படித்த, பொறுப்பில் உள்ள மக்களின் மெத்தனமும்தான் என்னை மிகவும் பாதித்தன. அதிலிருந்துதான் ஆன்மீகத்தின் மூலம் எல்லோரையும் ஒன்றுபடுத்த முயற்சி செய்ய வேண்டும் என்றொரு யோசனை என்னுள் வித்திட்டுத் தீவிரமடைய ஆரம்பித்தது.

கே: தாங்கள் ஆரம்பிக்கவிருக்கும் ஆன்மீக இயக்கம் எத்தகையது?

ப: மக்களுக்கு மங்களம் உண்டாக்கும் நோக்குடன் ஆரம்பிக்கவுள்ள இவ்வியக்கத்தை "ஜன கல்யாண்" என்று அழைக்கவிருக்கிறோம். இவ்வியக்கம் இந்தியப் பண்பாட்டை, கலாசாரத்தை அடிப்படையாகக் கொண்டதாயிருக்கும். மதச்சார்பு இல்லாத இயக்கம் இது — ஹிந்துக்களுக்காக மட்டும் ஏற்பட்ட இயக்கமாக இது இராது — மதம் என்பது ஒரு பாதை — வாழ்க்கையை எப்படி வாழ வேண்டும் என்று வகுத்துச் சொல்லும் நெறி. ஜன கல்யாண் அதைக் கடந்து ஆன்மீ

கம், தெய்வீகம் என்ற உயர்ந்த பண்புகளை மக்களிடையே பரவச் செய்து அவர்களை ஒன்றுபடுத்த முயற்சி செய்யும். தெய்வீக, ஆன்மீக ஈடுபாடுகளைக் கட்டாயமாக வலியுறுத்தும் இவ்வமைப்பு வழிபாட்டு முறைகளையோ நெறிகளையோ வகுக்கவோ வலியுறுத்தவோ செய்யாது. ரோட்டரி அரிமா சங்க உறுப்பினர்கள் தத்தம் தொழில்களைத் தனித்தனியே செய்து வந்தாலும் சமூகப் பணியில் ஒருங்கிணை வது போல் இவ்வமைப் பின் உறுப்பினர்கள் வேற்றுமையில் ஒற்றுமையாய் இருப்பார்கள். மனிதனை மனிதனுக நேசிக்க, மதிக்க இந்த ஏற்பாடு உதவும் என்று நம்புகிறேன்.

கே: மதச்சார்பற்ற தங்கள் புதிய பாதை, அரசியல் கலப்பு அல்லது குறுக்கீடு அற்றதாக இருக்குமா? தங்களை வரவேற்பதற்காகக் காஞ்சியில் ஆர். எஸ். எஸ். தொண்டர்கள் அணிவகுத்ததும் ஹிந்து முன்னணி போன்ற அமைப்புக்களுடன் தங்களைத் தொடர்புபடுத்தி வெளிவரும் செய்திகளும் தாங்கள் ஒரு புதிய எல்லைக்குள் பிரவேசிப்பதை உணர்த்துகின்றனவா?

ப: ஜன கல்யாண் ஒரு தூய சமுதாய வேன்.

கே: அரசியலுக்கு ஆன்மீகத் தொடர்பு அவசியம் என்று கருதுகிறீர்களா? மதச்சார்பற்ற அரசியலமைப்பு பற்றித் தங்கள் கருத்து என்ன?

ப: கல்கி தலையங்கத்தில் (6.9.87) கூட 'இறையுணர்வு இல்லாத அரசியல் ஆபத்தானது' என்று சொல்லப்பட்டிருக்கிறது. 'இறையுணர்வு இல்லாத மனிதன் அரசியலில் ஈடுபடுவது ஆபத்தானது' என்று சொல்ல வேண்டும். அரசியல் சட்டமும் சாசனமும் மதத்துடன் தொடர்பில்லாமல்தான் இருக்க வேண்டும்.


மதச்சார்பின்மை என்று நீங்கள் **secularism** ஐக் குறிப்பிடுகிறீர்கள். இந்தச் சொல்லின் பொருள் தெளிவாக்கப்பட வேண்டும் என்று பிரதமர் கூட பார்லிமெண்டில் அண்மையில் கூறினுர். உலகின் மிகப் பழைய மதங்கள் தோன்றிய நாடு நம் நாடு; அதோடு வேறு பல நாட்டு மதங்களின் புகலிடமாகவும் இருந்திருக்கிறது. இந்த நாட்டை மதச்சார்பற்ற நாடு என்று சொல்வது முரண்பாடாகத் தோன்றுகிறது. எனவே அதற்குப் பதிலாக வேறு ஒரு சொல்

ஓர் ஆன்மீக இயக்கம்”

மேம்பாட்டு அமைப்பாகவே இருக்கும். அதற்கு ஆர். எஸ். எஸ். சார்போ வேறு எந்தச் சார்போ கிடையாது. யார் வேண்டுமானுலும் அதில் பங்கேற்கலாம்.

ஆர். எஸ். எஸ். நாட்டில் எந்த நல்ல காரியம் நடந்தாலும் அதை வரவேற்று ஆதரிக்கும் அமைப்பு. அந்த வகையில்தான் நான் காஞ்சிக்குத் திரும்பும்போது அதன் தொண்டர் படையும் வந்திருந்தது. ஹிந்து முன்னணி, ஹிந்து சமய மன்றம், ஹிந்து கல்லூரி போன்றவற்றிலிருந்தும் பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். அவர்கள் எல்லோரும் வந்ததற்கான நோக்கம் என்னவென்ருல், காஞ்சியைச் சுற்றி அப்போது ஒரு பதற்றமான நிலைமை நிலவியது. எந்த அசம்பாவிதமும் நடந்துவிடக் கூடாதே என்கிற நோக்கத்துடன்தான் அவர்கள் வந்தார்கள். ஆனுல் அன்று நல்ல மழை பெய்ததால் யாருடைய பாதுகாப்பும் தேவையில்லாமல் போயிற்று.

ஆர். எஸ். எஸ். மீது அபிமானம் கொண்டு அவர்களுடைய பொதுக் கூட்டங்களில் நான் கலந்து கொண்டிருக்கிறேன். இந்து சமயத்துக்கு ஆர். எஸ். எஸ். போன்ற ஓர் அமைப்பு அவசியம்தான். ஆனுல் அதற்காக நான் அவர்களுடைய கொள்கைகளைப் பிரசாரம் செய்வது கிடையாது. அவர்களுடைய பொதுக்கூட்டங்களில் கூட என் கருத்துக்களைத்தான் சொல்



* "இந்தத் தண்ட விஷயத்தைப் பற்றிப் பேசுவதே தண்டம்!"

லேப் பயன்படுத்துவது நல்லது என்று நினைக்கிறேன். எல்லா மத தர்மங்களையும் பேணும் நாடு என்ற பொருள் தொனிக்க வேண்டும்.

கே: ஹிந்துக்களிடையே ஜாதி ஹிந்துக்கள் என்றும் தாழ்த்தப்பட்டோர் என்றும் பிரிவுகள் இன்னும் இருந்து வருகின்றன. அனைவருக்கும் சம அந்தஸ்தும் மரியாதையும் தரப்படாதது ஒருபுறமிருக்க, ஜாதி ஹிந்துக்கள் அல்லாத பிறர், மிகவும் இழிவாக நடத்தப்படும் நிலை இன்னும் தொடர்கிறதே. இதை மாற்ற வழி என்ன?

ப: வித்தியாசங்களும் பேதங்களும் பழக்க வழக்கங்களில் உள்ள வேறுபாடுகளினாலோ வாழ்க்கை முறையிலுள்ள வேறுபாடுகளினாலோ ஏற்படுகின்றன. ஆனால் அவற்றை வளர்த்து, வேருன்றச் செய்வது மனம் தான். வித்தியாசப்படுபவரை வெறுக்கச் செய்வதும் அந்த மனத்தின் போக்குத்தான். அதனால் இந்தப் பிரச்னையை மன வளத்தைப் பெருக்குவதால் மட்டுமே தீர்க்க முடியும். சட்டங்களாலோ, அரசாங்கத்தின் பொருளாதாரச் சலுகைகளாலோ இந்த நிலைமை சீரடையவே செய்யாது. கையில் உள்ள ஐந்து விரல்களும் வெவ்வேறு மாதிரி இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் சேர்ந்து இயங்குவதால் தான் அந்தக் கையால் வேலை செய்ய முடிகிறது. அதைப் போலத்தான் சமூகமும் — ஒவ்வொரு பிரிவினரும் தமது கர்மாவைச் சீராகச் செய்வதால்தான் வாழ்க்கை வண்டி ஓடுகிறது. அதனால் ஒவ்வொரு நபரும் முக்கியமானவர், அன்புக்குரியவர், மரியாதைக்குரியவர் என்ற உணர்வு ஏற்பட்டாலொழிய நீங்கள் சொல்லும் இப்பிரச்னை தீரப் போவதில்லை. எவ்வளவு உயர்ந்தவனுக இருந்தாலும் அவன் 'எண்ணங்கள்' உயர்வாய் இல்லாவிட்டால் அவன் தாழ்ந்தவன்தான். தாழ்ந்தவன் என்று முத்திரை குத்தப்பட்டிருப்பவனின் எண்ணங்கள் உயர்வானவையாக இருப்பின் அவனே உயர்ந்தவன். மனத்தை வளப்படுத்தவும் எண்ணங்களை உயர்த்தவும் மதம் உதவுகிறது — உதவ வேண்டும்.

கே: பாமர மக்களிடையே மூட நம்பிக்கைகள் அதிகம் என்பது பற்றி...?

ப: பாமர மக்களிடையே உள்ள தீவிரமான பிடிப்பை மூடநம்பிக்கை என்பதை விட ஆழ்ந்த நம்பிக்கை என்றுதான் சொல்ல வேண்டும். அந்த ஆழ்ந்த நம்பிக்கையே அவர்களுக்குப் பலத்தை அளிக்கிறது. படித்த, பொருளாதாரத்தில் உயர்ந்தவர்களிடம் உள்ள நம்பிக்கையில் இந்த அளவுக்குத் தீவிரம் இல்லாததால் அவர்களுக்குக் கிட்டும் பலனும் குறைவுதான்.


கே: தங்கள் புதிய திட்டம் பற்றி இன்னும் ஏதேனும் கூற முடியுமா? அதை அறிவிக்க விஜயதசமி தினத்தைத் தேர்ந்தெடுத்ததில் ஏதேனும் விசேஷம் இருக்கிறதா?

ப: ஜனங்கள் எல்லோருடைய நன்மைக்காகவும் பாடுபடப் போகும் இயக்கம் 'ஜன கல்யாண்.' ஆன்மீக உணர்வுடன் தூய்மையான வாழ்க்கை வாழ, சிக்கனமாக வாழ்ந்து பொருளாதாரப் பிரச்னைகளை எதிர்கொள்ள, எல்லோரும் ஒற்றுமையாக இருக்க, இவ்வியக்கம் வழிகாட்டும். பத்திரிகைகள், போதனைகள் மூலம் ஜனங்களுடன் தொடர்பு கொள்ளும். தேசிய ஒருமைப்பாட்டை முக்கியமாக வலியுறுத்தும். இந்த அமைப்பின் அடிப்படை நோக்கு தேசியமாகத்தான் இருக்கும்.

விஜயதசமியைத் தேர்ந்தெடுக்கக் காரணம் அந்த தினம் துர்க்கா, லக்ஷ்மி, சரஸ்வதி தேவிகளுக்குப் பூஜை செய்யும் தினம். ஜனங்களின் துக்கம் அகன்று, அவர்களுடைய வறுமை நீங்கி, மனமும் அறிவும் தெளிவடைய இந்த மூன்று தேவிகளையும் முறையே வேண்டி இயக்கத்தைத் துவங்க

* "ஜன கல்யாண்" — ஒரு தூய சமுதாய மேம்பாட்டு அமைப்பாக இருக்கும்."





ஆதித்ய ஹ்ருதயம்

ஆதித்ய ஹ்ருதயம் என்று வழங்கப்படும் முப்பது ச்லோகங்களும் வால்மீகி ராமாயண யுத்த காண்டப் பகுதியில் உள்ளவைதாம். இதில் முதல் நான்கு ச்லோகங்களும், கடைசி ஆறு ச்லோகங்

களும் வால்மீகி அருளியவை. இடையில் உள்ள இருபது ச்லோகங்களும் அகஸ்தியர் அருளியதை அப்படியே எடுத்து வைத்திருக்கிறது. மகாபாரதத்தில் பகவத்கீதையை வியாச மகரிஷி அப்படியே எடுத்து வைத்துள்ள மாதிரி. பகவானும், பெரியவர்களும் அருளியதைக் காவியம் செய்யும் போது கூட அவர்களுடைய வாக்காகவே வைப்பது ஒரு மரபு.

தமோக்னாய ஹிமக்னாய
ஸத்ருக்னாய அமிதாத்மனே.
க்ருதக்னக்னாய தேவாய
ஜ்யோதிஷாம் பதயே நம:

இருளை அகற்றுகிறவரும், பனியைப் போக்குகிறவரும், விரோதிகளை நாசம் பண்ணுகிறவரும், அளவிடமுடியாத பெருமைகளையுடையவரும், நன்றி கெட்டவர்களை அழிப்பவரும் எல்லா ஒளிகளுக்கும் தலைவராக இருப்பவரும் ஆக, விளங்குகிற உங்களை நமஸ்கரிக்கிறேன்.

இந்த மாதிரி இருபது பாடல்களிலும் சூரியனின் குணமும் பெருமையுமே பேசப்படுகின்றன.

ஆதித்ய ஹ்ருதயத்தின் பெருமையை இரண்டு ச்லோகங்களில் கூறியிருக்கிறது.

ஆதித்ய ஹ்ருதயம் புண்யம்
ஸர்வ சத்ரு விநாசனம்.
ஜயாவஹம், ஜபேது நித்யம்
அக்ஷய்யம் பரமம் சிவம்!
ஸர்வ மங்கள மாங்கல்யம்
ஸர்வ பாப ப்ரணாசனம்!
சிந்தா சோக ப்ரசமனம்
ஆயுர் வர்த்தனம் உத்தமம்!

சத்ருக்களை யெல்லாம் நாசம் செய்வதும், வெற்றியை அளிக்கவல்லதும், எப்போதும் அழிவில்லாதிருப்பதும், மிகவும் மங்கள கரமானதும், எல்லா மங்களங்களுக்கும் உயர்வான மங்களமாக இருப்பதும், எல்லா விதமான பாவங்களையும் நாசம் செய்வதும், மனக்கவலையையும் சோகத்தையும் போக்க வல்லதும், நீடித்த ஆயுளைத் தரக் கூடியதுமான ஆதித்ய ஹ்ருதயம் ஸ்தோத்திரத்தை ஜபிக்கவும் என்று அகஸ்தியர் சொன்னதாக வால்மீகி மகரிஷி பாடியிருக்கிறார்.

ஸ்ரீ ராமதேசிகன் கூறக் கேட்டு எழுதியது
— சுப்ரபாலன்.

உள்ளோம். மேலும் விஜயதசமி அன்று அந்தக் காலத்தில் அரசர்கள் திக்விஜயம் செய்வார்கள். இன்றைய அரசர்கள் ஜனங்கள்தானே! அவர்களுக்கு வெற்றியும் மங்களமும் திரும்பத் திரும்ப உண்டாகவே அந்த நன் நாளில் ஜனகல்யாண் துவங்க உள்ளது.

கே: சுவாமி விவேகானந்தர் காட்டிய வழியை ஒத்ததாகத் தங்கள் வழியும் இருக்குமா என்று கேட்கப்பட்ட போது அந்த கைய பாதையை ஏற்கெனவே கடந்து முன்னேறிவிட்டதாகத் தாங்கள் கூறியுள்ளீர்கள். எவ்விதத்தில் என்று சொல்லலாமா?

ப: 'நூறு விவேகானந்தர்களுக்கு மேலே நான் போய்விட்டேன்' என்று நான் பதில் சொன்னேன். பரமஹம்ஸரின் அருள் பெற்ற விவேகானந்தரின் அருள் நோக்குப் பிரதேசம் ஹிந்து மக்களை மேம்படுத்துவதோடு இருந்தது. கண்கண்ட தெய்வமாம் ஸ்ரீ வேங்கடாசலபதியின் ஆக்ஞையையும் அருளையும் பெற்று இந்தியப் பொது மக்கள் எல்லோரையும் உள்ளடக்கிய இயக்கத்தை நாம் ஆரம்பிக்கப் போவதால் அவ்வாறு கூறினேன்.

கே: ஆதித்ய ஹ்ருதயத்தைத் தினமும் ஜபிக்கும்படி சொல்லியிருக்கிறீர்கள். அதன் பொருள் என்ன? அதனால் விளையக் கூடிய விசேஷமான பலன் என்ன?

ப: ஆதித்ய ஹ்ருதய மந்திரமே ராம — ராவண யுத்தத்தின் போது மானுட அவதாரமான ராமருக்குக் கவசமாக இருந்து அவரைப் பாதுகாத்தது. ராவணனை வெல்ல உதவியது. வாழ்க்கைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஜனங்களுக்குத் தீமையை வெல்லக் கூடிய சக்தியை, பாதுகாப்பை இந்த மந்திரம் அளிக்கும் என்பதால் இதைச் சொன்னேன். சாதாரணமாகவே இந்த மந்திரம் சொன்னால் வியாதிகள் நீங்கும். கண்ணுக்கு ஒளி கிடைக்கும். தலைக்காவேரியில் நான் தவம் செய்த போது, அங்கு காவிரி உற்பத்தியாகக் காரண கர்த்தாவாக இருந்த அகத்திய முனிவர் இந்த மந்திரத்தைச் சொன்னது நினைவு வந்ததால் ஆதித்ய ஹ்ருதயத்தை ஜபிக்க வேண்டும் என்று சொன்னேன்.

கே: தாங்கள் தண்டத்தை விட்டுவிட்டுச் சென்றது பற்றி.....?

ப: இந்தத் தண்ட விஷயத்தைப் பற்றிப் பேசுவதையே மிகவும் தண்டமாகத்தான் நான் நினைக்கிறேன். தண்டம் என்பது சந்நியாசிக்கு மித்ர ஸ்தானம் — அதாவது நண்பன் — சந்நியாசிக்கு வேறு நண்பர்கள் இருக்கக் கூடாது. ஆனால் அதற்கு ஏதேனும் தூய்மைக் கேடு விளைந்தால் அதை விட்டு விடுவோம். புதிய தண்டம் தயாராகும் வரை தண்டமில்லாமல் கூட இருப்போம். ஒரு நிலையைக் கடந்து விட்டால் தண்டம் என்பது அவ்வளவு முக்கியமில்லை. சதாசிவ பிரும்மேந்திரர் என்ற ஞானி காஞ்சியில் ரொம்ப நாட்கள் இருந்தார். தண்டத்தோடு இருந்தவர்; நியமங்கள், சாஸ்திரங்கள் படித்தவர். ஒரு லட்சியத்திற்காக எல்லாவற்றையும் துறந்து வஸ்திரம் கூட இல்லாமல் வெளியேறினார். அவர் கையில் அப்போது தண்டமும் இல்லை, கமண்டலமும் இல்லை! சென்றதன் நோக்கம் முக்கியமே தவிர, தண்டத்தை எடுத்துச் செல்வதையோ விடுத்துச் செல்வதையோ பற்றிப் பாமர மக்கள் கவலைப்படத் தேவையில்லை.

— சுப்ரபாலன், ப்ரியன்

மேலட்டை வண்ணப்படம்:
ஓம் சுப்ரமணியம்

புகைப்படங்கள்: **கே. வி. ஆனந்த்**

பாரத தேசம் காக்க ஜகத்குரு ஸ்ரீ ஜெயேந்திர சங்கரர்
காட்டும் பாதையில் அணிவகுத்து அறம் காக்க. அறம் நம்மை காக்கும்.

விஜயதசமி புனித நாளில்
உங்கள் வாழ்க்கையின் முன்னேற்றப் பாதையில்
முதலடி எடுத்து வைக்க ஓர் அரிய வாய்ப்பு!

ஜகத்குரு
ஸ்ரீ ஜெயேந்திர சங்கர புரம்

சென்னை பெருநகர எல்லைக்கு
அருகில் ஸ்ரீ பெரும்புதூர் புண்ணிய
க்ஷேத்திரத்திலேயே
ஸ்ரீமன் நாராயணனின்
நேர் அருட்பார்வையிலேயே
அமைந்த புனித லே-அவுட்
அட்வான்ஸ் ரூ. **1500/-**
மீதித் தொகை ரூ. **300/-**×
24 மாத சுலபத் தவணைகளில்

அரசு அங்கீகார எண் :
D.T.C. PM-86-35 CP-31

பெங்களூர் தேசிய
நெடுஞ்சாலையில்
பஜாரிலேயே அமைந்தது
உடன் வீடு கட்ட சிறந்த இடம்

அட்வான் ரூ. **1000/-**
மீதித் தொகை ரூ. **225/-**×
24 மாத சுலபத் தவணைகளில்

அரசு அங்கீகார எண் :
D.T.C. PM 83/188 LP 143

மேற்கண்ட இரண்டு லே அவுட்டுகளும் சென்னை-பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில் (NATIONAL HIGH WAY No-4) அமைந்துள்ளது. பஸ் வசதி, அரசாங்க அமைப்புகளும் இதர வசதிகளும் அருகிலேயே அமையப் பெற்றது.

உடனே முழுத் தொகையும் செலுத்துவோருக்கு கணிசமான தள்ளுபடி உண்டு

1. விஜயதசமி வெள்ளிக்கிழமை 2-10-1987 மதியம் 1 மணி
2. சனிக்கிழமை 3-10-1987 காலை 10.00 மணி - பகல் 1.00 மணி
3. ஞாயிற்றுக்கிழமை 4-10-1987 காலை 9-30 மணி பகல் 1. 31 மணி

மேற்கண்ட நேரங்களில் நபருக்கு ரூ 10/- செலுத்தி எங்கள் காரிலேயே மனைகளை பார்வையிட்டு, ரூ 100/- டோக்கன் அட்வான்ஸ் செலுத்தி ரிசர்வ் செய்யவும்.

வீட்டு மனைகள், வீடுகள், Fப்ளாட்டுகள் வாங்க கைராசியான இடம்

முரளிஸ் எஸ்டேட்
MURALIS ESTAT
12, ராமசாமி தெரு, தி.நகர் சென்னை 600017

கதை கதையாம் காரணமாம்



“நான் என்ன செய்யட்டும்? கிளப் டான்ஸ் வெக்காட்டா படம் படுத்திருமோன்னு பயம்...”

வியாபாரமாகாத ஓர் எழுத்தாளன் தரும் நாடகத்தைப் பார்த்து, அதே டைப்பில் போலீஸில் மாட்டாமல் ஒரு கொலை செய்யப் பெரிய மனிதர் முடிவெடுத்து...

நறுக் என்று விழுகிறது அட்டகாசமான முடிச்சு. இந்த முடிச்சு பிறி பிறியாய் நைந்து போகாமல் விண்ணென்று நிற்குமாறு திரைக்கதையை அமைத்திருக்கும் ஒய். ஜி. மகேந்திரா, — பிடியுங்கள் பாராட்டுக்களை.

கன்ஸல்ட்டிங் ரூமிற்குள் நுழைந்து விட்டால் போதும்,'நோயாளிக்கு அவசியமா இல்லையா என்று யோசிக்காமல் 'ஒரு எக்ஸ்ரே எடுத்துருங்க' என்று அடம்பிடிக்கும் மனோரமாவும், அம்பேல் ஆன பேஷண்ட்களுக்காகத் தனிக் கணக்கே வைத்திருக்கும் அவர் டியர் புருஷன் விகவும் ஜல் ஜல் கலகலப்பு.

வில்லனின் காப்பியில் கலப்பதற்குச் சர்க்கரை மாதிரி விஷம் தயார் செய்து ஜெய்சங்கர் காத்திருக்கும் அந்த ஸீன் செம டக்கர். முதலில் எதிர் பாராமல் நுழையும் நண்பன் காப்பி வேண்டும் என்று அடம் பிடிக்கக் கூடவே வந்து சேரும் வில்லன். அவன் காப்பியில் விஷம் கலக்க முடியாமல் நடுங்கும் கை. வியர்க்கும் உடல். ஜெய்சங்கர் ஜமாய்த்திருக்கிறார்.

ஒய். ஜி. எம். முக்கு இன்னும் கொஞ்சம் தைரியம் இருந்திருக்கலாம். ஒன்றுக்கு இரண்டாக கவர்ச்சி டான்ஸ். டிஸ்கோ சாந்தி ப்ளஸ் குயிலி.

இன்ஸ்பெக்டராக வரும் ராஜீவ். . ஜிலு ஜிலுப்புக்காக வரும் பல்லவி. எதற்காக வருகிறார் என்று தெரியாத ஒய். ஜி. பி.

'ஆகா'வும் இல்லே. 'சீச்சீ'யும் இல்லே.

ஹீரோவுக்கு வித்தியாசமான மேக்கப்.
ஹீ ரோயினுக்கு வித்தியாசமான (ரவிக்கை யில்லாத) டிரெஸ்.

வித்தியாசமான படத்துக்கு இவை போதும் என்று தீர்மானித்து விட்டார் டைரக்டர்.

ராதா ரவி வித்தியாசமான நடிப்புக்காகச் சிரமப்பட்டிருக்கிறார். அவருக்கு மட்டும் ஒரு ஜே'

பாண்டியராஜன் ஒரு ஸ்பெஷல் வேஸ்ட்.

எத்தனை முரடனாயிருந்தாலும், அன்பு அவனை அடிமைப்படுத்திவிடும் என்பதுதான் மையக் கரு (என்று நினைக்கிறோம்).

அதைச் சொல்வதற்குள் காரெக்டர்களைப்
படாத பாடு படுத்தி ஆற்றில் ஒரு கால்,
சேற்றில் ஒரு கால், மலையில் ஒரு கால்,
பள்ளத்தில் ஒரு கால் என்று
பாலன்ஸ் இல்லாமல் குதப்பி,
சொல்ல வந்தது புரியாமல்
போய் விட்டதோ என்று படம் முடிகிற
நேரத்தில் பின்னணியில் நீளமாய்
ஒரு விளக்கவுரை கொடுத்திருக்கிறார்களே,
அந்த விளக்கவுரையைப் புரிந்து கொள்வதற்காகவே
தனியாகக் கோனார் நோட்ஸ்
போட வேண்டும்!

— ஜெயமன்மதன்.

வாழ்க வளர்க

“எத்தனை முரடனையும் அன்பு வசப்படுத்தி விடும் தெரியுமா?”
“புரியலே கய, விளக்கமா சொல்லு!”



ஆகா! என்ன ஒற்றுமை!

* மத்தியில் ''வறட்சியில் நிவாரணம்'' தேடினால் (அரசியல் ஆதாயம்) மாநிலத்தில் வெள்ள நிவாரணத்தில் சொந்த நிவாரணம் தேடுகிறார்கள் — மத்திய மாநில அரசுகளிடையே என்ன ஒற்றுமை!

கோவை—6, ஆர். ரமணன்.

* வெள்ள நிவாரணத் தொகையை அரசு அலுவலர்கள் வழங்கினால் ஆளுங்கட்சிப் பிரமுகர்களின் பிழைப்பு என்னாவது சார்! விவரம் புரியாத ஆளா இருப்பீர் போலிருக்கிறதே...!

ஆனை. பி. துரைராஜ்.

* ஆலப்பாக்கம் கிராம மக்கள் எப்படி அரசியல் பிரமுகர்களால் ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள் என்று ஆதாரங்களோடு பிட்டு, பிட்டு வைத்திருக்கிறீர்கள்.

சென்னை—50, வி. சுவாமிநாதன்.

* தங்கள் தலையங்கம் படித்தேன். வறட்சியின் கொடுமையால் மக்களை எதிர் நோக்கியிருக்கும் பிரச்னைகளைத் தங்களை விடத் தெளிவாக யாரும் விளக்கவில்லை. ஆட்சித்திறனின்மை வறட்சி என்று கேட்டிருக்கிறீர்கள். ஆட்சித்திறன் இருந்தால் ஏன் சார் புதிது புதிதாக வரிகள் போடுகிறார்கள்?

பாலமேடு. ஆர்.கே. குமரேசன்.

* நாடெங்கிலும் வறட்சி உக்கர தாண்டவம் ஆடும் சமயத்தில் இடைக் கழியின் அழகான இயற்கை அழகைக் கண்முன் கொண்டு வந்த உம்மைப் பாராட்டத்தான் வேண்டும். ஆனால் அதே சமயத்தில் இடைக் கழியின் அடிப்படை தேவைகளே பூர்த்தி செய்யப் படாமல் இருக்கும் போது, அந்த அழகை எங்களால் அனுபவிக்க முடியவில்லையே!

கருவேப்பிலங்குறிச்சி குரு. வைத்தியநாதன்.

* 'கல்வியில் தமிழகம் பின்தள்ளப்படுவதற்குக் காரணம் என்ன என்பது இடைக்கழி நாடு கட்டுரையைப் படித்த பிறகுதான் விளங்கியது. பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகள் அமைத்துத் தர வேண்டியது அரசின் கடமை. ஆனால் ஓட்டு வாங்குவதற்கு இலவச பல்பொடியும், செருப்பும் கொடுக்கும் இந்த அரசுக்கு இதெல்லாம் எங்கே முக்கியமாகத் தெரியப் போகிறது.

திருநெல்விக்காவல், எஸ். அரிஅரன்.

* சாக வேலாயுதனின் ''ஒரு மில் திறக்கப் படுகிறது'' கதையில் ஐம்பது இருபது ரூபாய் கட்டுகளை எடுத்து வீசுவதாகவும், அது மொத்தம் அம்பதனாயிரம் என்றும் வரிகள் வருகிறது. அது எப்படி? ஒரு லட்சம் ஆகிறதே!

புதுக்கோட்டை. தங்க பாண்டியன்.

* 'அன்பு' எத்தனை சக்தி வாய்ந்தது என்பதை அருமையாய்த் தெளிவுபடுத்திய இரா. சரஸ்வதியின் 'அங்கே என்ன இருக்கு?' ஒரு பக்கக் கதையில் அற்புதமான கருத்து இருக்கு!

கோவை—4 3, உமார்த்தி.

* 'ஜல்லிக்கட்டு' விமரிசனம் சின்னதாக இருந்தாலும் விமரிசித்திருந்த பாங்கு சுச்சிதம்! சுவாரசியம்!!

விருத்தாச்சலம்—1. கே.சு. பக்தவச்சலம்.

* இவ்வார கல்கியில், வண்டலூர் பூங்காவின் அவலநிலைகளைத் தெள்ளத் தெளிவாக்கியிருந்தீர்கள். மானிட உயிர்களுக்கு மட்டு மல்லாமல், ஐந்தறிவினைக் கொண்ட மிருகங்களுக்காகவும், ஆதரவுக் குரல் எழுப்பியிருந்த ''கல்கி''யைப் பாராட்டியே தீர வேண்டும்.

தோட்டக்குறிச்சி—113. இரா. வனேயாபதி.

* மூப்பனாருக்கு முதல் மரியாதை! — சந்தோஷம். நம்ம 'முதல் மரியாதை'க்காரருக்கு எந்த மரியாதையும் இன்னும் கிடைக்க வில்லையே!

வனையமாபுரம். வலங்கை. ஜி. ராஜசேகர்.


* கரடிகுளம் ஜெயாபாரதிபிரியா எழுதிய 'ஜோக்'கில் ''பட்டி மன்றக் கவிஞராச்சே'' என்ற ஒரு சொற்றொடர் என்னை வியக்க வைத்தது. பட்டி மன்றத்திற்கும் கவியரங்கத்திற்கும் வித்தியாசம் தெரியாமல் 'ஜோக்' எழுதியவர் எழுதினாலும், அதை வெளியிட்ட தங்களுக்காவது அதன் வித்தியாசம் தெரிந்திருக்க வேண்டுமே!

இராமேஸ்வரம். அ. அருள்.

* 'அந்த முதல் துளி' சிறுகதையில் வரும் பள்ளி ஆசிரியைப் பாத்திரத்தைச் சுலபத்தில் மறக்க முடியாது. தியாக உள்ளம் கொண்ட ஒரு புதுமைப் பெண்ணாக அந்த 'முதிர் கன்னி' பாத்திரத்தைப் படைத்துள்ள அறிமுக எழுத்தாளர் பாராட்டப் படவேண்டியவர்.

தத்தியநல்லூர். க. கயல்விழி.

வட்ட மேஜை






வாடிக்கையாளரது திருப்தி—
எமது இலட்சியம்!

லக்ஷ்மி சில்க் ஹவுஸ்.
மூன்றே ஆண்டுகளுக்குள் 80000க்கும் மேலான வாடிக்கையாளர்களுக்கு மனநிறைவும் முழுமையான திருப்தியும் வழங்கியுள்ள பட்டுப் புடவைகளின் மாபெரும் ஷோ-ரூம்.
வாடிக்கையாளரது திருப்தியே இலட்சியமாகக் கருதுவதற்கு இதுவன்றோ சான்று!

ஏர்-கண்டிஷன் வசதியிலே, எத்தருணத்திற்கும் ஏற்ற பட்டுப்புடவைகளை வசதியாகப் பார்வையிடுங்கள். திருமணத்திற்காகிலும் சரி, தினசரி அணிவதற்காகிலும் சரி. பல நெசவுக் கேந்திரங்களிலிருந்து உருவான 30,000க்கும் மேலான புடவைகளிலிருந்து தேர்ந்தெடுங்கள்.

ஞாயிற்றுக்கிழமை
திறந்திருக்கும்.







லக்ஷ்மி சில்க் ஹவுஸ்


பனகல் பார்க் எதிரே, மாடியிலே தி. நகர், சென்னை 600 017.

Our Associate: லக்ஷ்மி சில்க் ஹவுஸ்.
மாதுங்கா (மத்ய ரயில்வே), பம்பாய்-400 019.



வம்புமார்க்கெட்

கருணாநிதி சொல்லாமல் சொன்னது!



கட்டிடக்கலைஞர் கருணாநிதி!

பெரும் பெரும் கட்டிடங்களைக் கருணாநிதி விளம்பரத்துக்காகக் கட்டுவதாக அவரைவிமர்சிப்பவர்கள் தாக்கினாலும், அவற்றை அவர் உள்ளார்ந்தஈடுபாட்டுடனும் கலாரசனையுடன் செய்வார். பம்பாய் ஷண்முகானந்தா சபாவை விடப் பெரிதாக அமைய வேண்டும் என்று ஆய்ந்து, தானே ஒவ்வொரு கட்டடத்திலும் ஈடுபட்டு அவர் கட்டியதுதான் வள்ளுவர் கோட்டம். இதே போல் பூம்புகாரில் அமைந்த சிலப்பதிகார நினைவுச் சின்னத்தையும் கூறலாம். அண்ணா அறிவாலயத்தையும் அதே அளவு ஈடுபாட்டுடன் பார்த்துப் பார்த்துக் கட்டியிருக்கிறார். அதே சமயம் ஓர் அரசியல் சவாலையும் அவர் நிறைவேற்றியிருக்கிறார்.

அவ்வளவு சிரமப்பட்டு வள்ளுவர் கோட்டம் அமைத்தவரை, திறப்பு விழாவைக் கோலாகலமாகக் கொண்டாட விடாமல், இந்திரா காந்தி டிஸ்மிஸ் செய்தாரே, அதற்குப் பழிவாங்க எண்ணியதுபோல்- 'வள்ளுவர் கோட்டத்தை என்னைத் திறக்கச் செய்திருந்தால் இப்படித்தான் ஜவபோகமாகத் திறப்பு விழா நடத்தியிருப்பேன் என்று சொல்லாமல் சொல்லுவது மாதிரி, அண்ணா அறிவாலயத் திறப்புவிழாவை ஒஹோவென்று அமர்க்களப்படுத்திக் காட்டி விட்டார்.

ஊழலிலும் கூட்டா?

தமிழக அரசில், வறட்சி நிவாரண நிதியைச் செலவழிக்கும் பொறுப்பில் ஒன்பது சீனியர் அதிகாரிகள் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். நிவாரண வேலைகள் நடக்கும் முன்னரே, 'எங்கள் பகுதியில் நாங்கள் ஏற்கனவே நிவாரண வேலை செய்து விட்டோம். இதோ வவுச்சர்கள்... எங்களிடம் பணம் கொடுங்கள்' என்று லோகல் அ. தி. மு. க. பிரமுகர்கள், இந்த அதிகாரிகளுடன் மோதினார்களாம்! அரண்டு போன அந்த அதிகாரிகள் "பைசா தரமாட்டோம். இன்ன வேலைக்கு இவ்வளவு பணம் இன்னாருக்குத் தரவேண்டும் என்று மந்திரிகள் கையொப்பமிட்டு உத்தரவு தந்து, அதை ஒன்பது அதிகாரிகளும் கூட்டாக ஏற்றுக் கையொப்பமிட்டால்தான் பணப்பட்டுவாடா!" என்று கூறிவிட்டனர். இப்போது இது ஒரு 'கசமுசா'வாகிக் கொண்டிருக்கிறது! கடைசியில் 'கட்சிக்காரர்கள் எப்படியும் ஜெயித்துவிடுவார்கள்' என்கிறார்கள். இதற்கு மறுபுறமாக காங்கிரஸ்காரர்களுக்கு 'வசதி' செய்து கொடுக்க மத்திய அமைச்சர் ஒருவர் தம் பங்கில் ஒரு நிதியை வைத்துக் கொண்டு விநியோகம் செய்யப் போகிறார்! நிவாரணப் பணியில் போட்டியா, நிவாரண நிதியைப் பங்கிட்டுக் கொள்வதில் போட்டியா?

— ஒட்டக்கூத்தன் ஜி.

புகைப்படம்: சுபா.



"கண்டிப்பா ஆபரேஷன் பண்ணித்தான் ஆகணுமா டாக்டர்...?"

"பண்ணலேன்னு உங்களுக்கும் கஷ்டம், எனக்கும் நஷ்டம்."

— கரடிகுளம் ஜெயாபாரதிபிரியா

கல்கி



தீபாவளி மலர் 1987

இந்த ஆண்டு தீபாவளி மலரில் "ராமனுக்கு நிகர் ராமனே!" என்ற தலைப்பில் ஒரு சித்திரமடல் இடம் பெறுகிறது. அதையும் மற்ற வண்ண ஓவியங்களையும் வண்ணப் புகைப் படங்களையும் ஒரு முறை புரட்டிப் பார்த்ததுமே நீங்கள், "கல்கி தீபாவளி மலருக்கு நிகர் கல்கி தீபாவளி மலரே!" என்றுதான் சொல்லப் போகிறீர்கள்!

சபரிமலைக்குச் செல்ல வேணுமா, காசி யாத்திரை போக வேணுமா? ருஷ்ய, அமெரிக்க அதிசயங்களைப் பார்க்க வேண்டுமா? நாட்டரசன்கோட்டை ஆயிரம் கண்ணுடையாளைத் தரிசிக்க வேண்டுமா? சோளிங்கபுரம் யோக ஆஞ்சநேயரை வணங்கும் பேறு பெற வேண்டுமா? இலக்கியக் காதலர்களைக் காண வேண்டுமா? கல்கி தீபாவளி மலரைப் பார்த்தால் போதும். இவற்றையும், இவைதவிர மேலும் பல அம்சங்களையும் தமிழகத்தின் சிறந்த ஓவியர்களும் புகைப்பட நிபுணர்களும் வண்ணங்களில் வழங்குகிறார்கள்!

அமரர் கல்கியின் வீணை பவானி மலரின் எழுத்தோவியங்களில் வைரமாக ஜொலிக்கிறது!

ராஜேஷ்குமாரின் முழு நீள மர்ம நாவல் இடம் பெறுகிறது.

கட்டுரைகளுள் காஞ்சி பரமாச்சார்யாளின் அருளுரை சிகரத்தில் ஏற்றி வைத்த தீபமாக ஒளி சிந்துகிறது எனில், நீதிபதி ஆர். வியின் கட்டுரை சிந்தனையைத் தூண்டுகிறது. கி. ஆ. பெ., கே. எ. கே., வாரியார், டாக்டர் கலாநிதி ...யாரைச் சொல்வது, யாரை விடுவது?

பிரபல எழுத்தாளர்கள் ஒருவர் பாக்கி இல்லாமல் அற்புதமான சிறுகதைகளை எழுதியுள்ளனர்.

கோகுலம் பக்கங்கள்; மங்கையர் மலர்; கவிதை மடல் ஆகியனவும் உண்டு.


சிரிப்புப் பக்கங்களோ ஏராளம்!


இப்போதே உள்ளூர் ஏஜெண்டிடம் பதிவு செய்து கொள்ளுங்கள்.

விலை ரூ. 30/- ரிஜிஸ்தர் தபாலில் பெற ரூ. 35/- அனுப்பவும்.

மானேஜர், கல்கி, சென்னை - 600 032.

ஆண்டு முழுவதும் படித்து மகிழ... ஆயுட்காலத்துக்கும் பாதுகாக்க!


ஆபத்து!..
கிரந்த் சாஹிபுக்கு ஆபத்து!
மதகுரு
கிரந்த்..
சாஹிப்
பொற் கோயில்
பொற்கோயிலில் போலீஸ் நடவடிக்கை
பயங்கரவாதிகள்
மத்திய அரசு


ஊழல் ஒழிக!
ராஜீவ் ஒழிக!
வி.பி.சிங்
பாரதீய ஜனதா
என்.டி.ஆர்
லோக் தளம்
ஊழல் ஒழிக!
ராஜீவ் ஒழிக!
இடது
சாரி
எதிர்ப்பு


போலீஸ்னு நீதான்யா போலீஸ்! வெளுத்துக்கட்டிப் புட்டே!
சுத்த தூங்கு மூஞ்சி போலீஸ்! என்னத்தைப் பெரட்டிப் புட்டே?
வி.வி.சாமிநாதன்



கல்கி

1987 அக்டோபர் 4
மலர் 46 இதழ் 10
பிரபவ புரட்டாசி 18



ரணம் ஆறுது; மனக்கசப்பு நீங்காது!

குழந்தைகள் பாலின்றித் தவித்தன; பயணிகள் பசியால் வாடினர்; போக்குவரத்து ஸ்தம்பித்தது; விலைவாசிகள் உயர்ந்தன; சாலைகளில் பாறைகள் முளைத்தன; பச்சை மரங்கள் வெட்டி வீழ்த்தப்பட்டன; பாதைகளில் குழிகள் பறிக்கப்பட்டன, பாலங்கள் பல தகர்க்கப்பட்டன; பிரசவத்துக்கு ஆஸ்பத்திரி செல்ல முடியாத பெண்மணி உயிரிழந்தாள்; ஹரிஜனக் குடியிருப்புக்கள் தாக்கப்பட்டன; போலீஸ் துப்பாக்கிப் பிரயோகத்தில் பல உயிர்கள் பலியாயின; இன்னும் என்னென்னவோ கொடுமைகள்; எத்தனையோ சித்திரவதைகள்! வன்னியர் போராட்டம் ஏற்படுத்திய ரணம் ஆறப் பல மாதங்கள் ஆகும்; மனக்கசப்பு நீங்கப் பல ஆண்டுகளாகும்.

இதற்கு மறுபுறமாகத் தமிழக அரசின், 'போராட்டம் பிசுபிசுத்துவிடும்' என்ற அலட்சியப் போக்கு; அது எரிமலையாக வெடித்ததும் 'போராட்டத்தைக் கைவிட்டால் தான் பேச்சு வார்த்தை' என்ற பிடிவாதப் போக்கு. போதாக் குறைக்கு அமைச்சரவைக்குள்ளேயே குழப்பம். 'போராட்டத்தின் தீவிரம் பற்றிப் போலீஸுக்குப் போதிய தகவல் இல்லை. அதனால் போலீஸ் போதிய முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்ளவில்லை' என்று துப்பறியும் துறையையும் சேர்த்துக் குற்றம் சாட்டுகிறார் வி. வி. சுவாமிநாதன். நெடுஞ்செழியனோ, வி. வி. எஸ். போதிய தகவல்களைப் பெறாததால் தவறாகப் பேசுவதாகப் பழி சுமத்துகிறார்! அமெரிக்காவில் இருக்கும் முதல்வரோ, எப்போதும் போல் இப்போதும், 'இறந்தவர்கள்குடும்பங்களுக்கு உதவித் தொகை' என்று அறிவித்ததுடன் தம் கடமை முடிந்ததாகக் கருதிக் கண்ணுறங்குகிறார்! முரண்பாடுகளும் மெத்தனமும் அலட்சியமும் பிடிவாதமும் நிறைந்த அமைச்சரவை நமது துரதிர்ஷ்டம்.

பிரச்னை என்ன? வன்னியர்கள் ஏற்கெனவே பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக ஏற்கப்பட்டவர்கள். ஆனால் பிற்படுத்தப்பட்டவர்களுக்கான ஒதுக்கீடுகளில் பெரும் பகுதியைச் செல்வாக்குமிக்க மற்ற ஜாதியினரே தட்டிச் செல்வதாக அவர்கள் குற்றம் சுமத்துகின்றனர். எனவே, பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு உள்ள இட ஒதுக்கீட்டில் இருபது சதவீதத்தை ஜனத்தொகை அடிப்படையில் வன்னியர் குலத்துக்கே ஒதுக்கிவிட வேண்டும் என்கின்றனர்.

எப்போது ஷெட்யூல் வகுப்பினருக்கு இடஒதுக்கீடு, பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு என்றெல்லாம் ஆரம்பித்து வைத்து விட்டோமோ, இனி, அடுத்த கட்டமாக அவற்றின் உட்பிரிவுகளிலும் ஒவ்வொரு ஜாதி அல்லது மதத்தின் அடிப்படையிலும், மொத்த ஜனத்தொகையில் அவர்களின் சதவீதத்துக்கு ஏற்ப, இடம் ஒதுக்குவது இன்றியமையாமல்தான் போகும். 'தகுதி, திறமை ஆகியவற்றின் அடிப்படையில் அனைவருக்கும் சம வாய்ப்பு' என்ற தத்துவம் ஆழக்குழி தோண்டிப் புதைக்கப்படத்தான் வேண்டும்.

இட ஒதுக்கீடு என்பது, பிரிட்டிஷார் இந்த நாட்டை நிரந்தரமாக ஆளும் நோக்குடன் புகுத்திய பிரித்தாளும் சூழ்ச்சி. தேர்தலில் தாழ்த்தப்பட்டவருக்குத் தனித் தொகுதி என்று ஆரம்பித்து வைத்தார்கள். ஆபத்தை அந்தக் கணமே உணர்ந்த காந்திஜி 'சாகும் வரை உண்ணாவிரதம்' என்றார். அவரை அன்று எதிர்த்து வாதாடிய அம்பேத்கார் கூடத் தனித் தொகுதிகள், சலுகைகள் ஆகியவற்றுக்கு ஒரு கால வரம்பு இருக்க வேண்டும் என்று ஒப்புக் கொண்டார். ஆனால் பிரிட்டிஷாரின் பிரித்தாளும் சூழ்ச்சியையே காங்கிரஸ் அரசும் தான் தொடர்ந்து பதவியில் இருக்கக் கையாண்ட போது, கால வரம்புகள் உடைத்தெறியப்பட்டன. பிற்படுத்தப்பட்டவரையும் தாழ்த்தப்பட்டவரையும் நிரந்தரமாக அந்நிலையிலேயே வைத்திருந்து, சலுகைகள் தந்து, அதன்மூலம் ஆட்சியிலிருக்கும் கட்சிக்கு நன்றி பாராட்டக் கடமைப்பட்டவர்களாக்கி விடுகிற சூழ்ச்சி தொடர்கிறது. இதன் பலாபலன்களை ஒவ்வொரு மாநிலமாக அடுத்தடுத்து வன்முறைப் போராட்டங்களில் அனுபவித்து வருகிறது.

'இந்தியாவில் ஜாதிகள் என்பதே கிடையாது; பொருளாதார ரீதியில் பின்தங்கிய வகுப்பினருக்கு மட்டுமே இடஒதுக்கீடுகள்; இந்தச் சலுகையிலும் திறமை, தகுதி அடிப்படையில் முன்னுரிமை' என்று அறிவித்து, இந்தக் கொள்கைக்குப் பொதுஜன வாக்கெடுப்பு மூலம் மக்களின் அங்கீகாரம் பெற்றாலன்றிப் பிரச்னை தீராது.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

இந்துவிற்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. இரண்டு வயதுக் குழந்தை பிரபுவை மார்பில் அணைத்துக் கொண்டும் — பின், "இதோ பாருடா ராஜா..." — என்று 'கிர்' ரென்ற சப்தத்துடன் ஓடும் ரயில் மற்றும் விளையாட்டுப் பொம்மைகளை மாறி மாறி வேடிக்கை காட்டியும் அவன் அழுகை ஓய்ந்த பாடில்லை. வாசலை ஆறுவது முறையாகப் பார்த்த பொழுது கணவன் பாலு ஷாப்பிங் முடித்து வீட்டுக்குத் தேவையான சாமான்கள், தங்கை பையனுக்கு விளையாட்டுப் பொம்மைகள் என்று ஏராளமாய் அள்ளிக் கொண்டு வீட்டுக்குள் நுழைந்தான்.

"என்ன இந்து... முகமெல்லாம் வியர்த்து. ஏன் பதற்றமாய் இருக்கே...? பிரபு ஏன் அழறான்?" — என்று அங்கு நிலவிய பரபரப்பான சூழ்நிலையைக் கண்டதும், கையிலிருந்த பொருட்களை சோபாவின் மீது போட்டு விட்டுக் குழந்தையைத் தான் வாங்கிக் கொண்டான்.

பிரபு அழுவதை நிறுத்தவில்லை. அவன் குரல் உச்ச ஸ்தாயிக்கு ஏறிக் கொண்டிருந்தது. "அதை ஏன் கேக்கறீங்க...? ஏழு மணிக்கு நீங்க வெளியில் புறப்பட்டுப் போனதும் அழ ஆரம்பித்தவன் இன்னும் அதே நிலையில்....." — என்று முடிக்காமல் இந்து கைகளைப் பிசைந்தாள் கண்களில் ஒரு வித கலவரம் உட்கார்ந்திருந்தது.

பாலு — இந்து தம்பதிக்குக் கல்யாணமாகி ஆறு வருஷமாய்க் குழந்தை இல்லை. சிவகங்கையிலிருந்து வந்திருந்த பாலுவின் தங்கை மல்லிகா, தன் மகன் பிரபுவை அவர்களிடம் விட்டு விட்டுக் கணவனுடன் மாலைக் காட்சி சினிமாவிற்குச் சென்றிருந்தாள். இந்து பிரபுவுடன் விளையாடிக் கொண்டு இருந்த போதுதான் எதிர்பாராத இந்த அழுகை, ஆர்ப்பாட்டம்... பாலுவிற்கும் சில வினாடிக்குள் முகம் வியர்த்து இதயத்திற்குள் படபடப்பு 'ஜிம்'மென்று இறங்கியது. அனுபவமில்லாததால் வரும் பிரச்னை!

"குழந்தைக்குச் சாப்பிட எதுவும் கொடுத்தாயா?" என்று கேட்டு விட்டு, மனைவியின் முகத்தைக் கூர்ந்து கவனித்தான்.

இந்து சொன்னாள்: "பால் சாதத்தில் அரை உருளைக் கிழங்கு பிசைந்து ஊட்டினேன்; வேறு எதுவும் கொடுக்கவில்லை."

"தவழும் போதோ, மெதுவாக எழுந்து நடக்கும் போதோ கீழே விழுந்தானா?"

"நீங்கள் போனதிலிருந்து அவனைக் கீழே இறக்கி விடவே இல்லையே!"

"கையில் ஸ்பூன் அல்லது தீக்குச்சி மாதிரி சிறிய பொருள் ஏதாவது வைத்திருந்ததாக ஞாபகம் இருக்கா? நல்லா, யோசிச்சு சொல்லும்மா..." இடையில், பிரபுவின் அழுகை. அழுகையைப் பொறுத்துக் கொள்ள மாட்டாமல் மனைவியிடம் குழந்தையை நீட்டினான். அவள் யோசித்து விட்டு, "இல்லைங்க" என்றாள் மெதுவான குரலில். அவ்வளவுதான்....

"பின்னே குழந்தையை என்னதான் செய்தே, சண்டாளி!" — என்று அவன் கத்தியதும், எதிர்பாராத இந்தத் தாக்குதலால் துவண்டுபோன அவள் கண்களிலிருந்து நீர் இறங்கியது. நிலை குலைந்து போன போதும் "வயிற்றை வலிக்கிறதோ, என்னவோ... டாக்டருக்குப் போன் பண்ணுங்களேன்" என்றாள். குழந்தையுடன் ஹாலில் குறுக்கும் நெடுக்குமாய் நடந்து கொண்டே.

பாலு சர முதுகுடன் சென்று ரிஸீவரை எடுத்து டயலைச் சுழற்ற...

டாக்டர் ராஜன் பளிச்சென்ற வெள்ளை உடையுடன் அவசரமாய்வந்தார். ஸ்டெத்தை குழந்தையின் நெஞ்சுப் பகுதியிலும் முதுகிலும் திரும்பத் திரும்ப வைத்து எடுத்தார். நாடித் துடிப்பு, பேனா டார்ச்சினால் மூக்குத் துவாரம், தொண்டைப் பகுதி, காது, கண் இமைகள் என்று அனைத்தையும் சோதித்து விட்டு நெற்றியைச் சொறிந்தார். கிருதாவில் சரம் கசியத் தொடங்கியது.

பிரபுவின் அழுகையில் அதே தீவிரம்.

"குழந்தைக்கு மலம், நீர் எப்பொழுது வந்தது?" — டாக்டர் கேட்டார்.

பாலு, மனைவியைப் பார்த்தான்.


அவள், "ஏழரை மணி சுமாருக்கு" என்றாள்.

"அப்போ 'அந்த' ப்ராப்ளமும் இல்லை. மிஸ்டர் பாலு, ஓக். குழந்தைக்கு எல்லாம் ஓ. கே. நார்மலாய்த்தான் இருக்கு. எந்த வியாதியும் இல்லை. ஸோ, நீங்கள் ரெண்டு பேரும் பயப்பட வேண்டியதே இல்லை" என்றார். பெரிய ஆராய்ச்சியை முடித்து விட்ட மாதிரி.

பாலுவிற்கு டாக்டரின் மொணைக் தலையில் தோசைக் கரண்டியால் ஓங்கி செமை வெட்டு வெட்ட வேண்டும் போலிருந்தது.

சிறிது ஆத்திரக் கலவையுடன் தயங்காமல், "டாக்டர், நீங்கள் ஒரிஜினல் எம்.

அறிமுகம்: ஓர் அனுபவம்



பி. பி. எஸ். தானே?'' என்றதும், அவருக்குக் கோபம் கொப்புளித்தது. ''குழந்தை அப்பட்டமான நலத்தோடு இருக்கிறதாக சர்டிபிகேட் தருகிறேன். ஸிட்டியில் எந்தப் 'பெரிய' டாக்டரிடம் வேண்டுமானாலும் கொண்டு சென்று குழந்தைக்குக் குண்டூசி அளவு வியாதி இருப்பதாய் நிரூபித்தால் நான் டாக்டர் தொழிலை விட்டு விடுகிறேன்'' என்று கோபத்துடன் கத்திவிட்டுப் போய் விட்டார்.

குழந்தை தொடர்ச்சியாக அழுததால் அவன் கண்கள் சிவந்திருந்தன. அப்போதைக்கு அவன் அழுகையை நிறுத்துவதாகவோ தூங்கப் போவதாகவோ தெரியவில்லை.

9. 10 ஆகி விட்டது.

'இந்நேரம் சினிமா விட்டிருப்பார்கள்: தங்கைக்கு என்ன பதில் சொல்வது?'

குழப்பத்துடன் குழந்தையை சோபாவில் படுக்க வைத்து விட்டு, முகத்தை அழுந்தத் துடைத்துக் கொள்வதற்காக பாலு சட்டைப் பையிலிருந்த கர்சீஃப்பை எடுக்க முற்பட்ட பொழுதுதான் அது நடந்தது: கர்சீஃப் தவறி குழந்தையின் நெஞ்சில் விழ, விருட்டென்று வலதுகையால் அதை எடுத்துக் கொண்ட குழந்தை கட்டை விரலுக்கும் ஆள் காட்டி விரலுக்கும் இடையே அதை ஆதாரமாகப் பிடித்துக் கொண்டு சுவாரஸ்யமாய்க் கட்டை விரலைச் சப்பத் தொடங்க...

அகர அழுகை கணப் பொழுதில் மறைந்து, வீட்டில் தீர்க்கமான அமைதி. பாலுவும் இந்துவும் நிம்மதி கலந்த ஆச்சரியத்தோடுபார்த்துக்கொண்டிருந்தபோதே மந்திரத்துக்குக் கட்டுண்ட மாதிரித் தூங்கிப் போனான் பிரபு. சினிமா செல்லும் அவசரத்தில் குழந்தையின் முக்கியமான தேவையைச் சொல்ல மறந்துபோன மல்லிகாவிடம் மல்லுக்கு நிற்கத் தயாரானாள் இந்து.



இலங்கையில் இன்றைய நிலை — I

— வாஸந்தி

‘தமிழனை அழிக்கப் பார்க்கிறான் தமிழன்!’

கொழும்பு விமான நிலையத்திலிருந்து முப்பது மைல் தொலைவில் இருந்த நண்பரின் வீட்டுக்கு அவரது காரில் செல்லும்போது கொழும்புத் தெருக்கள் பசுமையாக, சர்வ அமைதியாக, மகா சுத்தமாகத் தெரிந்தன.

''வெடி வெடித்த அன்று ஊரடங்குச் சட்டம் இருந்தது. பிறகு ஒரு கலவரமும் இல்லை. அமைதியாகத்தான் இருக்கிறது'' என்றார் நண்பர் சுப்பிரமணியம்.

''ஒப்பந்தத்திற்குச் சிங்களவர்களிடையே ரொம்ப எதிர்ப்போ?'' என்று கேட்டேன்.

''சிங்களத் தீவிரவாதிகளிடையே எதிர்ப்பு இருக்கத்தான் செய்கிறது. மந்திரி சபையிலேயே ஜயவர்த்தனாவுக்கு எதிர்ப்புத்தான். ஆனாலும் எத்தனை நாளைக்கு ஒரு கொரில்லாப் போரை அரசு சமாளிக்க முடியும்? பொருளாதாரம் சீர் குலைந்து விட்டது. வெளி நாட்டு ஆதரவு குறைந்து விட்டது. இந்தியாவின் அழுத்தமான வேண்டுகோளுக்கு இணங்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு அரசு வந்துவிட்டது. பொதுவாக ஜனங்களுக்கு நிம்மதி. இந்த ஒப்பந்தம் இந்தியாவுக்குப் பெரிய வெற்றி. ஜயவர்த்தனாவின் தைரியத்தையும் மெச்ச வேண்டும்.''

பிரதான சாலையில் நெடிதுயர்ந்த புத்தர் சிலை கருணை பொங்கும் பார்வையுடன் அபய ஹஸ்த முத்திரையுடன் நின்றிருந்தது. இந்த வீதியில் நடந்திருக்கும் இனக் கலவரங்களுக்கும் எனக்கும் சம்பந்தமில்லை என்கிற மாதிரி.

''சிங்களக்காரங்க தங்கமான மனுஷங்க'' என்றாள் சுப்பிரமணியத்தின் வீட்டில் உதவி செய்யும் புஷ்பா. (இந்திய வம்சாவளி, கொழும்புத் தமிழர்) ''ஆனா புத்த

• ஒப்பந்தப் பத்திரங்கள் பரிமாற்றம்.



பிக்குகளிடம் ரொம்ப மதிப்பு ஜனங்களுக்கு. மத குருமார் பேச்சை நம்பிச் சிலர் ஏடாகூடமா நடந்துக் கிட்டாலும் பொதுவா சிங்களவரை நம்பலாம். "83 கலவரத்தின் போது எங்க தோட்டத்திலே நான் ஒருத்திதான் தமிழச்சி. என்னை அவங்கதான் காப்பாத்தினுங்க."

புஷ்பாவைப் பொறுத்தவரை "ஜயவர்த்தனு ஒரு தெய்வம். மகாத்மா காந்திக்கு ஒப்பானவர். யாழ்ப்பாணத் தமிழரை நம்பவே கூடாது."

கொழும்புத் தமிழர்களுக்கு யாழ்ப்பாணத் தமிழர்களுடன் உடன்பாடு இல்லை என்பது நான் அங்கு போய்ச் சேர்ந்த விநாடியே புஷ்பாவின் மூலம் தெளிவாயிற்று.

"எல்லாப் பிரச்னைக்கும் அவங்களே தாம்மா காரணம். ஜனத்தொகையிலே 12 சதவிகிதமே இருக்கிறவங்களுக்குத் தனி நாடு என்ன வேண்டிக் கிடக்கு?"

"அதற்கான காரணங்களை நான் பிறகு விளக்குகிறேன்" என்று சொல்லிவிட்டு, கொழும்பில் தமிழ்நாட்டுப் பத்திரிகைகளுக்கு ஏஜெண்டாக இருக்கும் ஸ்ரீனிவாசனுடன், இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலத்தைப் பார்க்கச் சென்றேன். புகழ்பெற்ற முன்னாள் அமைச்சர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் புதல்வர்.

கோட்டைச் சுவர் போல் மிக உயர மதில் சுவர் சுற்றிய மாளிகை அவருடையது.

"83 இனக்கலவரத்துக்குப் பிறகு சுவரை உயர்த்தி விட்டேன்!" என்றார் பொன்னம்பலம் ஜூனியர்.

இந்திய ஒப்பந்தத்தைப் பற்றி என்ன நினைக்கிறார் என்று கேட்டேன்.

"இதைவிடச் சிறப்பானதாக ஓர் ஒப்பந்தம் இருக்க முடியாது" என்றார். "ரொம்ப திருப்தியளிக்கிற ஒப்பந்தம். உண்மையில் இந்த மாதிரி ஓர் அமைப்புக்காகத்தான் ஆரம்ப காலத்தில் நாங்கள் போராடினோம். அது மறுக்கப்பட்டதால் தனி ஈழம் கேட்டோம். இப்பவும் விடுதலைப் புலிகள் தனித்தமிழ் ஈழம் வேண்டுமென்கிறார்கள். ஆனால் ஜனங்கள் நிறைய அனுபவித்து விட்டார்கள். அவர்களுக்கு அமைதியும் சிதைந்து போன வாழ்வைப் புனர் உத்தாரணம் செய்ய நேரமும் வேண்டும். நாங்கள் நிறைய இளைஞர்களைப் பலி கொடுத்தாகி விட்டது. நடுத்தர வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இந்த ஒப்பந்தம் திருப்தியை அளித்திருக்கிறது. வடக்கையும் கிழக்கையும் இணைக்க ஒப்புக்கொண்டிருப்பது ஓர் இனிய ஆச்சரியம். ஏனென்றால் அதற்கு இரண்டு நாட்கள் முன்பு கூட ஜயவர்த்தன ஒருகாலும் அந்த இணைப்புக்கு ஒப்புக் கொள்ள முடியாது என்றிருக்கிறார். இது தமிழருக்குப் பெரிய வெற்றிதான்."

"இந்த ஒப்பந்தம் வெற்றி பெறும் என்கிற நம்பிக்கை உங்களுக்கு இருக்கிறதா?"

"வெற்றியடையச் செய்வது இப்பத் தமிழர் பொறுப்பு. கிழக்குப் பகுதியிலே நடக்கப் போகிற சர்வஜன வாக்கெடுப்பைப் பற்றிப் பயம் எல்லாருக்கும் இருக்கு. அது எமக்குச் சாதகமா இல்லாமல் போனால் பெரிய தோல்வி. 'நாங்கள் அப்பொழுதே சொன்னோம், கேட்டீர்களா?' என்பார்கள் விடுதலைப்புலிகள். 'உங்கள் கோரிக்கைக்கே ஆதாரமில்லை' என்று சிங்களவர்கள் சொல்வார்கள்."

"நிலைமையை எப்படிச் சமாளிக்க வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?"

"தமிழ் அரசியல் அமைப்புக்களிடையே ஒற்றுமை வேண்டும். கிழக்குப் பகுதியில் இருக்கும் முஸ்லிம் தமிழர்களின் நம்பிக்கையைப் பெற ஆவன செய்ய வேண்டும். அரசு செய்து வரும் சிங்களக் குடியேற்

• ஆயுதங்களை ஒப்படைத்து விடுவதாகப் பொதுக் கூட்டத்தில் அறிவிக்கிறார் பிரபாகரன்.



றத்தைத் தடுக்க வேண்டும். அதில் இந்திய அரசு கண்டிப்பாக இருக்க வேண்டும். என்னுடைய மிகப்பெரிய பயம் தமிழர்களிடையே ஒற்றுமை இல்லாததுதான். ஒருத்தனை அமுக்க இன்னொருத்தன் தயாராய் இருக்கான்.''

''இத்தனை அனுபவத்திற்கும் பிறகா?''

''இப்பத்தான் அதிகம் இருக்கும்.''

கிட்டத்தட்ட இதே மாதிரியான பயத்தை இந்தியன் ஹைகமிஷனர் தீக்ஷித் வெளியிட்டார்.

''ஒப்பந்தம் வெற்றியடையும் என்று நீங்கள் நம்புகிறீர்களா?'' என்று கேட்டதற்கு,

அப்படிப்பட்ட நம்பிக்கையுடன்தான் எந்த ஒப்பந்தமும் உருவாகிறது. ஆனால் இத்தனை விரைவாக எந்த அபிப்பிராயத்தையும் சொல்ல முடியாது. I keep my fingers crossed. ஒரு விஷயம் உறுதி. ஒப்பந்தத்தை வெற்றி பெறச் செய்ய வேண்டியது சம்பந்தப்பட்ட அனைவருக்கும் முக்கியம். ஜனங்கள் சோர்ந்திருக்கிறார்கள். அவர்களுக்கு அமைதி வேணும். குலைந்து போன சமுதாயத்தைத் திரும்ப நிர்மாணிக்க வேண்டும் என்கிற அக்கறை எல்லாத் தரப்பிலும் இருக்க வேண்டும். போராளிகளுக்கு நடுவே நிறைய உள் புகைச்சல் இருக்கிறது. ஒருத்தரை ஒருத்தர் தீர்த்துக் கட்டப் பார்ப்பார்கள்.''

''ஆயுதம் சரணடைய வேண்டிய நிலையில் தங்களுக்குப் பாதுகாப்புப் போய் விட்டதாக அவர்கள் நினைக்கலாம்.''

''அவர்கள் எல்லா ஆயுதங்களையும் சரண் செய்யமாட்டார்கள் என்று நிச்சயம் எல்லாருக்கும் தெரியும். நாங்களும் சற்று விட்டுக்கொடுத்து நிதானமாகப் போகிறோம். ரொம்பக் கண்டிப்புக் காட்டினால் நேர் மாறான விளைவுகள் ஏற்படலாம். அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தி, சரணடையச் செய்வதுதான் நம் நோக்கம். அதில் சிங்கள அரசுக்கு உதவுவதுதான் நம் வேலை. போர் நிறுத்தம் அமுல் செய்யப்படுகிறதா என்று பார்ப்பதும் நம் வேலை.''

''இந்தியாவுக்கு இது பெரிய பொறுப்பாகி விட்டதே!''

''பெரிய தலைவலி! ஆனாலும் என்ன செய்வது? அப்பாவி ஜனங்கள் தினம் தினம் கொலை செய்யப்படுவதைப் பார்த்துக் கொண்டு நாம் எத்தனை காலம் உட்கார்ந்திருக்க முடியும்? ஏற்கெனவே காலம் கடந்து விட்டது.''

''திடீரென்று ஒப்பந்தம் ஏற்பட்டது. என்கிறார்களே? போராளிகளைக் கலந்து பேசவில்லை என்கிறார்களே?''

''அதெல்லாம் தவறான கருத்து. ஒரு வருஷமாக மிகத் தீவிரமாக இதைப் பரிசீலித்து வருகிறோம். இனி தாமதிக்க முடியாது என்ற தருணம் வந்ததும் செயல்பட்டோம். முன் கூட்டி விஷயங்களைப் பகிரங்கப்படுத்து



அருள்வாக்கு

அம்பாளிடம் நாம் இன்னின்ன வேண்டும் என்று சொல்லிப் பிரார்த்திக்க வேண்டிய அவசியமே இல்லை. ''உனக்கு நான் சொல்லித்தான் தெரிய வேண்டுமா? ஆனாலும் மலயத்துவஜ பாண்டியனின் புத்திரியான ஹே மீனாக்ஷி! மனசில் உள்ள குறையை வாய்விட்டுச் சொல்லாவிட்டால் அது உள்ளுக்குள்ளே உறுத்திக் கொண்டேயிருக்கிறது. அதனால்தான் இப்படிப் பிரார்த்தனை பண்ணுகிறேன். உனக்குத் தெரியாததைத் தெரியப்படுத்துவதற்காக அல்ல; எனக்கு உள்ளே கருணைக் கிழங்கு மாதிரி அரிப்பதைக் கொஞ்சம் சமனப்படுத்திக் கொள்ளவே பிரார்த்தனை பண்ணுகிறேன்'' என்று நீலகண்ட தீக்ஷிதர், 'ஆனந்த ஸாகர ஸ்தவம்' என்கிற ஸ்தோத்திரத்தில் சொல்கிறார்.

நாம் கேட்காவிட்டாலும் அம்பாளை உபாசித்து விட்டால் அவளே அநேக அநுக்கிரகங்களைப் பண்ணுகிறாள். முதலாவதாக நல்ல புத்தி உண்டாகிறது. மனசில் நல்ல எண்ணங்கள் உண்டாகின்றன. நல்லதைச் செய்வதற்கான வழி புத்தியிலே பளீரென்று பிரகாசிக்கிறது. லோக க்ஷேமத்தைச் செய்வதற்கான திரவிய பலமும் தானே கிடைக்கிறது. எல்லாரிடத்திலும் சமமான அன்பு உண்டாகிறது. மனசில் இந்த அன்பு இல்லாமலே வாய்ப் பேச்சில் இன்று 'சகோதர சகோதரிகளே' என்று பிரசங்கம் பண்ணி சமத்துவத்தைப் பற்றி நிறையப் பேசுகிறோம். அம்பாளிடம் பக்தி பண்ணாத வரையில் இது அனுபவத்தில் வராத வாய்ச் சவடால்தான். புரளிதான். சாக்ஷாத் ஜகன்மாதாவைத் தெரிந்து கொண்டாலே, 'உண்மையாக அவள் ஒருத்திதான் இத்தனை பேருக்கும் அம்மா; லோகத்தில் உள்ள பசு, பட்சி உட்பட நாம் இத்தனை பேரும் அவள் குழந்தைகள்தான். அதனால் நாம் எல்லோரும் வாஸ்தவமாகவே சகோதர சகோதரிகள் என்ற உண்மையான அன்பு உணர்ச்சி உண்டாகிறது. அவளைத் தெரிந்து கொண்டால் அதன்பின் நமக்குள் வெறுப்பு, துவேஷம் வரவே வராது. தப்புக் கண்டுபிடிக்க வராது. தப்பு நடக்கிறபோது கூட அதைப் பரிவோடு திருத்துகிற மனப்பான்மை வருமே தவிர தப்பைப் பிரகடனம் பண்ணிச் சண்டையில் இறங்கத் தோன்றாது. அம்பாளை உபாசிப்பதால் லோகம் முழுக்க ஒரு குடும்பம் என்ற அன்பு உணர்ச்சி உண்டாகிறது.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

வது நல்லதில்லை.''

''யாழ்ப்பாணத் தமிழர்களின் கோரிக்கைகளும் ஒத்துழையாமையுமே அநாவசிய அத்துமீறல்கள் என்று கொழும்புத் தமிழர்கள் உள்படச் சொல்கிறார்களே!''

அவர்கள் அப்படித்தான் சொல்வார்கள். தங்கள் பிஸினஸைப் பாதுகாக்க வேண்டுமே! சிங்களவருக்கிடையே வாழ வேண்டிய கட்டாயம் அவர்களுக்கு. யாழ்ப்பாணத்தில் என்ன நடக்கிறது என்று அவர்களுக்குத் தெரியாது. யாழ்ப்பாணத் தமிழர்களின் துயரங்கள் உண்மையானவை. அவர்களை, முக்கியமாக இளைஞர்களைப் பாதிக்கும்படியாக நிறைய விஷயங்கள் தொடர்ந்து நடந்துவிட்டன. அதனால்தான் ஆயுதமேந்த வேண்டிய நிலைக்குச் செல்ல நேர்ந்தது.''

''அரசியல்வாதிகள் முப்பத்தைந்து வருஷங்களில் செய்ய முடியாததை ஆயுதமேந்தியதால் நாலு வருஷங்களில் போராளிகள் சாதித்து விட்டார்கள் என்கிறார்களே!''

''அது உண்மைதான். ஆனால் வன்முறையே வாழ்வாகி விடக்கூடாது என்று ஜனங்களுக்கே கவலை இருக்கிறது. அதை உணர்ந்து அவர்கள் இனி ஜனநாயக முறையில் செயல்படுவார்களானால் நல்லது.''

''கிழக்குப் பகுதியில் இன்னமும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் நடந்து வருகிறது என்கிறார்களே? சர்வஜன வாக்கெடுப்பில் தமிழர்களுக்கு அது பாதகமாகப் போகுமே?''

''அது எங்கள் கவனத்திற்கு வந்திருக்கிறது. நாங்கள் அரசுடன் நடவடிக்கை எடுக்கிறோம்.''

ஒப்பந்தம் வெற்றிபெற வேண்டும் என்கிற கவலை எல்லாரையும் விட தீக்ஷித்துக்குத்தான் அதிகம்.

''சிங்கள இனத்தாரின் உயர்வு மனப்பான்மையும், தாங்கள்தான் இந்த நாட்டு பூமி புத்திரர்கள் என்கிற எண்ணமும்தான், சிறுபான்மை இனமான தமிழர்கள் மேல் அவர்கள் காட்டி வரும் அடக்கு முறைக்குக் காரணம்'' என்றார் குமாரி ஜெயவர்த்தன. குமாரி, சிங்களவர் கொழும்பு சர்வகலாசாலையில் முன்பு புரொஃபஸராக இருந்தவர். இப்பொழுது 'மனித உரிமை'ப் போராளி. மிருதுவாகப் பேசினாலும் தீர்க்கமான கருத்துக்களைத் தெரிவிக்கிறார்.

''அரசாங்க உயர் பதவியிலெல்லாம் தமிழர்கள்தான் இருந்தார்கள். பெரிய தொழிலதிபர்கள் தமிழர்கள். சிங்கள இனமே இவர்களால் நசுக்கப்படுகிறது என்ற எண்ணத்தைப் பௌத்த சிங்களத் தீவிரவாதிகள் பரப்பியது அரசியல்வாதிகளுக்கு உதவியாக இருந்தது. அதனால் கையாளப்பட்ட இன ஒடுக்கு முறைகள் மன்னிக்க முடியாதவை.''

''இந்த ஒப்பந்தத்தைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?''

''மிகவும் வரவேற்கப்பட வேண்டியது. முதல் முறையாக அரசு சாஸனத்தில் ஸ்ரீலங்கா ஒரு பல இன சமூக அமைப்பு என்பது ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. தமிழர்களின் துயரங்கள் உண்மையானவையாக இருந்தாலும் அவர்களது ''தனித் தமிழ் ஈழ''க் கோரிக்கையை நான் என்றும் ஒப்புக் கொண்டதில்லை. அது மேடையில் முழங்க ரசமாக இருக்கலாம்; ஆனால் யதார்த்தத்தில் நடக்காத காரியம்.''

''இந்த ஒப்பந்தம் வெற்றி பெறும் என்று நினைக்கிறீர்களா?''

''வெற்றிபெற வேண்டும். இரு இனங்களுக்கும் அடிப்படையில் எந்த வித்தியாசமும் இல்லை. எல்லாரும் இந்தியாவிலிருந்து இங்கு வந்துகுடியேறியவர்கள். இருவருக்கும் வருடப்பிறப்பு ஒரே நாள். சாப்பாட்டு விஷயங்களிலும் வித்தியாசமில்லை. அநேகம் வார்த்தைகள் இரண்டு மொழிகளுக்கும் பொதுவானவை.''

''புத்தராலயத்தில் விஷ்ணு சிலை இல்லாமல் இருக்காது'' என்றார் அங்கிருந்த தமிழ்ப் பெண்மணி.

''புத்தரே ஒரு ஹிந்துதானே?'' என்று நான் சிரித்தேன்.

''புத்தர் ஹிந்துவா?'' என்றார் அவர் வியப்புடன்.

அந்தக் கேள்வியைக் கேட்டு நானும் ஆச்சரியப்பட்டுப் போனேன்.




ஒருவர்: பிறந்த நாள் அன்னிக்குக் குழந்தையைத் தலைவர்கிட்டக் கொடுத்து ஆசீர்வாதம் பண்ணச் சொன்னேன்...

மற்றவர்: அப்புறம்...?

ஒருவர்: வீட்டுக்கு வந்து சேரில உட்கார்ந்த குழந்தை எழுந்திருக்கவே மாட்டேங்குது!

— தேனி. எஸ். மாரியப்பன்



தேர்க்கால்

போட்டிக் கதை — 6

மலர்விழி இலக்கில்லாமல் ஆற்றுப் படுகையில் தெரிந்த மணலே வெறித்துக் கொண்டிருந்தாள்.

அறிவரசன் கையில் கிடைத்த ஏதோ ஒரு தர்வரத்தைப் பிய்த்து உதறிக் கொண்டிருந் தான்.

"நல்லா யோசிச்சுப் பாருங்க, அர்ஸ்!"

"இதோ பாரு, மலர். என் முடிவை நான் சொல்லிட்டேன். நீ திரும்பத் திரும்ப முட்டாள்தனமாகப் பேசறதில அர்த்த மில்லே."

"எது முட்டாள்தனம்? காதலிச்சவரைக் கல்யாணம் பண்ணிக்க விரும்பறதா?"

"நீயும் நானும் இந்த வருஷம் படிப்பு முடிஞ்சதும் பெயருக்குப் பின்னலை எம். ஏ. போட்டுச் சமமாயிடலாம். ஆனல் நமக்கு இடையே சமன் செய்ய முடியாத ஒரு பெரிய விஷயமிருக்கு... பணம்."

"இதெல்லாம் என் பின்னல் சுத்தறதுக்கு முன்னலேயே யோசிச்சிருக்கணும்."

"யோசிச்சுத்தான் சுத்தினேன். காதல் வேறே. கல்யாணம் வேறே."

"உளறுதீங்க."

"உண்மையைத்தான் சொல்றேன். நாம ப்ராக்டிகலா யோசனை பண்ணணும். உனக்கு என்னைப் பிடிச்சிருந்தது. காரணம் என்னேட பர்சனலிடி. எனக்கும் உன்னைப் பிடிச்சிருந்தது. காதலிச்சேன். ஆனல் அது கல்யாணம் பண்ணிக்கிற முடிவோடே இல்லே."

"உன்னை நம்பி நான் எல்லாத்தையும் இழந்துட்டேன்!"

"என்னத்தை இழந்துட்டே? டோன்ட் பி ஸில்லி. காதல்ல கொடுக்கிறவங்களுக்கும் சந்தோஷம் திரும்பக் கிடைக்கும். இழக்கிற துக்கு எதுவுமே இல்லே."

"ஐ லாஸ்ட் மை செஸ்டிடி."

"யூ மீன் கற்பு, புவர் கேர்ள். கண்ணகி

—அ. குமார்—

காலத்துக்குப் போய்ட்டியே. நாடு இருபத்தோராம்நூற்றாண்டை நோக்கிப்போய்க்கிட்டிருக்கும்மா...''

''உங்கப்பன் கிட்டே சொல்லி மீட்டிங்கில் பேசச் சொல்லு. ஏமாந்தவங்கள்லாம் கைதட்டுவாங்க!''

அவள் வீட்டிற்குள் நுழைந்ததும் அம்மாவின் கேள்வி தாக்கியது. ''ஏண்டி, இவ்வளவு நேரம்?''

''ஸ்பெஷல் கிளாஸ்.''

''என்னமோ... இனிமேல் சீக்கிரம் வரப் பாரு.''

மலர்விழி பாத்ரூமுக்குப் போய் முகம் கழுவிவிட்டு, சேரில் உட்கார்ந்தாள். ஃபேன் காற்று வெப்பமாய்ச் சுழன்றது.

உள்ளேயும் அக்கினி.

அம்மா காப்பி கொண்டு வந்தாள்.

''தெனமுமா ஸ்பெஷல் க்ளாஸ்?''

காப்பி குடித்துக் கொண்டிருந்தவள் சட்டென்று முகத்தை நிமிர்த்திப் பார்த்தாள்.

''இனிமே இருக்காது.''

அனிச்சையாய்க் கண்கள் பனித்துக் கலங்கின. முகத்தைக் குனிந்து காப்பி குடித்தாள்.

பாம்பின் கால் மாதிரியே பெண்ணின் மனசும் — தாய்க்குப் புரிந்து போயிற்று.

மென்மையாகமுகவாயைக்கையில்தாங்கி நிமிர்த்தினாள்.

''உங்கப்பா சாகிற போது உனக்கு எட்டு வயசு. விவரம் தெரியாத பொம்பளையா இருந்தால் அவர் விட்டுட்டுப் போனதையெல்லாம் வித்துட்டு வீதிக்கு வந்திருப்போம். என் சொந்த முயற்சியில் சொத்துக்களையும் பாதுகாத்து, வருமானத்தையும் தேடி, உன்னையும் இந்த அளவு உருவாக்கியிருக்கேன். சொல்லுடி... உனக்கு என்ன ஆச்சு?''

''ஒண்ணுமில்லே.''

''சொல்லுடி.''

''அதான் ஒண்ணுமில்லேன்னு......''

''நீ சொல்லலேன்னாலும் என்னாலத் தெரிஞ்சுக்க முடியும். ஆனா அது நல்லா இருக்காது.மகளைப்பத்தித்தாய்விசாரிக்கறது ரொம்பக் கேவலமாக இருக்கும். சொல்லு.''

ஊற்றுக்கண் நீராய் அவளின் சோகம் பிய்த்துக் கொண்டது. முகத்தைப் பொத்திக் கொண்டு அழுதாள்.

அம்மா அவள் அழுது முடிக்கும் வரையில் காத்திருந்தாள்.

பிறகு —

மேலும் எதுவும் கேட்காமல் உற்று நோக்கிக் கொண்டிருந்தாள்.

அவள் சொல்லத் தொடங்கினாள்.

''அம்மா... என்னை மன்னிச்சிடும்மா. நான் ஒருத்தனை நம்பி ஏமாந்துட்டேன்...''

''மலர்விழி, என்ன சொல்றே?''

''நிஜம்தாம்மா. உன் திறமையும் உழைப்பும் எனக்கு இந்தப் படிப்பைக் கொடுத்தது. ஆனால் நான் இந்தப் படிப்பு தந்த தைரியத்தில் எனக்குப் பிடித்த, காலேஜ்மேட்டை விரும்பினேன். அவனும் என்னை விரும்பறதாச் சொன்னான். ஆனால் இப்போ என்னைக் கல்யாணம் பண்ணிக்க முடியாதுன்னு சொல்லிட்டான்.''

''ஏன்?''

''அந்தஸ்து வித்தியாசம்!''

''இப்போதான் அது தெரியுதாம்மா? யார் அவன்?''

''அறிவரசன்.''

''யாரு?''

''தமிழ்நம்பியோட பிள்ளை அறிவரசன்.''

''அடிப்பாவி, தமிழ்நம்பி எம். எல். ஏ. வாச்சே! ஜனங்க தண்ணியில்லே, ரோடில்லே, ரேஷன் கிடைக்கலேன்னு சொல்றதையே காது கொடுத்துக் கேட்க மாட்டான். அவன் காதுல நம்ம குரல் எப்படிடி கேட்கப் போறது?''

ஆற்றாமையுடன் அவள் சொன்னாள்.

ஆண் பிள்ளை தைரியக்காரியான அம்மாவே அங்கலாய்த்துக் கொண்டது அவளை உசுப்பி விட்டது.

நிமிர்ந்தாள்.

''ஏன் கேட்காது? நான் கேட்க வைப்பேன்'' என்றாள்.

பட்டையாகக் கட்சிக் கலர்களை எல்லாம் உபயோகித்து எழுதப்பட்ட பெயர்ப் பலகை — 'தமிழ்நம்பி எம். எல். ஏ. 'உள்ளே'' என்றது.

கன்னத்தில் கைவைத்தவர், கக்கத்தில் தோல்பை வைத்தவர், கையில் சைக்கிள் செயினால் காய்ப்புக் காய்த்தவர், வட்டம், தொகுதி, தொண்டர் என்று நிறைய பேர் வாசலில் சிதறி இருந்தனர்.

மருந்துக்கொரு பெண்ணாக மலர்விழி நின்றிருந்தாள்.

உள்ளே இருந்து வந்த பி. ஏ., ''ஆலந்தூர் அண்ணே நீங்க போங்க'' என்றார்.

ஆலந்தூர் அண்ணன் எழுந்து நின்றார். ஆஜானுபாகு. தினமும் தண்ணியடித்து நிறைய தொந்தி போட்டிருந்தார். தோள் துண்டைச் சரி செய்து கொண்டு உள்ளே நுழைந்தார்.

மலர்விழி பி. ஏ. வை நெருங்கி, ''நான் பெர்சனல் விஷயமா எம். எல். ஏ. வைப் பார்க்கணும்'' என்றாள்.

''இதோ பாரும்மா. வந்திருக்கறவங்கள்லாம் கட்சிக்காரங்க. அவங்களைச் சந்திச்ச பிறகுதான் உங்களைப் பார்க்க முடியும்.''

வாசல் கேட்டுக்கு வெளியே வந்து நின்ற கார் ஹாரனடித்தது.

பி. ஏ. குதிரைப் பாய்ச்சலில் கேட்டை நெருங்கிப் பார்த்துவிட்டு, பவ்யமாக வணங்கினார்.

''...இருக்கார், உங்களுக்காகத்தான் காத்துக்கிட்டிருக்கார். ஒரு நிமிஷம்...'' என்று வீட்டிற்குள் ஓடினார்.

சரியாக ஐம்பது விநாடிகளில் பி. ஏ. பின்தொடர, தமிழ்நம்பி வெளிப்பட்டார்.

காரில் ஏறிக் கொண்டார்.
கார் புறப்பட்டுப் போய் விட்டது.

மலர்விழியும் வெளியேறினாள்.
பலனில்லை..
தமிழ்நம்பியைப் பார்ப்பது சுலபமில்லை.

பலமாக அடித்த ஓர் அரசியல் காற்றில் திடீர் அமைச்சராகி விட்ட தமிழ் நம்பி, நிரந்தரப் புன்னகை மன்னனாக அன்று பொதுமக்களிடமிருந்து மகஜர்கள் வாங்கிக் கொண்டிருந்தார்.

இருபத்தோராம் நூற்றாண்டின் இயந்திர வேகத்தில் மகஜர்கள் பெற்றுக் கொள்ளப் பட்டன.

மலர்விழி தன் மகஜரை பி. ஏ. விடம் நீட்டினாள்.

அத்தனை பரபரப்பிலும் அவர் வாய் விரியச் சிரித்து. ''அடடே, நீங்களா? அப்புறமா நீங்க தலைவரோட வீட்டுப் பக்கமா வரவேயில்லையே! அன்னிக்கு அவ சரமாக் கார்ல ஏறிப் போனவர் அந்த அவசரத்திலேயும் உங்களைப் பார்த்துட்டு... அவங்களை முதலிலேயே உள்ளே அனுப்பக் கூடாதான்னு என்னைக் கடிஞ்சுக்கிட்டார்.''

அவள் மௌனமாக மேடையிலிருந்து இறங்கினாள்.

மலர்விழி கையிலிருந்த புத்தகத்தை மனத்தில் நுழைக்க முடியாமல் சிரமப்பட்டுக் கொண்டிருந்தாள்.

''சார்'' — வாசலிலிருந்து குரல் வந்தது.

யாரோ வெளியாட்களாகத்தான் இருக்க வேண்டும். அந்த வட்டாரத்துக்காரர்கள் அங்கே இரண்டு பெண்கள் மட்டுமே இருப்பதை அறிவார்கள். சாரென்று கூப்பிட மாட்டார்கள்.

''யாரு?''

கேள்வியைத் தொடர்ந்து உள்ளே வந்து —

''வணக்கம்'' என்றார், தமிழ்நம்பியின் பி.ஏ.

மலர்விழி திகைத்தாள்.

மகஜர்களெல்லாம் மந்திரிகளை எட்டுமா?

ஓ, சொந்த விஷயமென்பதால் கவனிக்கப்பட்டு விட்டதோ?

''வணக்கம், வாங்க உட்காருங்க.''

வந்தார், உட்கார்ந்தார்.

''உங்க மகஜரை அமைச்சர் படிச்சுப் பார்த்தாரும்மா. 'பர்சனல் விஷயமாமே! இன்னிக்குச் சாயங்காலம் ஆறு மணிக்கு வீட்டுக்கு வரச் சொல்றார், பேசணுமாம்.''

''சரிங்க வர்றேன்.''

''அப்போ, நான் வர்றேன்மா.'' விடை பெற்றுக் கொண்டு வெளியேறினார்.

உள்ளறையிலிருந்த அம்மா சட்டென்று வெளியே வந்தாள்.

''மலர், என்னடி இதெல்லாம்?''

''அறிவரசன் என்னைக் கைகழுவியதை

ஜோக்

எழுதுங்கள் பரிசு ரூ. 200/-



உலகில் எத்தனை மாமியார்களும் மருமகள்களும் ஒற்றுமையாகப் பிரச்னையின்றி வாழ்கிறார்களோ அந்த அளவுக்கே சண்டை போட்டுக் கொண்டும் பிரச்னைகளைப் பெரிதுபடுத்திக் கொண்டும் வாழ்கிற மாமியார் — மருமகள்களும் உண்டு. அதனால் தானே மாமியார் — மருமகள் ஜோக்குகளும் இவ்வளவு பிரபலமாகியுள்ளன! கீழே வெற்றிடத்தில் உங்கள் சொந்தக் கற்பனையில் உதித்த ஒரு மாமியார் மருமகள் ஜோக் எழுதுங்கள். இந்த அரைப்பக்கத்தை முழுதுமாகக் கத்தரித்து உறையின் மீது ''மாமியார் — மருமகள் ஜோக்'' என்று குறிப்பிட்டு அனுப்புங்கள். பிரசுரமாகும் ஜோக்குகளுக்குப் பரிசுத் தொகை சமமாகப் பங்கிட்டு வழங்கப்படும். விலாசத்தைப் பூர்த்தி செய்ய மறவாதீர்கள்.

முடிவு தேதி: 14.10.87

என் பெயர்: . . . .

விலாசம்: . . . .

. . . .

ஸாஃப்ட் அன்ட் ஸில்க்கியின் பெருகிவரும் கூட்டத்திலே சேருங்கள்.



ஸா∴ப்ட் அன்ட் ஸில்க்கி ஹேர் ரிமூவிங் லோஷன். பெண் — அழகுப் படைப்பாளர் லக்மே அளிப்பது.

ஏராளமான பெண்கள் ஸா∴ப்ட் அன்ட் ஸில்க்கி ஹேர் ரிமூவிங் லோஷனின் பெருகிவரும் கூட்டத்திலே சேர்ந்து வருகிறார்கள். இதில் வியப்பில்லையே! காரணம், ஸா∴ப்ட் அன்ட் ஸில்க்கி லோஷன் உபயோகிப்பதற்கு மிகவும் வசதியானது.

இது சீராகவும் எளிதாகவும் பரவுகிறது.

அதாவது, இதிலே சள்ளை இல்லை, தொல்லை இல்லை. அதைவிடவும் ஒன்று: இதை தயாரித்தவர்கள் லக்மே! இதே லக்மேயிடம்தான், அழகு மற்றும் சருமப் பராமரிப்பிற்காக பெண்கள் முழு நம்பிக்கை வைத்துள்ளனர்.

வாருங்கள் நீங்களும் ஸா∴ப்ட் அன்ட் ஸில்க்கியின் பெருகி வரும் கூட்டத்திலே சேருங்கள்.

பட்டுப்போன்ற மென்மையை



லக்மே

விவரமாக மகஜரில் கொடுத்திருந்தேன். அது தான் தமிழ்நம்பி வரச் சொல்லியிருக்கார்.''

''பெரிய இடத்துப் பொல்லாப்பு...''

''அதெல்லாம் ஒண்ணுமில்லே, முயற்சி இப்பதான் கைகூடி வருது. என்ன நடக்குதுன்னு பார்ப்போம். பொறுமையா இரு.''

''எனக்கென்னவோ பயம்மா...''

''தலைக்கு மேலே வெள்ளம். ஜாணென்ன. முழமென்ன? நீந்திப் பார்க்கிறேன்.''

மலர்விழி தயக்கத்துடன் நுழைந்த போது தமிழ்நம்பியின் பி. ஏ. எதிர்கொண்டார்.

''வாங்கம்மா. அமைச்சர் உங்களுக்காகக் காத்திருக்கார்.

உள்ளே நுழைந்ததும் தமிழ்நம்பி புன்னகைபுரிந்தார்.

''உட்காரும்மா.''

உட்கார்ந்தாள்.

''எல்லாத்தையும் படிச்சுப் பார்த்தேம்மா. உனக்கு ஏற்பட்ட நிலைமையை எண்ணி ரொம்ப வருத்தப்படறேன். சில இடங்களிலே நீ எழுதியிருந்த வாசகங்கள் ரொம்பக் கடுமையா இருந்தது. அதுக்காக நான் கோபப்படலே. உன்னுடைய நிலைமையில நான் இருந்திருந்தா அதை விட மோசமாத்தான் எழுதியிருப்பேன்...''

மலர்விழி திகைத்துப் போனாள்.

அறிவரசனின் அப்பாவா இவர்! ஆளுங்கட்சியின் மந்திரியா இவர்?

பொறுப்பான பிரஜையாகப் பிரச்னையை உணர்ந்து, அவளின் கொதிப்பை ஒரு யதார்த்த கோணத்தில் பார்த்துப் புரிந்து கொண்டு ஆறுதலாய்ப் பேசியது வியக்க வைத்தது.

''ஈன்ற பொழுதின் பெரிதுவக்கிறது தாய் மட்டுமல்ல, தந்தையும்தான்! என் மகன் படிப்பில்தான் புத்திசாலியே தவிர ஒழுக்கத்தில் தாழ்ந்தவன்னு தெரிந்தபோது நான் குறுகிப் போனேன். இதுக்கெல்லாம் நான் பொறுப்பான நடவடிக்கை எடுத்தே ஆகணும். பாதிக்கப்பட்ட ஒரு பசுவின் முறையீட்டுக்காக, கன்றைக் கொன்ற தன் மகனையே தேர்க்கால்ல வச்சு நசுக்கினானே அந்த மனுநீதிச் சோழன்... அவனைப் போல்த்தான் நானும் ஒரு தீர்ப்பை வழங்கணும். ஆனா... என் மகனைத் துன்புறுத்தறதால பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு மகிழ்ச்சி வராது. அதனால அவனால பாதிப்புக்குள்ளான பெண்ணையே அவன் திருமணம் பண்ணிக்கிறதுதான் சரியான நடவடிக்கையாக இருக்க முடியும்...''

நிஜமா? இதெல்லாம்?

எதையெல்லாம் அவளாகக் கேட்கநினைத்தாளோ, எதையெல்லாம் இனி நடக்க வேண்டுமென்று நினைத்தாளோ, அதையெல்லாம் அவரே நடத்தவிருப்பதாய்ச் சொல்லக் கேட்கிற இந்தக் கணம் மாயையில்லையே! நிஜம்தானே?

அணை உடைத்துக் கொண்ட வெள்ளமாய் மனத்துக்குள் ஓர் அலை அடித்தது.

''ஆனால் இதில் ஒரு சிக்கல்...''

''என்ன?''

''போன வாரம்தான் என் மகனுக்குத் திருமணம் நிச்சயமாச்சு. பத்திரிகையெல்லாம் அச்சடிச்சாச்சு. வர்ற நாலாம் தேதி அவனுக்குக் கல்யாணம்.''

அதிர்ந்தாள்.

வானமே கையில் பிடிபட்டு விட்ட மாதிரி தோன்றியது மாயைதானா?

''இவ்வளவு நேரம் நீங்களே நியாயத்தை உணர்ந்து பேசிவிட்டு இப்போது அவருக்குக் கல்யாணம்நிச்சயமாயிடுச்சுன்னு சொல்றீங்களே!''

''நான் ரொம்ப வருத்தப்படறேன். உனக்காக நான் ரொம்ப வேதனைப்படறேன். நீ கொஞ்சம் கால தாமதம் செஞ்சிட்டே!''

''இல்லை. நான் உடனே உங்களை வந்து பார்த்தேன்!''

''இல்லேம்மா. மனுநீதிநாள் வர்றவரை காத்திருந்து மகஜர் கொடுத்ததுக்குப் பதிலா முன்னாடியே என்னை வந்து பார்த்து விவரங்களைச் சொல்லியிருந்தா உன் பிரச்னையைச் சுலபமாத் தீர்த்திருக்கலாம்.''

''வந்து பார்த்தேன். உங்க பி. ஏ. வுக்குக் கூடத் தெரியும். ஆனா உங்களைச் சந்திக்க முடியலே.''

''அப்படியா? இயற்கை சதி செஞ்சிடுச்சும்மா. இப்போ எல்லாமே முடிஞ்சு போச்சே.''

''இப்பக் கூட உங்க மகன் என்னைக் கல்யாணம் பண்ணிக்கறதுதான் நியாயம்னு உங்களுக்குப் புரியலியா?''

''அதுதான் நீ தாமதமா வந்திருக்கேன்னு சொல்றேம்மா. உங்க மகனால காதலிச்சுக் கைவிடப்பட்ட அபலைன்னு முதல்லே வந்து நின்ன பெண்ணையே அவனுக்கு நிச்சயம் பண்ணி ஏற்கெனவே ஒரு நீதி வழங்கிட்டேன். இப்போ ரெண்டாவதா நீ வந்திருக்கே! உனக்கென்ன தீர்ப்பு வழங்கறதுன்னு எனக்கே புரியலேம்மா!''

பட்டமரத்தை இடியும் தாக்கிய மாதிரி அவர் சொன்ன வார்த்தைகள் அவளின் நொந்து போன மனத்தை மேலும் பிசைந்தன.

''என்னை மன்னிச்சுடும்மா. என் நிலைமையை விளக்கிட்டேன்...'' என்று சொன்னபடி எழுந்து கொண்டார்.

நம்பிக்கையில் மட்டுமே எதிர்காலத்தை வைத்துக் காத்திருக்கும் அர்த்தமற்ற தவம் கூட இனி அவசியமில்லை என்பது புரிந்து போயிற்று.

எழுந்து கைகூப்பிவிட்டு வெளியேறினாள்.

கேட்டைக் கடந்து ரோட்டில் நடந்தாள்.

இவளைத் தவிர வேறு பெண்ணோடும் அறிவரசனுக்குத் தொடர்பு இருந்ததாய்ச் சொன்னது உண்மையாக இருக்கும். ஆனா பாதிக்கப்பட்டவளையே மருமகளாய்த் தேர்ந்தெடுத்தேன் என்பது பொய். அறிவரசன் கணவனாய் வாய்க்காதது நிச்சயம் அதிர்ஷ்டம்தான்!

அவன் யோக்கியதாம்சங்களில் தமிழ்நம்பியின் பிள்ளை.

எதிர்காலத்தில் மந்திரியாவான்.



அத்தியாயம் 18

துரோகத்தில் எது கொடியது?

பழந்தமிழ்நாட்டின் சரித்திரத்தைப் படித்தவர்கள் அந்நாளில் பெண்மணிகள் பலர் சமூக வாழ்வின் முன்னணியில் இருந்திருப்பதை அறிவார்கள். மன்னர் குலத்தில்பிறந்த மாதரசிகள் மிகவும் கௌரவிக்கப் பட்டார்கள். சோழ குலத்தில் பிறந்த பெண்மணிகளும் வாழ்க்கைப்பட்ட பெண்மணிகளும் சொந்தமாகச் சொத்துரிமை பெற்றிருந்தார்கள். ஒவ்வொருவருக்கும் தரவாரியாகக் கிராமங்களும் நன்செய் புன்செய் நிலங்களும் கால்நடைச் செல்வமும் இருந்தன. இந்த உடைமைகளை அவர்கள் எவ்வாறு உபயோகித்தார்கள் என்பதை முக்கியமாகக் கவனிக்க வேண்டும். பலர் ஆலயங்களில் தங்கள் பெயரால் பலவிதத் திருப்பணிகள் நடைபெறுவதற்குச் சொத்துக்களை உபயோகப்படுத்தினார்கள். திருவிளக்கு ஏற்றுதல், திருமாலை புனைந்து சாற்றுதல், தேசாந்திரிகளுக்கும் சிவனடியார்களுக்கும் திருஅமுது செய்வித்தல் — ஆகியவற்றுக்குப் பல அரசகுல மாதர்கள் நிவந்தங்கள் ஏற்படுத்திச் சிலாசாஸனம் அல்லது செப்புப் பட்டயத்தில் அவற்றைப் பொறிக்கும்படி செய்தார்கள்.

அரண்மனைப் பெண்டிர் ஆலயத் திருப்பணி செய்தல் அந்த நாளில் பொது வழக்காயிருந்திருக்க, சுந்தர சோழரின் அருமைப்புதல்வி குந்தவைப் பிராட்டி மட்டும் வேறொரு வகை அறத்துக்குத் தம் உடைமைகளைப் பயன்படுத்தினார். நோய்ப்பட்டிருந்த தம் தந்தையின் நிலையைக் கண்டு இரங்கியதனால்தானோ, என்னமோ, அவருக்கு நாடெங்கும் தர்ம வைத்திய சாலைகளை நிறுவ வேண்டும் என்னும் ஆர்வம் உண்டாயிற்று. பழையாறை



யில் பராந்தக சக்கரவர்த்தியின் பெயரால் ஓர் ஆதுரசாலை ஏற்படுத்தியிருந்ததை முன்னமே பார்த்தோம். அதுபோலவே தஞ்சையில் தன் தந்தையின் பெயரால் ஆதுரசாலை அமைப்பதற்குக் குந்தவைதேவி ஏற்பாடு செய்திருந்தார். இந்த விஜயதசமி தினத்தில் அந்த ஆதுரசாலையை ஆரம்பிக்கவும் அதற்குரிய தான சாஸனங்களை எழுதிக் கொடுக்கவும் ஏற்பாடாகியிருந்தது.

தஞ்சைக் கோட்டைக்கு வெளியேயுள்ள புறம்பாடியில், பெருமாள் கோயிலுக்கு எதிர்ப்பட்ட கருட மண்டபத்தில், 'சுந்தர சோழ ஆதுர சாலை'யின் ஆரம்ப வைபவம் நடந்தது. திருமால் காக்கும் தெய்வமாதலாலும், கருடாழ்வார் அமுதம் கொண்டு வந்தவராதலாலும், விஷ்ணு கோயிலையொட்டிய கருட மண்டபத்தில் குந்தவைப் பிராட்டி, ஆதுர சாலையை ஏற்படுத்தி வந்தார். இந்த வைபவத்திற்காக, தஞ்சை நகர மாந்தரும் அக்கம் பக்கத்துக் கிராமவாசிகளும் கணக்கற்றவர்கள் கூடியிருந்தார்கள். ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் அலங்கார ஆடை ஆபரணங்கள் பூண்டு கோலாகலமாகத் திரண்டு வந்திருந்தார்கள். சக்கரவர்த்தியின் உடன் கூட்டத்து அமைச்சர்களும் பெருந்தர சிறுதர அதிகாரிகளும் சிலா சாஸனம் பொறிக்கும் கல் தச்சர்களும் செப்புப் பட்டயம் எழுதும் விசுவகர்மர்களும் அரண்மனைப் பணியாளர்களும் ஏராளமாக வந்து கூடியிருந்தார்கள். தாரை, தப்பட்டை முதலிய வாத்தியங்களை எட்டுத் திசையும் நடுங்கும்படி முழங்கிக் கொண்டு வேளக்காரப் படையினர் வந்தார்கள். தஞ்சைக் கோட்டையின் காவல் படை வீரர்கள் வாள்களையும் வேல்களையும் சுழற்றி 'டணார்' 'டணார்' என்று சத்தப்படுத்திக் கொண்டு வந்தார்கள். பழுவேட்டரையர்கள் இருவரும் யானை மீதேறிக் கம்பீரமாக வந்தார்கள். இளவரசர் மதுராந்தக தேவர் வெள்ளைப் புரவியின் மேல் ஏறி உட்காரத் தெரியாமல் உட்கார்ந்து தவித்துக் கொண்டு வந்து சேர்ந்தார். இளவரசி குந்தவைப் பிராட்டியும் அவருடைய தோழிகளும் முதிய அரண்மனை மாதர் சிலரும் பல்லக்கில் ஏறிப் பவனி வந்தார்கள்.

இன்னொரு பக்கமிருந்து பழுவூர் இளைய ராணி நந்தினியின் பனை இலச்சினை கொண்ட தந்தப் பல்லக்கும் வந்தது.

அரண்மனை மாதர்களுக்கென்று ஏற்படுத்தியிருந்த நீலப்பட்டு விதான மிட்ட இடத்தில் குந்தவை தேவியும் பழுவூர் ராணியும் மற்ற மாதர்களும் வந்து அமர்ந்தார்கள்.

பிறகு, பெரிய பழுவேட்டரையர் சமிக்ஞை செய்ததின் பேரில் வைபவம் ஆரம்பமாயிற்று. முதலில் ஓதுவா மூர்த்திகள் இருவர் ''மந்திரமாவது நீறு'' என்ற தேவாரப் பதிகத்தைப் பாடினார்கள். யாழ், மத்தளம் முதலிய இசைக் கருவிகளின் ஒத்துழைப்புடன் மிக இனிமையாகப் பாடப்பட்ட அந்தப் பாடலைக் கேட்டு மக்கள் மெய் மறந்திருந்தார்கள். அந்தப் பெரிய ஜனக் கூட்டத்தில் அப்போது நிசப்தம் நிலவியது.

ஆனால் அரண்மனைப் பெண்டிர் அமர்ந்திருந்த இடத்தில் மட்டும் மெல் லிய குரலில் இருவர் பேசும் சத்தம் எழுந்தது. பழுவூர் இளையராணி நந்தினி குந்தவையை நெருங்கி உட்கார்ந்து, ''தேவி! முன்னொரு காலத் தில் சம்பந்தப் பெருமான் இந்தப் பாடலைப் பாடித் திருநீறு இட்டுப் பாண்டிய மன்னரின் நோயைத் தீர்த் தாரல்லவா? இப்போது ஏன் இந்தப் பாடலுக்கு அந்தச் சக்தி இல்லை? பாட லுக்குச் சக்தியில்லா விட்டாலும் திரு நீற்றுக்கும் சக்தி இல்லாமற்போய் விட்டதே? மருந்து, மூலிகை, மருத்து வர், மருத்துவசாலை, இவ்வளவும் இல்லாமல் இக்காலத்தில் முடியவில் லையே?'' என்று கேட்டாள்.

''ஆம், ராணி! அந்த நாளில் உலகில் தர்மம் மேலோங்கியிருந்தது. அதனால் மந்திரத் திருநீற்றுக்கு அவ்வளவு சக்தி யிருந்தது. இப்போது உலகில் பாவம் மலிந்து விட்டது. அரசருக்கு விரோத மாகச் சதி செய்யும் துரோகிகள் நாட் டில் ஏற்பட்டிருக்கிறார்கள். இப்படி யெல்லாம் முன்னே நாம் கேட்ட துண்டா? ஆகையால்தான் மந்திரத் தின் சக்தி குறைந்து மருந்து தேவை யாகிவிட்டது!'' என்று இளைய பிராட்டி கூறிப் பழுவூர் இளையராணி யின் முகத்தை உற்றுப் பார்த்தாள்.

நந்தினியின் முகத்தில் எவ்வித மாறுதலையும் காணவில்லை. ''அப் படியா? அரசருக்கு விரோதமாகச் சதி செய்யும் துரோகிகள் இந்த நாளில் இருக்கிறார்களா? அவர்கள் யார்?'' என்று சாவதானமாகக் கேட்டாள்.

''அதுதான் எனக்கும் தெரியவில்லை. சிலர் ஒருவரைச் சொல்கிறார்கள்; சிலர் இன்னொருவரைச் சொல் கிறார்கள். எது உண்மை என்று கண்டு பிடிப்பதற்காக இன்னும் சில நாட்கள் இங்கேயே இருக்கலாமென்று பார்க்கி றேன். பழையாறையில் இருந்தால் உலக நடப்பு என்ன தெரிகிறது?'' என்றாள், குந்தவை.

''நல்ல தீர்மானம் செய்தீர்கள். என்னைக் கேட்டால் இங்கேயே நீங்கள் தங்கி விடுவது நல்லது. இல்லாவிட்டால் இராஜ்யம் குட்டிச் சுவராய்ப் போய்விடும். நானும் உங்க ளுக்கு என்னால் முடிந்த உதவி செய் வேன். எங்கள் வீட்டில் ஒரு விருந் தாளி வந்திருக்கிறான். அவனும் தங்க ளுக்கு உதவி செய்யக் கூடும்!'' என் றாள்.

''அது யார் விருந்தாளி?'' என்று குந்தவை கேட்டாள்.

''கடம்பூர் சம்புவரையர் மகன் கந்த மாறன். தாங்கள் அவனைப் பார்த் திருக்கிறீர்களா? தென்னைமர உயர மாய் வாட்டசாட்டமாய் இருக்கிறான். 'ஒற்றன்' என்றும் 'துரோகி' என்றும் ஓயாமல் பிதற்றிக் கொண்டிருக் கிறான். இராஜத் துரோகத்தைப் பற்றிச் சற்றுமுன் சொன்னீர்களே? இராஜத் துரோகத்தைக் காட்டிலும் பெரிய துரோகம் இன்னதென்று தங்களால் சொல்ல முடியுமா?''

''நன்றாய்ச் சொல்ல முடியும். கைப் பிடித்த கணவனுக்குப் பெண்ணாய்ப் பிறந்த ஒருத்தி துரோகம் செய்தால் அது இராஜத் துரோகத்தைக் காட்டி லும் கொடியதுதான்!''

இப்படிச் சொல்லிவிட்டுக் குந்தவை தேவி நந்தினியின் முகத்தை உற்றுப் பார்த்தாள். அவள் எதிர்பார்த்த மாறு தல் ஒன்றும் நிகழவில்லை. நந்தினி யின் முகத்தில் முன்போலவே மோக னப் புன்னகை தவழ்ந்தது.

''தாங்கள் சொல்வது ரொம்ப சரி;

ஆனால் கந்தமாறன் ஒப்புக் கொள்ள மாட்டான். 'எல்லாவற்றிலும் கொடிய துரோகம் சிநேகிதத் துரோகம்' என்று சொல்வான். அவனுடைய அருமை நண்பன் என்று கருதிய ஒருவன் ஒற்றனாக மாறிப் போனது மல்லாமல் இவனுடைய முதுகில் குத்திப் போட்டுவிட்டு ஓடிப் போய் விட்டானாம். அதுமுதல் கந்தமாறன் இவ்விதம் பிதற்றிக் கொண்டிருக்கிறான்!"

"அது யார் அவன் இவ்வளவு நீசத்தனமான காரியத்தைச் செய்தவன்?"

"யாரோ வந்தியத்தேவனாம்! தொண்டை நாட்டில் திருவல்லம் என்னும் ஊரில் முன்னம் அரசு புரிந்த வாணர் குலத்தைச் சேர்ந்தவனாம்! தாங்கள் கேள்விப்பட்டதுண்டோ?"

குந்தவை தன் முத்துப் போன்ற பற்களினால் பவழச் செவ்விதழ்களைக் கடித்துக் கொண்டாள்.

"எப்போதோ கேட்ட மாதிரி இருக்கிறது... பிற்பாடு என்ன நடந்தது?"

"பிற்பாடு என்ன? கந்தமாறனை முதுகில் குத்திப் போட்டு அவனுடைய சிநேகிதன் ஓடிவிட்டான். அந்த ஒற்றனைப் பிடித்து வருவதற்கு என் மைத்துனர் ஆட்கள் அனுப்பியிருப்பதாகக் கேள்வி!"

"அவன் ஒற்றன் என்பது எப்படி நிச்சயமாய்த் தெரியும்?"

"அவன் ஒற்றனோ, இல்லையோ, எனக்கு என்ன தெரியும்? சம்புவரையர் மகன் சொல்லுவதைத்தான் சொல்கிறேன். தாங்கள் வேண்டுமானால் நேரில் அவனிடமே கேட்டு எல்லா விவரமும் அறிந்து கொள்ளலாம்."

"ஆமாம்; சம்புவரையர் மகனை நானும் பார்க்க வேண்டியதுதான். அவன் பிழைத்ததே புனர் ஜன்மம் என்று கேள்விப்பட்டேன். அப்போது முதல் பழுவூர் அரண்மனையிலேதான் அவன் இருக்கிறானா?"

"ஆம்; காயம் பட்ட மறுநாள் காலையில் நம் அரண்மனையில் கொண்டு வந்து போட்டார்கள். காயத்துக்கு வைத்திய சிகிச்சை செய்ய வேண்டிய பொறுப்பும் என் தலையில் விழுந்தது. மெதுவாக உயிர் பிழைத்துக் கொண்டான்; காயம் இன்னும் முழுதும் ஆறியபாடில்லை!"

"நீங்கள் பக்கத்திலிருந்து பராமரித்தும் இன்னும் முழுதும் குணமாகவில்லை என்பது ஆச்சரியமான விஷயந்தான். ஆகட்டும் ராணி! நான் அவசியம் வந்து அவனைப் பார்க்கிறேன். சம்புவரையர் குலம் நேற்று முந்தாநாள் ஏற்பட்டதா? பராந்தக சக்கரவர்த்தியின் காலத்திலிருந்து வீரப் புகழ் பெற்ற குலம் அல்லவா?......"

"அதனாலேயே நானும் சொன்னேன். கந்தமாறனைப் பார்க்கும் வியாஜத்திலாவது எங்கள் ஏழை அரண்மனைக்கு எழுந்தருளுவீர்கள் அல்லவா?" என்றாள் நந்தினி.

இதற்குள் தேவாரப் பாடல் முடிந்து தான சாஸன வாசிப்பு ஆரம்பமாகிவிட்டது. முதலில் சுந்தர சோழ சக்கரவர்த்தியின் திருமுகம் படிக்கப்பட்டது. "நமது திருமகளார் குந்தவைப் பிராட்டிக்கு நாம் சர்வமானியமாகக் கொடுத்திருந்த நல்லூர் மங்கலம் கிராமத்தின் வருமானம் முழுவதையும் இளைய பிராட்டியார் தஞ்சைப் புறம்பாடி ஆதுர சாலைக்கு அளிக்க உவந்திருப்பதால், அந்த ஊர் நன்செய், புன்செய் நிலங்கள் யாவற்றையும் 'இறையிலி' நிலமாகச் செய்திருக்கிறோம்' என்று அந்த ஓலையில் சக்கரவர்த்தி தெரியப்படுத்தியிருந்தார். திருமந்திர ஓலை நாயகர் அதைப் படித்த பின் தனாதிகாரி பெரிய பழுவேட்டரையரிடம் கொடுக்க, பழுவேட்டரையர் அதை இரு கரங்களாலும் பெற்றுக் கண்களில் ஒற்றிக் கொண்டு கணக்காயரிடம் கொடுத்துக் கணக்கில் பதிய வைத்துக் கொள்ளும்படி சொன்னார்.

பிறகு குந்தவைப் பிராட்டியின் தான சிலா சாஸனம் படிக்கப்பட்டது. மேற்கூறிய கிராமத்துச் சர்வமானிய நிலங்களை அந்த ஊர் விவசாயிகளே சகல உரிமைகளுடன் அனுபவித்துக் கொண்டு தஞ்சாவூர் சுந்தர சோழ ஆதுர சாலை வைத்தியருக்கு ஆண்டு



ஒன்றுக்கு இருநூறு கலம் நெல்லும் ஆதுர சாலையில் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்காகத் தினந்தோறும் ஐம்பது படி பசும் பாலும் ஐந்து படி ஆட்டுப் பாலும் நூறு இளநீரும் அனுப்ப வேண்டியது என்று கருங்கல்லில் செதுக்கப்பட்டிருந்ததுடன் எழுதியவன் பெயரும் எழுதியதை மேற்பார்வை செய்த அதிகாரிகளின் பெயர்களும் அதில் விவரமாகப் பொறிக்கப்பட்டிருந்தன.

அந்தச் சிலா சாஸனத்தைப் படித்த பிறகு, அது இந்த வைபவத்துக்காக வந்திருந்த நல்லூர் மங்கல கிராமத் தலைவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. கிராமத் தலைவர்கள் சிலா சாஸனக் கல்லைப் பயபக்தியுடன் வாங்கிக் கொண்டு அருகில் நின்ற யானை மீது ஏற்றினார்கள். அப்போது ''மதுரை கொண்ட கோ இராஜ கேசரி சுந்தர சோழ சக்கரவர்த்தி வாழ்க! வாழ்க!'' என்று ஆயிரமாயிரம் குரல்களில் எழுந்த ஒலி எட்டுத் திசையும் பரவியது. அந்தக் குரல் ஒலியுடன் போட்டியிட்டுக் கொண்டு நூறு அறப் பறைகளின் முழக்கம் எழுந்து வானை அளாவியது. பின்னர் வரிசைக்கிரமமாக ''இளைய பிராட்டி குந்தவை தேவி வாழ்க!'' ''வீர பாண்டியன் தலை கொண்ட வீராதிவீரர் ஆதித்த கரிகாலர் வாழ்க!'' ''ஈழங்கொண்ட இளவரசர்

அருள்மொழி வர்மர் வாழ்க!'' "சிவஞான கண்டராதித்தரின் தவப் புதல்வர் மதுராந்தக தேவர் வாழ்க!'' என்றெல்லாம் கோஷங்களும் பிரதி கோஷங்களும் எழுந்தன. கடைசியில்,

''தனாதிகாரி, தானிய பண்டாரத் தலைவர், இறைவிதிக்கும் தேவர் பெரிய பழுவேட்டரையர் வாழ்க!'' ''தஞ்சைக் கோட்டைத் தலைவர் சின்னப் பழுவேட்டரையர் காலாந்தககண்டர் வாழ்க!''

என்ற கோஷங்கள் எழுந்தபோது, ஒலியின் அளவு பெரிதும் குறைந்து விட்டது. பழுவூர் வீரர்கள் மட்டும் அக்கோஷங்களைச் செய்தார்களே தவிரக் கூடியிருந்த பொது மக்கள் அதிகமாக அதில் சேர்ந்து கொள்ளவில்லை. அப்போது பழுவூர் இளைய ராணியின் முகத்தைப் பார்க்க வேண்டுமென்று குந்தவைப் பிராட்டி முயற்சி செய்தும் பலிக்கவில்லை. முக்கியமாக ஆதித்த கரிகாலரைப் பற்றிய வாழ்த்தொலி எழுந்த சமயத்தில் நந்தினியின் முகத்தைப் பார்த்திருந்தால், இரும்பு நெஞ்சு படைத்த இளைய பிராட்டி கூடப் பெரிதும் திகில் கொண்டிருப்பாள் என்பதில் ஐயம் இல்லை.



அத்தியாயம் 19

"ஒற்றன் பிடிபட்டான்!"

அன்று நடந்த சம்பவங்கள் பெரிய பழுவேட்டரையருக்கு மிக்க எரிச்சலை உண்டு பண்ணியிருந்தன. சக்கரவர்த்தியிடமும் அவருடைய குடும்பத்தாரிடமும் மக்கள் கொண்டிருந்த விசுவாசத்தை வெளிப்படுத்திக் காட்டுவதற்கல்லவா அது ஒரு சந்தர்ப்பமாகப் போய்விட்டது? "ஜனங்களாம் ஜனங்கள்! அறிவற்ற ஆடுமாடுகள்! நாலு பேர் எந்த வழி போகிறார்களோ அதே வழியில் நாலாயிரம் பேரும் போவார்கள்! சுய அறிவைப் பயன்படுத்திக் கொள்ள எத்தனை பேருக்குத் தெரிகிறது?" என்று தமக்குள் அடிக்கடி சொல்லிக் கொண்டு பொருமினார். "சக்கரவர்த்தி சொர்க்கத்துக்குப் போவதற்குள்ளே சாம்ராஜ்யத்தைப் பாழாக்கி விட்டுத்தான் போவார் போலிருக்கிறது! 'இந்த ஊருக்கு வரியைத் தள்ளி விடு!' 'அந்தக் கிராமத்தை இறையிலிக் கிராமமாகச் செய்துவிடு!' என்று கட்டளையிட்டுக் கொண்டே போகிறார்! கொஞ்சகாலத்துக்கெல்லாம் வரி கொடுக்கும் கிராமமே இல்லாமற் போய்விடும். ஆனால் போர்க்களத்துக்கு மட்டும் செலவுக்குப் பணமும் உணவுக்குத் தானியமும் அனுப்பிக் கொண்டேயிருக்க வேண்டும். எங்கிருந்து அனுப்புவது?" என்று அவர் இரைந்து கத்தியதைக் கேட்டு அவருடைய பணியாட்களே சிறிது பயப்பட்டார்கள். "அண்ணா! இப்படியெல்லாம் சத்தம் போடுவதில் என்ன பயன்? காலம் வரும் வரையில் காத்திருந்து காரியத்தில் காட்ட வேண்டும்!" என்று சின்னப் பழுவேட்டரையர் அவருக்குப் பொறுமை போதிக்க வேண்டியிருந்தது.

குந்தவை தம் அரண்மனைக்கு வரப் போகிறாள் என்று தெரிந்ததும் பெரியவரின் எரிச்சல் அளவு கடந்துவிட்டது. நந்தினியிடம் சென்று, "இது என்ன நான் கேள்விப்படுவது? அந்த அரக்கி இங்கு எதற்காக வரவேண்டும்? அவளை நீ அழைத்திருக்கிறாயாமே? அவள் உன்னை அவமானப்படுத்தியதையெல்லாம் மறந்து விட்டாயா?" என்று கேட்டார்.

"ஒருவர் எனக்குச் செய்த நன்மையையும் நான் மறக்க மாட்டேன்; இன்னொருவர் எனக்குச் செய்த தீமையையும் மறக்க மாட்டேன். இன்னமும் இந்த என் சுபாவம் தங்களுக்குத் தெரியவில்லையா?" என்றாள் நந்தினி.

"அப்படியானால் அவள் இங்கு எதற்காக வருகிறாள்?"

"அவள் இஷ்டம் வருகிறாள்! சக்கரவர்த்தியின் குமாரி என்ற இறுமாப்பினால் வருகிறாள்!"

"நீ எதற்காக அழைத்தாயாம்?"

"நான் அழைக்கவில்லை; அவளே அழைத்துக் கொண்டாள். 'சம்புவரையர் மகன் உங்கள் வீட்டில் இருக்கிறானாமே? அவனைப் பார்க்க வேண்டும்!' என்றாள். 'நீ வராதே!' என்று நான் சொல்ல முடியுமா? அப்படிச் சொல்லக் கூடிய காலம் வரும். அதுவரையில் எல்லா அவமானங்களையும் நான் பொறுத்துக் கொண்டிருக்க வேண்டியதுதான்."

"என்னால் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. அவள் வரும் சமயம் நான் இந்த அரண்மனையில் இருக்க முடியாது. இந்த நகரிலேயே என்னால் இருக்க முடியாது. மழபாடியில் கொஞ்சம் அலுவல் இருக்கிறது. போய் வருகிறேன்."

"அப்படியே செய்யுங்கள், நாதா! நானே சொல்லலாம் என்று இருந்தேன். அந்த விஷப் பாம்பை என்னிடமே விட்டு விடுங்கள். அவளுடைய விஷத்தை இறக்குவது எப்படி என்று எனக்குத் தெரியும். தாங்கள் திரும்பி வரும்போது ஏதேனும் சில அதிசயமான செய்திகளைக் கேள்விப்


கதிரவன் ஒளியில் கனிந்த சூரிய காந்தி வித்துக்களின் சத்து...
உடம்புக்கு இலேசு இலேசான
உணவுகளை சமைக்கும் எண்ணெய்
புதிய ஃப்ளோரா, சுத்தீகரித்த சூரியகாந்தி எண்ணெய், கண்ணாரக் காண்பீர்கள் இதிலே பொன்னுன தூய்மை, பூப்போல் இலேசுத் தன்மை, சமையலே இலேசு, உணவு தோறும் இலேசு, சீரணிக்க இலேசு, உடம்புணர்விலும் ஓகோ இலேசு! தேகத்தில் கொலஸ்ட்ரால் கொழுப்புச் சத்து திரளாமல் தடுத்திட— சமைப்பீர் புதிய ஃப்ளோராவினுல்; எந்தச் சமையலிலும் சொந்த ருசி வந்து இழையும், உணவிலே சுவை காண்பீர் சுகநலத்தின் சூரியோதயம்; பூப்போல் இலேசான புதிய ஃப்ளோரா.
Lipton
Flora
REFINED
SUNFLOWER OIL
புதிய
ஃப்ளோரா
ரிஃபைன்டு சூரிய காந்தி எண்ணெய்
சீரணிக்க இலேசான சுவை உணவு சமைக்கிறது.


பொழியும் பூமழை


Arvind


இப்போது!
கேர்ஃப்ரீ
டியோடரன்ட்
ஸேனிட்டரி நேப்கின்கள்
முழுப் பாதுகாப்புடன் கூட, வாடை நீக்கிய புத்துணர்வுக்கு
கேர்:ப்ரீ டியோடரன்ட் ஸேனிட்டரி நேப்கின்கள், மாதவிடாயின் வாடையைக் குறைத்து உதவி, சுத்தம் கமழும் புத்துணர்வோடு வைக்கிறது உங்களை.
கேர்:ப்ரீ டியோடரன்ட் உங்களைப் பாதுகாப்பதோடு புத்துணர்ச்சி பொலியவும் செய்கிறது.
Carefree
Deodorant
கேர்ஃப்ரீ டியோடரன்ட்... உங்களுக்கு மிகவும் தேவைப்படும் நேரங்களிலே புத்துணர்வு
ஜான்ஸன் அன்ட் ஜான்ஸன்
சென்னை, டெல்லி நகரங்களில் மட்டுமே கிடைக்கும்.

பட்டால் அதற்காகத் தாங்கள் வியப்படைய வேண்டாம்......''

''என்ன மாதிரி அதிசயமான செய்திகள்?''

''குந்தவைப் பிராட்டி கந்தமாறனைத் திருமணம் செய்து கொள்ளப் போவதாகவோ, ஆதித்த கரிகாலன் கந்தமாறனுடைய தங்கையை மணக்கப் போவதாகவோ கேள்விப்படலாம்...''

''ஐயையோ! இது என்ன சொல்கிறாய்? அப்படியெல்லாம் நடந்து விட்டால், நம்முடைய யோசனைகள் என்ன ஆகும்?''

''பேச்சு நடந்தால், காரியமே நடந்து விடுமா, என்ன? மதுராந்தக தேவருக்கு அடுத்த பட்டம் என்று உங்கள் நண்பர்களிடம் எல்லாம் சொல்லி வருகிறீர்களே? உண்மையில் அப்படி நடக்கப் போகிறதா? பெண்ணைப் போல் நாணிக் கோணி நடக்கும் மதுராந்தகனுக்குப் பட்டம் கட்டுவதற்காகவா நாம் இவ்வளவு பாடுபடுகிறோம்?'' என்று கூறி நந்தினி தன் கரிய கண்களினால் பெரிய பழுவேட்டரையரை உற்று நோக்கினாள். அந்தப் பார்வையின் சக்தியைத் தாங்க முடியாத அக்கிழவர் தலை குனிந்து அவளுடைய கரத்தை எடுத்துக் கண்ணில் ஒற்றிக் கொண்டு, ''என் கண்ணே! இந்தச் சோழ சாம்ராஜ்யத்தின் சிம்மாசனத்தில் நீ சக்கரவர்த்தினியாக வீற்றிருக்கும் நாள் சீக்கிரத்திலேயே வரும்!'' என்றார்.


கந்தமாறன் தன்னைப் பார்க்கக் குந்தவை தேவி வரப் போகிறாள் என்று அறிந்தது முதல் பரபரப்பு அடைந்து தத்தளித்துக் கொண்டிருந்தான். குந்தவையின் அறிவும் அழகும் மற்ற உயர்வுகளும் நாடு அறிந்தவை அல்லவா? அப்படிப்பட்ட இளைய பிராட்டி தன்னைப் பார்ப்பதற்காக வருகிறாள் என்பது எவ்வளவு பெருமையான விஷயம்? இதற்காக உடம்பில் இன்னும் சில குத்துக்கள் பட்டு நோயாகவும் படுத்திருக்கலாமே?

அடுத்த இதழில்...



ராஜீவ்ஜியிடம் எனக்கு ராஜ விசுவாசம்...

— வைஜயந்தி மாலா பேட்டி



நல்ல வேளை, திருடன்
அவங்க பின்னாலே சுத்த
றான். நம்மகிட்டே வந்
திருந்தா நம்ப உண்மை
யான நகைககளுக்
கல்லவா! ஏன் உயிருக்கு
மல்லவா ஆபத்து!
அவங்க போட்டிருக்கிற
நகையெல்லாம் போலி.
நிஜ நகைகளைத்தான்
சக்தி பாதுகாப்பு பெட்ட
கத்தில் வைச்சிருக்
காங்களே, பின்னே
எதுக்கு பயப்படணும்?
என்ன அவங்க அத்தனை
நகைகளைப் போட்டுகிட்டு
அசட்டையா இருக்காங்க?
கொஞ்சங்கூட கவலைப்
படலையே!

அடாடா! இந்த மாதிரி காயம் போர்க்களத்தில் தன்னுடைய மார்பிலே பட்டுத் தான் படுத்திருக்கக் கூடாதா? அச்சமயம் குந்தவை தேவி வந்து தன்னைப் பார்த்தால் எவ்வளவு கௌரவமாயிருக்கும்? அப்படியின்றி, இப்போது ஒரு சிநேகிதன் செய்த துரோகத்தைப் பற்றிப் பலரிடம் படித்த பாடத்தையேயல்லவா அவளிடமும் படித்தாக வேண்டும்?

இடையிடையே அப்பெண்ணரசியின் குடும்பத்தினருக்கு விரோதமாக அவன் ஈடுபட்டிருக்கும் இரகசிய முயற்சியைக் குறித்து நினைவு வந்து கொஞ்சம் அவனை வருத்தியது.

கந்தமாறன் யோக்கியமான பிள்ளை. தந்திர மந்திரங்களும் சூது வாதுகளும் அறியாதவன். நந்தினியின் மோகன சௌந்தரியம் அவனைப் போதைக்குள்ளாக்கிய போதிலும் அவள் இன்னொருவரின் மனைவி என்ற நினைவினால் தன் மனத்துக்கு அரண் போட்டு வந்தான். ஆனால் குந்தவைப் பிராட்டியோ கலியாணம் ஆகாதவள். அவளிடம் எப்படி நடந்து கொள்வது? எவ்வாறு பேசுவது? மனத்தில் வஞ்சகம் வைத்துக் கொண்டு வெளியில் இனிமையாகப் பேச முடியுமா? அல்லது அவளுடைய அழகிலே மயங்கித் தன்னுடைய சபதத்தைக் கைவிடும்படியான மனத்தளர்ச்சி ஏற்பட்டு விடுமோ? அப்படி நேருவதற்கு ஒரு நாளும் இடங்கொடுக்கக் கூடாது... ஆ! இளவரசி எதற்காக இங்கே நம்மைப் பார்க்க வர வேண்டும்? வரட்டும்; வரட்டும்! ஏதாவது மூர்க்கத்தனமாகப் பேசி-மறுபடியும் வராதபடி அனுப்பி விடலாம்.

இவ்விதம் கந்தமாறன் செய்திருந்த முடிவு குந்தவைப் பிராட்டியைக் கண்டதும் அடியோடு கரைந்து மறைந்து விட்டது. அவளுடைய மோகன வடிவும் முகப்பொலிவும் பெருந்தன்மையும் அடக்கமும் இனிமை ததும்பிய அனுதாப வார்த்தைகளும் கந்தமாறனைத் தன்வயம் இழக்கச் செய்து விட்டன. அவனுடைய கற்பனா சக்தி பொங்கிப் பெருகியது. தன்னுடைய பெருமையைச் சொல்லிக் கொள்ள விரும்பாதவனைப் போல் நடித்து அதே

சமயத்தில் அவனுடைய கட்டாயத்துக்காகச் சொல்கிறவனைப் போலத் தான் புரிந்த வீரச் செயல்களைச் சொல்லிக் கொண்டான். தோள்களிலும் மார்பிலும் இன்னும் தன் உடம்பெல்லாம் போர்க்களத்தில் தான் அடைந்த காயங்களைக் காட்ட விரும்பாதவனைப் போல் காட்டினான். "அந்தச் சிநேகத் துரோகி வந்தியத்தேவன் என்னை மார்பிலே குத்திக் கொன்றிருந்தால் கூடக் கவலையில்லை. முதுகிலே குத்தி விட்டுப் போய்விட்டானே என்றுதான் வருத்தமாயிருக்கிறது. ஆகையினாலேதான் அவனுடைய துரோகத்தைப் பற்றிச் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. இல்லாவிடில், போரில் புறமுதுகிட்ட அபகீர்த்தியல்லவா ஏற்பட்டுவிடும்? தோளிலோ மார்பிலோ குத்திக் காயப்படுத்தியிருந்தால், அவனை மன்னித்து விட்டே இருப்பேன்!" என்று கந்தமாறன் உணர்ச்சி பொங்கக் கூறியது குந்தவைக்கு உண்மையாகவே தோன்றியது. வந்தியத்தேவன் இப்படிச் செய்திருப்பானா, அவன் விஷயத்தில் நாம் ஏமாந்து போய்விட்டோமோ என்ற ஐயமும் உண்டாகிவிட்டது. நடந்ததை விவரமாகச் சொல்லும்படி கேட்கவே, கந்தமாறன் கூறினான். அவனுடைய கற்பனா சக்தி அன்று உச்சத்தை அடைந்து நந்தினிக்கே வியப்பை உண்டாக்கி விட்டது.

"பாருங்கள் தேவி! கடம்பூரில் தங்கிய அன்றே அவன் என்னை ஏமாற்றி விட்டான். தஞ்சாவூருக்குப் புறப்பட்ட காரியம் இன்னதென்று சொல்லவில்லை. இங்கு வந்து ஏதோ பொய் அடையாளத்தைக் காட்டி உள்ளே நுழைந்திருக்கிறான். சக்கரவர்த்தியையும் போய்ப் பார்த்திருக்கிறான். ஆதித்த கரிகாலரிடமிருந்து ஓலை கொண்டு வந்ததாகப் புளுகியிருக்கிறான். அத்துடன் விட்டானா? தங்கள் பெயரையும் சம்பந்தப்படுத்தி, தங்களுக்கும் ஓலை கொண்டு வந்திருப்பதாகச் சொல்லவே கோட்டைத் தலைவருக்குச் சந்தேகம் வந்துவிட்டது. அவன் ஒற்றனாயிருக்கலாம் என்று ஐயுற்று அவனைக் காவலில் வைக்கச் சொல்லியிருக்கிறார். எப்படியோ தப்பித்துப் போய்விட்டான். அது விஷயத்தில் அவனுடைய சமர்த்தை மெச்சத்தான் வேண்டும். நான் இந்தச் செய்திகளைக் கேட்டபோது என் சிநேகிதன் பகையாளியின் ஒற்றன் என்பதை மட்டும் நம்பவே இல்லை. அவனுடைய சுபாவத்திலேயே சில கோணல்கள் உண்டு. அப்படி ஏதோ அசட்டுத்தனம் செய்திருக்கிறான் என்று உறுதியாக நம்பினேன். 'எப்படியாவது அவனை நான் கண்டுபிடித்துத் திரும்ப அழைத்து வருகிறேன். அவனை மன்னித்து விடவேண்டும்' என்று கோட்டைத் தலைவரிடம் நிபந்தனை பேசிக் கொண்டு புறப்பட்டேன். கோட்டையைச் சுற்றியுள்ள வடவாற்றங்கரையோடு அந்த நள்ளிரவில் சென்றேன். யாரையும் பின்னோடு அழைத்துப் போய் என் நண்பனை அவமானப்படுத்த விரும்பவில்லை. கோட்டையிலிருந்து தப்பியவன் எப்படியும் மதில் வழியாகத்தான் வெளியில் வரவேண்டுமல்லவா? முன்னமே வெளியே வந்திருந்தாலும் பக்கத்துக் காடுகளிலேதான் மறைந்திருக்க வேண்டும். ஆகையால் வடவாற்றங்கரையோடு போனேன். ஒருவன் செங்குத்தான கோட்டை மதில் சுவர் வழியாக இறங்கி வருவது மங்கிய நிலா வெளிச்சத்தில் தெரிந்தது. உடனே அங்கே போய் நின்றேன். அவன் இறங்கியதும், 'நண்பா! இது என்ன வேலை?' என்றேன். அந்தச் சண்டாளன் உடனே என் மார்பில் ஒரு குத்து விட்டான், யானைகள் இடித்தும் நலுங்காத என் மார்பை இவனுடைய குத்து என்ன செய்யும்? ஆயினும் நல்ல எண்ணத்துடன் அவனைத் தேடிப் போன என்னை அவன் குத்தியது பொறுக்கவில்லை. நானும் குத்து விட்டேன். இருவரும் துவந்த யுத்தம் செய்தோம். அரை நாழிகையில் அவன் சக்தி இழந்து அடங்கிப் போனான். என்னிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டான். நானும் அவனை மன்னித்து, 'நீ வந்த காரணத்தை உண்மையாகச் சொல்லி விடு!' நான் உனக்கு வேண்டிய உதவி செய்கிறேன்!' என்றேன். 'களைப்பாயிருக்கிறது. எங்கேயாவது உட்கார்ந்து

சொல்கிறேன்' என்றான். 'சரி' என்று சொல்லி அழைத்துச் சென்றேன். முன்னால் வழி காட்டிக் கொண்டு போனேன். திடீரென்று அந்தப் பாவி முதுகில் கத்தியினால் குத்தி விட்டான். அரைச் சாண் நீளம் கத்தி உள்ளே போய்விட்டது. தலைசுற்றியது. கீழே விழுந்து விட்டேன். அந்தச் சிநேகத் துரோகி தப்பி ஓடிவிட்டான்! மறுபடி நான் கண் விழித்து உணர்வு வந்து பார்த்தபோது ஓர் ஊமை ஸ்திரீயின் வீட்டில் இருந்ததைக் கண்டேன்...''

கந்தமாறனின் கற்பனைக் கதையைக் கேட்டு நந்தினி தன் மனத்திற்குள்ளே சிரித்தாள். குந்தவை தேவிக்கு அதை எவ்வளவு தூரம் நம்புவது என்று தீர்மானிக்க முடியவில்லை.

''ஊமை ஸ்திரீயின் வீட்டுக்கு எப்படி வந்து சேர்ந்தீர்கள்? யார் கொண்டு சேர்த்தது?'' என்றாள்.

''அதுதான் எனக்கும் விளங்காத மர்மமாயிருக்கிறது. அந்த ஊமைக்கு ஒன்றுமே தெரியவில்லை. தெரிந்தாலும் சொல்ல முடியவில்லை. அவளுக்கு ஒரு புதல்வன் உண்டாம். அவனையும் அன்றிலிருந்து காணவே காணோம். எப்படி மாயமாக மறைந்தான் என்று தெரியாது. அவன் திரும்பி வந்தால் ஒருவேளை கேட்கலாம். இல்லாவிடில் பழுவூர் வீரர்கள் என் நண்பனைப் பிடிக்கும் வரையில் காத்திருக்க வேண்டியதுதான்!......''

''அவன் அகப்பட்டு விடுவான் என்று நினைக்கிறீர்களா?''

''அகப்படாமல் எப்படித் தப்ப முடியும்? சப்பட்டை கட்டிக் கொண்டு பறந்துவிட முடியாதல்லவா? அதற்காகவே, அவனைப் பார்ப்பதற்காகவே, இங்கே காத்திருக்கிறேன். இல்லாவிடில் ஊர் சென்றிருப்பேன். இன்னமும் அவனுக்காகப் பழுவூர் அரசர்களிடம் மன்னிப்புப் பெறலாம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.''

''ஐயா! தங்களுடைய பெருந்தன்மையே பெருந்தன்மை!'' என்றாள் இளையபிராட்டி. அவளுடைய மனம் 'வந்தியத்தேவன் அகப்படக் கூடாது. அவன் துரோகியாயிருந்தாலும் சரிதான்!' என்று எண்ணமிட்டது.

அச்சமயத்தில் அரண்மனைத் தாதி ஒருத்தி ஓடிவந்து, ''அம்மா! ஒற்றன் அகப்பட்டு விட்டான்! பிடித்து வருகிறார்கள்!'' என்று கத்தினாள்.

நந்தினி, குந்தவை இருவருடைய முகத்திலும் துன்ப வேதனை காணப்பட்டது. நந்தினி விரைவில் அதை மாற்றிக் கொண்டாள். குந்தவையினால் அது முடியவில்லை.

(தொடரும்)

''டாக்டர் பட்டம் கிடைத்த பிறகு அந்த அமைச்சரோட அட்டகாசம் அளவுக்கதிகமாயிட்டது!''

''எப்படி?''

''மாலைக்குப் பதிலா, ஸ்டெதாஸ்கோப்'தான் போடணும்னு அடம் பிடிக்கிறாரே!''

— சேலம் நீலா





கணவன்: இந்த வாரத்தில் ஆறு நாட்களும் உருளைக்கிழங்கு கறிதான் போட்டே. இன்னைக்கு ஒரு நாளாவது வேறே ஏதாவது செய்யக் கூடாதா?

மனைவி: அது சரி. ஆறு நாட்கள் உருளைக் கிழங்கு கறி சாப்பிட்டவருக்கு இன்னைக்கும் சாப்பிட்டால் என்னவாம்?

— மீனம் தனுசு

சுவாதித் திருநாள்



லெனின் ராஜேந்திரன் இயக்கி வெளியாகியிருக்கும் 'சுவாதித் திருநாள்' மலையாளத் திரைப்படம், ஆங்கிலேயர்களை எதிர்த்த தென்னிந்திய அரசர்களில் மகாராஜா சுவாதித் திருநாளையும் ஒருவராகச் சேர்த்திருக்கிறது. ஊழலை ஒழித்து, குற்றத்துக்கு ஏற்ற தண்டனை வழங்கக் கோர்ட்டுகள் நியமித்து, நிலச்சீர்திருத்தங்கள் செய்து, ஆங்கிலக் கல்வி, ஆங்கில மருத்துவம், நூலக வசதி என்று தம் மக்களுக்கு நாகரிகமும், நவீன வாழ்க்கை அம்சங்களும் அறிமுகப்படுத்திய மன்னர் சுவாதித் திருநாள்.

முப்பத்து மூன்று வருடங்களே வாழ்ந்தாலும், ஆங்கிலேயரை எதிர்த்துக் கொண்டு , ரெஸிடென்டாக இருந்த ஜெனரல் கல்லனைப் பகைத்துக் கொண்டு, தம் மனத்துக்குப் பிடித்த நடன — இசைக் கலைகளை வளர்க்க ஏராளமான கலைஞர்களைத் தம் அரசவையில் வைத்து ஆதரித்தார். 'கஜானாவைக் காலியாக்குகிறாய்' என்று குற்றம் சாட்டுகிறது பிரிட்டிஷ் அரசு.

தன்னைச் சரியாகப் புரிந்து கொள்ளாத மனைவி (அம்பிகா)யிடமிருந்து விலகி, மன்னரின் மனம், நடனமாட வந்த சுகந்தவல்லி (ரஞ்சனி)யிடம் செல்கிறது. பரத நாட்டியக் கலைக்குத் தனிச் சிறப்பு ஏற்படுத்திய தஞ்சை நால்வர், அரசர் முன் வழங்கும் சுகந்தவல்லியின் நடனம் ஏன் இத்தனை மோசமாக, படு சினிமாத்தனமாக இருக்கிறது?

வளர்ப்புத் தாய் ராணி பார்வதிபாய் (ஸ்ரீவித்யா) மனவருத்தத்துக்கும் காரணமாகி, மறைகிறார் மன்னர்.

சுவாதித் திருநாளின் சொந்த வாழ்க்கைச் சோகத்தை, அவர் தம் விருப்பப்படிச் செயல்பட இயலாமையை, அவருடைய தாபத்தை, திரைக்குக் கொண்டு வந்திருக்கிறார் இயக்குநர்.

சமீபத்திய சரித்திரம்; கர்நாடக இசை (எம். பி. சீனிவாசனின் இசையமைப்பில் பாலமுரளி, ஜேசுதாஸ், நெய்யாற்றங்கரை வாசுதேவன்) மது அம்பட்டின் காமிரா (காட்சிகள் அத்தனையும் ஓவியம் மாதிரி) கலை இயக்குநர் கிருஷ்ணமூர்த்தியின் கைத்திறன் (தேசிய விருது பெறுவாரோ?) எல்லாமே பாராட்ட வேண்டிய அம்சங்கள்.

படத்தைப் பார்த்த செம்மங்குடியின் கருத்து:

எத்தனை பெரிய மனிதர் சுவாதித் திருநாள்! அவரைப் பற்றி இப்படி மட்டமாக எடுத்திருக்கிறார்களே? அவரை இப்படியா ஒரு ஸ்திரீலோலனாகக் காண்பிப்பது? படுக்கை ஸீன் எல்லாம் தேவையா? வெட்டி எறிய வேண்டிய காட்சிகள் அவை. பக்தி மஞ்சரி, பத்மநாபசதகம் முதலிய கிரந்தங்கள் படைத்த மன்னரை இப்படிக் காண்பித்தது அந்த அரச குலத்தையே அவமானப்படுத்தியிருக்கிறது போல இருக்கிறது. பத்மநாபதாசர் அவர். பத்மநாபசுவாமி கோயிலை எங்காவது காண்பித்தார்களோ? அரசருக்கு மனைவி தவிர, ஆசை நாயகி ஒருவேளை இருந்திருக்கலாம். அதற்காக இப்படியா தரக் குறைவாக மன்னரின் வாழ்க்கையைத் திரைப்படமாக்குவது?

— சாருகேசி

நிழல் யுத்தம்

26

ஆசையாடிற்று. அல்லது தான் என்கிற நினைப்பு ஆடிற்று என்று தெரியவில்லை. அம்மாவை மருத்துவமனையில் சேர்த்த நாலாவது நாள் முரளி வந்தான். அம்மாவும் உதடு இறுக்கி அவன் வரவுக்காகக் காத்துக் கொண்டிருந்தாள்.

இறங்கிய ஆட்டோவைக்கைதட்டி மறுபடியும் கூப்பிட்டு, அதே வண்டியில் ஆஸ்பத்திரிக்குப் போய் அம்மாவுக்கு அருகே உட்கார்ந்து கைகளைப் பிடித்துக் கொண்டான். தினசரி காலையில் போடுகிற இஞ்சக்ஷனுக்கு வலி தாளாமல் கண் திறந்தாள். முரளி அங்கே இருப்பதைப் பார்த்தாள். 'அப்பா அப்பா' என்று கூப்பிட்டாள். முரளி குனிந்து அவள் சொல்வதைக் கூர்ந்து கேட்டான்.

''திருச்சிலேர்ந்து இரண்டு ஜாதகங்கள் வந்திருக்கு. போய்ப் பொண்ணு பார்த்துட்டு வா.''

''அம்மா.''

''அவாளே வேலை பார்த்து வைக்கிறாளாம். சீர் கூடக் குறைச்சலா இருந்தாலும் பரவாயில்லே.''

''அம்மா... எனக்குக் கல்யாணம் ஆயிடுத்து.''

''எனக்கு எட்டு வயசுல கல்யாணம். உங்கப்பாவுக்குப் பதினேழு வயசு. குடுமி வச்ச மாப்பிள்ளையாத்தான் பார்த்தது.''

''அம்மா!''

''தேர் அன்னிக்குத்தான் நீ பொறந்தே. எனக்கு ரொம்ப ஆசை... தேர் பார்த்துட்டுக் குழந்தை பொறக்கணும்னு. தேர் வர்றதுக்கு நாழியாகும்னுட்டா.''

''அம்மா...''

''பட்டாஸ் உன் கையில் வெடிச்சுடுத்துன்னு அப்பா என்னை அடி அடின்னு அடிச்சார். தீபாவளியன்று ஏக ரகளை.''

''அம்மா, லலிதா வரலையா?''

''எங்கம்மா எனக்குக் கல்யாணம் பண்ணிய மறு வருஷமே செத்துப் போயிட்டா.''

''அம்மா, நான் முரளிம்மா. உன் பிள்ளை முரளி. கண்ணை முழிச்சுப் பாரு. என்னைத் தெரியறதா?''

பாலகுமாரன்

''தெரியறது. ஏரோப்ளேன் பாண்டி மாதிரி வானத்துல கோடு கோடா போட்டிருக்கு.''

சங்கரன் பின்னால் வந்து முரளியின் தோளைத் தொட்டார். ''அவள் வேறே இடத்துல இருக்கா. மனுஷாளைத் தெரியலே.''

''என்ன ஆச்சு?''

''குளிஞ்சு தலையை தூக்கின மாமி பத்து தப்படி நடக்கலே. தடார்னு தலையைப் போட்டுட்டுச் சரிஞ்சுட்டா. நல்லவேளை பின்னால் வந்த வேலைக்காரி தாங்கிப் பிடித்துக் கொண்டாள். உடனே வண்டி வைச்சுக் கொண்டு வந்துட்டோம்.''

பக்கத்துப் போர்ஷன் மனிதர் பேச, அம்மா கண் செருகி விழுகிற காட்சி, நெஞ்சில் ரணம் ஏற்படுத்தியது.

''மாமி, என்னைத்தெரியறதா...?'' சங்கரன் குனிந்து கேட்க...

அம்மா, 'நிலா தெரிகிறது' என்றாள்.

''நான் சங்கரன்.''

''பாகவதர் பாட்டுன்னு அவாளுக்கு ரொம்பப் பிடிக்கும். யானைத் தந்தம் போலவே வானில் வெண்ணிலா.'' அம்மா பாடினாளா, பேசினாளா என்று புரியவில்லை. மறுபடியும் கண் செருகி விட்டது. பயந்து, டாக்டரைக் கூப்பிட, 'ஊசி மருந்து மயக்கம் அதிகம். பேச வேண்டாம்' என்றார்.

''எப்படி இருக்கு டாக்டர்?''

''சிவியர் அட்டாக். என்ன சொல்ல முடியும்? மருந்து வேலை செய்யலே.''

''ஏன் டாக்டர்?''

''பேஷண்ட் மனநிலை சரியாயில்லே, ரொம்ப ஆழமா உள்ளே போயிட்டாங்க.''

''டாக்டர், சரியாகாதா?''

''சரியாகணும்னு முதல்லே அவங்க நினைக்கணும். பிழைக்கணும்னு ஆசைப் படணும். அவங்க ஆசை நிகழ்காலத்துல இல்லே.''

''டாக்டர்!''

''அதிசயம் நடக்கும் எப்ப வேணா நடக்கும். நடக்கணும்.''

''யானை தந்தம் போலவே
வானில் வெண்ணிலா.''

முரளியின் மனத்திற்குள் பாட்டு ஓடிற்று. கண்ணில் ஜலம் வழிந்தது. சின்ன வயசில் அம்மா இந்தப் பாட்டுப் பாடியிருக்கிறாள். பிறை நிலவு காட்டிச் சாதம் ஊட்டியிருக்கிறாள்.



சங்கரன் ஒரு பையில் டூத் பேஸ்ட், ப்ரஷ், வேஷ்டி, சட்டை எடுத்து வந்திருந்தார்.

"லலிதா வரலையா?"

"நாலு தடவை வந்துட்டுப் போனா. ஆஸ்பத்திரியில் குழந்தையை விடறதில்லே. தொறத்தறா. அவளுக்கும் முடியலே."

"சரி, வர வேண்டாம்!"

"உங்களைக் காணுமேன்னுதான் ரொம்பப் பதறிப் போயிட்டேன். உன் போக்கு சரியில்லே முரளி. வீடுன்னு ஆயிரம் இருக்கும். ஆங்காரப்பட்டுச் சொல்லாமல் போறது தப்பு. உங்கம்மாவுக்கு ஒண்ணு இடக்க ஒண்ணு ஆயிருந்தா?"

"இப்ப என்ன கிழிச்சுட்டீர்? தரும ஆஸ்பத்திரிதானே?"


"கொண்டு வந்து சேர்த்த பிறகு மாத்த முடியுமா? வழியில ஏதாவது ஆச்சுன்னு யார் பதில் சொல்றது? இப்ப சொல்லு எங்கே எடுத்துண்டு போகணும்னு?"


"எங்கேயும் வேண்டாம்."

"இந்தத் தீர்மானத்துக்கு என்னைக் கடிச்சுக் குதறுவானேன்?"

"அப்படித்தான்யா! போ!"

"முரளி! பொண்ணைப் பெத்த ஒரு காரணத்துக்காக நான் ரொம்ப அடங்கிப் போறேன். நாலு பேர் பார்க்கக் கத்தறது நன்னாயில்லே."







"நம்ம கட்சித் தொண்டர்கள் கையில் ஏன் கடப்பாரையோடு வர்றாங்க?"

"சமரசப் பேச்சில் இருக்கற முட்டுக் கட்டையை நகர்த்தத்தான்!"

— குத்தாலம் அபிதா.

"கத்துவேன். என்ன செய்வே?" முரளி எழுந்து கால் பரப்பிக் கூவிய போது, சங்கரன் பேசாமல் வெளியே போனார்.

லலிதா வரவில்லை.

இரவு அம்மாவுக்குக் குத்திருமல் ஆரம்பித்து விட்டது. நெஞ்சுக் கூடு இழுத்து இழுத்து அவஸ்தை காட்டிற்று. நாடித் துடிப்பு அதிர்ச்சியில் அதிகமாயிற்று. மறுபடியும் ஊசி போடக் கண் செருகினாள்.

"மோசமாயிருக்கு முரளி. இருபத்தி நாலு மணி நேரம் கூடத் தாங்காது," டாக்டர் தெளிவாகச் சொல்லி விட்டார்.

முரளி அசையாமல் அம்மாவுக்கு அருகே உட்கார்ந்திருந்தான். மெல்ல நாக்குழறி அழைத்த போது குனிந்து சப்தங்களைக் காது கொடுத்துக் கேட்டான்.

"முரளி வந்துட்டியா?"

"ஆமாம்மா. சொல்லு."

"தவலை நசுங்கிப் போயிடுத்துடா."

"போனால் போறது. வேறே வாங்கிக்கலாம்."

"என்கிட்டே இரண்டாயிரம ரூபாய் இருக்கு."

"தவலைக்கு எதுக்கும்மா அத்தனை காசு... நான் வாங்கித் தரேன்."

"இல்லேடா என் செலவுக்கு வச்சுக்கோ."

"என்ன செலவு?"

"வைதிகச் செலவுக்கு வேணுமே! மாமனார்கிட்டே கேட்காதே. தப்பு."

"அம்மா...!"

"மொத்தமா பத்தாநாள் பண்ணிடு, தினசரி முடியாது உனக்கு."

"ஐயோ... என்ன பேசறே!"

"தாங்காது. எனக்கே தெரியறது முரளி"

"என்னம்மா..."

"புருஷன் பலம்னா பொண்டாட்டி அடங்கிப் போகணும். பொண்டாட்டி பலம்னா புருஷன் அடங்கிப் போகணும்."

"சரிம்மா."

"விட்டுக் கொடுத்துடு முரளி"

"சரிம்மா."

"உனக்காக நான் எத்தனை பொறுத்துண்டேன். குழந்தைகளுக்காகப் பொறுத்துக்கோ முரளி. அந்தத் தவலையைப் போட்டுட்டு வேறே தவலை வாங்கிடு. வாங்கி லலிதாவுக்குக் கொடுத்துடு. அவ ஆண்டுக்கட்டும்."

"சரிம்மா."

"பசிக்கிறது முரளி."

"என்ன தரட்டும்... ஜூஸ் சாப்பிடறியா?" கைநடுங்கப் பிழிந்து, மெல்ல ஸ்பூனால் இரண்டு முறை ஊட்டினான். ஊட்டியது வாயிலேயே நின்றது. களக் களக் என்று தொண்டைக்குள் குமிழியோடு பொங்கிக் கடைவாய் வழியே வழியும் போது பிராணன் போய் விட்டது.

கதறியழ முடியவில்லை.

நெஞ்சுக்குள் ஏதோ அடைத்துக் கொண்டு உள்ளேயும் இறங்காமல் வெளியேறியும் போகாமல் அப்படியே சகலமும் விட்டுவிட்டு எங்கேயாவது போய்விட வேண்டும் என்று தோன்றிற்று. டாக்டர் வந்து பார்த்துவிட்டு இரங்கல் தெரிவித்தார். நாளை காலையில் எடுத்துப் போக ஏற்பாடு செய்வதாய்ச் சொன்னார்.

முரளி ஆட்டோ பிடித்து அம்மா வீட்டுக்குப் போனான். பக்கத்து வீட்டில் சாவி இருந்தது. திறந்து உள்ளே நுழைந்தான். நாலு நாட்களாய்ப் பூட்டியிருந்த போர்ஷன் ஒரு மக்கல் வாடை அடித்தது. அடுத்த கதவு திறக்க, பாயும் தலையணையும் தரையில் இருந்தன. நடுவே போய் நின்றான். மெல்லப் பாயில் உட்கார்ந்தான். துவண்டு தலையணையில் முகம் புதைத்தான். வெதுவெதுப்பாய்த் தலையணை கன்னத்தில் மோத, அழுகை வந்தது. உள்ளே மெல்லப் பக்கத்துப் போர்ஷன் ஆட்கள் நுழைந்தார்கள், சுற்றி நின்றார்கள்.

"கடைசி வரைக்கும் யாரையும் எதிர் பார்க்காமல் தானே சமைச்சுச் சாப்பிட்டா மாமி. அவ காலம் முடிஞ்சுப் போச்சு."

"புள்ளைமேல் அத்தனை உசிரு. என்ன பேசினாலும் புள்ளையைப் பத்தித்தான் முடிப்பா. அதிர்ந்து பேசவே மாட்டா. பெரியவாளை நன்னா வச்சுண்டு புண்ணியம் பண்ணியிருக்கலாம். கொடுப்பினையில்லே. மாமிக்கு மருமகள் வந்தும் தானே சமைச்சுச் சாப்பிடணும்னு இருக்கு."

"மருமகளுக்குக் கொடுப்பினை இல்லேன்னு சொல்லு."

"நான் அதான் சொல்றேன்."

"விடுங்கோ போறும். முரளி மேற்கொண்டு ஆக வேண்டியதைக் கவனி. எழுந்திரு. இந்தச் சந்துக்கா கொண்டு வரப் போறே? இல்லே... மாமனார் வீட்டுக்கு எடுத்துண்டு போறயா?"

கேள்வியிலேயே விலகல் தெரிந்து விட்டது. இங்கே கொண்டு வந்தால் சிரமம் தெளிவாய்த் தெரிந்தது. எட்டுக் குடித்தனமும் பட்டினி கிடக்க வேண்டும்.

முரளி எழுந்து சாவிக் கொத்தை எடுத்

தான். பீரோவைத் திறந்தான். காக்கி கவரில் காசு இருந்தது. சுருட்டி, பையில் போட்டுக் கொண்டான். வீட்டைப் பூட்டினான். ஆஸ்பத்திரியிலிருந்தே போவதற்கு முடிவாயிற்று.

காலையில் ஆஸ்பத்திரியின் பின்பக்கம் மூங்கில் கொம்பை ஒடித்தார்கள். ஓலை முடைந்தார்கள். பதினொரு மணிக்கு அம்மாவைக் கொண்டு வந்து அங்கேயே கட்டி அங்கேயே மந்திரம் சொல்லி நாலு கூலியாட்கள் தூக்க, ஆறு பேர் கூட வர, சரசரவென்று நடந்தார்கள்.

பானையைத் தோளில் வைத்து, ஓட்டை போட்டு ஜலம் வழியச் சுற்றி நடக்கிற போது கதறல் பிளந்து கொண்டு வந்தது. தோளில் இருந்த தண்ணீர் குடித்துக் கனம் குறையக் குறைய, அம்மா நழுவிப் போய் விட்டது தெளிவாய் உறைத்தது.

பொய், பொய். சகல உறவுகளும் பொய். வெறும் ஓட்டைப் பானை. உடைந்த சில். நொறுங்கி நொறுங்கிப் போ. எந்தப் பிடிப்பும் இன்றி எந்த வடிவமும் இன்றி எந்தப் பெயரும் இன்றி நொறுங்கிப் போ. பானையைப் போட்டு உடைத்த நேரம் மனசே சூன்யமாயிற்று. சகலரும் இனி ஒட்டாஞ்சல்லிதான். ஒன்றுக்கும் உதவாத விஷயம்தான். உனக்கும் இதுவே முடிவு. உன்னுடைய இடமும் இதுவே. வாய்க்கரிசி போட்டு விட்டு நிமிரும்போது சங்கரன் அருகே வந்தார். தானும் ஒரு பிடி அள்ளிப் போட்டார். ஒதுங்கி நின்று கொண்டார். கொள்ளி வைத்துப் புகைந்ததும் திரும்பிப் பார்க்காமல் நடக்கச் சொன்னார்கள். முரளி நடந்தே அம்மா வீட்டுக்குப் போனான். வாசலில் ஜலம் ஊற்றினார்கள். அடுத்த வீட்டில் சாதம் போட்டார்கள். முரளி அயர்ந்து தூங்கினான். இரவு குளிரெடுத்தது. எழுந்து அறையில் கிடந்த அம்மாவின் புடைவையை எடுத்துப் போர்த்திக் கொண்டான்.

மறுநாள் எழுந்து குளித்துவிட்டு, தான் மட்டும் ஆட்டோ பிடித்து, சாஸ்திரிகள் கொண்டு வந்த பாலை ஊற்றி அக்கினியைச் சமனப்படுத்தி அஸ்திகள் எடுத்துக் கடலில் போட்டு விட்டு வந்தான்.

''பத்து காரியம் எங்கே பண்றே முரளி?''

''சாவடில பண்ணிக்கலாம்.''

''சகதர்மிணி வருவாளா?''

''மாட்டா.''

''வரணுமே?''

''வர மாட்டா.''

''கர்மாவுக்குச் சகதர்மிணி அவசியம் வரணும்.''

''வரலேன்னா பண்ண முடியாதா?''

''செய்யலாம். தர்ப்பையைச் சகதர்மிணின்னு வச்சுண்டு செய்யறது உண்டு.''

''அப்படியே செய்வோம்.''

''கூப்பிட்டுப் பாரேம்பா.''

''எனக்கு ஒரு தர்ப்பை பொண்டாட்டியா இருக்கட்டும். அது போதும்.''

பத்தாம் நாள் காரியத்துக்குச் சங்கரன் ஜெனரல் மானேஜரோடு வந்தார். லலிதா வரவில்லை. குழந்தையும் வரவில்லை.

முரளி காலுக்கு அருகே இருந்த தர்ப்பையைப் பார்த்துச் சிரித்தான்!

(தொடரும்)

லக்மே ஷாம்ப்பூ

அனைத்திலும் முதலான ஷாம்ப்பூ+கண்டிஷனர்.

லட்சக் கணக்கான மகளிர் தங்கள் கூந்தலின் அழகுப் பராமரிப்பிற்கு இது உன்னதம் என்பதைக் கண்டு கொண்டுள்ளனர்.

7 ஆண்டுகளுக்கு முன்பு, ஷாம்ப்பூ + கண்டிஷனர் எனும் கருத்தை, முதலில் அறிமுகப்படுத்தியது லக்மே.

லட்சக்கணக்கான மகளிர் ஏனைய ஷாம்ப்பூக்களை விட, ஷாம்ப்பூ + கண்டிஷனர் மிகச் சிறந்த இயல்புகள் கொண்டது என்றுணர தொடங்கினர் மிக விரைவிலேயே.

இயற்கைதானே!

ஏனைய ஷாம்ப்பூக்களைப் போலன்றி, லக்மே ஷாம்ப்பூ உள்ள கண்டிஷனர், ஒவ்வொரு முடியிழைக்கும் ஒரு மினுமினுப்பான பூச்சினை அளிக்கிறது. இதனால் கேசம் மிருதுவாக, பட்டுப்போல் ஒளிர்கிறது. கேசத்தைப் படிய வைப்பதும் எளிதாகிறது எனவே, இந்தியாவின் அதிக விற்பனையுள்ள நம். 1 ஷாம்ப்பூ + கண்டிஷனராக இது வளர்ந்ததில் வியப்பில்லை.

இன்று, லக்மே ஷாம்ப்பூ + கண்டிஷனர் ஏனைய ஷாம்ப்பூக்களை விடச் சிறந்தது மட்டுமல்ல; உங்கள் கேசத்திற்கு முற்றிலும் சிறந்த ஷாம்ப்பூ + கண்டிஷனரும் இதுவே.



+கண்டீஷனர்.

அனைத்திலும் சிறந்த ஷாம்ப்பூ+கண்டீஷனர்.

இது, ஏன் ஏனைய ஷாம்ப்பூ ப்ளஸ் கண்டீஷனரை விட சிறந்தது என்பதற்கு அழகான 4 காரணங்கள்

1 **எல்லா வகை கேசத்திற்கும் உகந்தது.**

கேசம் 4 வகை. சாதாரண கேசம். உலர்ந்த கேசம். எண்ணெய்ப் பசையுள்ள கேசம், போஷாக்கற்ற கேசம். லக்மே ஷாம்ப்பூ + கண்டீஷனர் மட்டுமே எல்லா வகைக் கேசத்திற்கும் 4 வகைகளிலே கிடைக்கிறது.

மேலும், லக்மே மட்டுமே எக் ஷாம்ப்பூ + கண்டீஷனரை வழங்குகிறது.

2 **சரிவிகிதமான கண்டீஷனர்.**

அதிக அளவு கண்டீஷனர் இருக்குமானால், பலமுறை பயன்படுத்தியதும், கேசத்திலே கண்டீஷனர் தங்கிவிடுகிறது. இதனால் கேசம் கனமாக, எண்ணெய்ப் பிசுக்குப் படியாமல் போகிறது.

லக்மே ஷாம்ப்பூ மட்டுமே சரிவிகித கண்டீஷனர் கொண்டது. ஷாம்ப்பூ செய்யச் செய்ய, இது உங்கள் கேசத்தை மிருதுவாகவும், பட்டுப்போலவும், படிந்தும் இருக்கச் செய்கிறது.

3 **உங்கள் கேசத்திற்கு இதமான ஷாம்ப்பூ.**

கடுமையான ஷாம்ப்பூ ப்ளஸ் கண்டீஷனர், உங்கள் கேசம் மற்றும் மண்டை மேல் தோலிலுள்ள இயற்கையான எண்ணெய்களைக் கழுவிக் களைந்து, கேசத்தை உலரச்செய்து, சொரசொரப்பாகச் செய்கிறது.

லக்மே ஷாம்ப்பூ + கண்டீஷனர் மட்டுமே ஒவ்வொரு வகை கேசத்திற்கும் ஏற்றவாறு, மாறுபட்ட அளவு, இதமாகச் சுத்தமாக்கும் பொருள்களடங்கி வருகிறது. இவை உங்கள் கேசத்தின் இயற்கையான எண்ணெய்களை விடுத்து, அழுக்கையும் பிசுபிசுப்பையும் கழுவிக் களைகின்றன.

4 **பணத்திற்கு முழு மதிப்பு.**

ஏனைய ஷாம்ப்பூ ப்ளஸ் கண்டீஷனர்கள், லக்மேயை விட 20% வரை விலை அதிகம்.

லட்சக் கணக்கான மகளிர் கண்டுணர்ந்துள்ளனர் —உண்மையிலேயே லக்மே ஷாம்ப்பூ + கண்டீஷனர் மிகச் சிறந்தது என்று.

நீங்கள்?



லக்மே

இந்தியாவின் நெ.1 ஷாம்ப்பூ+கண்டீஷனர். 7 ஆண்டுகளாக.

ஐயோ!

"எல்லாம் கச்சிதமா இருக்கணும் புரிஞ்சுதா? — பளிச்சென்றிருந்த வெண்கலப் பிள்ளையாருக்கு ஒன்பதாவது தடவையாக 'ப்ராஸ்லோ' விறுல் மேக்கப் போட்டுக் கொண்டே கேட்டார் கிருஷ்ணன்.

"மாலும் ஹை!" பாதாமைத் துகிலுரித்துக் கொண்டே, டீ. வி. யிலிருந்து கற்றுக் கொண்டிருந்த ஒன்றிரண்டு இந்தி வார்த்தைகளால் அலட்டிக் கொண்டிருந்தாள் ராஜம்.

இடுப்பு வரை இருந்த மாருதியை ஆசையாகத் தழுவிக் கொண்டிருந்தான் பரத் — "பார்த்ததுமே அசத்திடணும்டா கண்ணு" என்று அதைச் செல்லமாகத் தட்டிவிட்டு, போர்ட்டிகோவை, முப்பத்தாறுவது தடவையாகச் சுத்தப்படுத்தினான். நிஷா முகத்தில் ஆலிவ் ஆயில் அபிஷேகம் நடந்து கொண்டிருந்தது. இன்னும் பாலேடு, லெமன் ஜூஸ், மஞ்சள் பொடி, கடலை மாவு, சந்தன சோப் அபிஷேகங்கள் பாக்கி இருந்தன.

அன்றுதான் நிஷாவை முதன் முதலாகப் பெண் பார்க்க, விஷால் குடும்பத்தினர் வருகின்றனர். விஷால் புளியங்கொம்பு ரகத்தைச் சேர்ந்த வரன். டாக்டர்; ஃபாரின் ரிட்டர்ண்ட், ஒரே பிள்ளை, எக்கச்சக்கச் சொத்து, பார்க்க ராஜா மாதிரி; வேறு பிக்கல் பிடுங்கல் இல்லை....

எப்படியாவது அவர்களை வளைத்துப் போட்டுவிட வேண்டும் என்பதில், அப்பா, அம்மா, அண்ணன் எல்லோரும் முனைப்பாயிருந்தது நிஷாவுக்கு வேடிக்கையாயிருந்தது. அவள் கூட மனசிலிருந்து ரவிசாஸ்திரி, சங்கி பாண்டே, பாட்காஷ், போரிஸ் பெக்கர் எல்லோரையும் தற்காலிகமாக விரட்டி விட்டு ஃபோட்டோவில் பார்த்த விஷாலைக் குடியேற்றியிருந்தாள். ஃப்ரிஜ், டீ. வி., வீடியோ, ஸோஃபா, தரை விரிப்புகள், திரைச் சீலைகள், பாத்திரங்கள் — எல்லாமே புதுமணப் பெண் போல் பளிச்சிட்டன.

"ம்..ம்... எல்லாம் ஓ.கே!... ஆனால்... இந்த வயசான மாமனாரும், மாமியாரும்..!" ராஜத்தின் கண்களில் தூக்க இடறியது. கிருஷ்ணனின் கண்கள் தவித்தன.

இத்தனை நாட்களாகக் கும்பகோணத்தில் 'அக்கடா' என்றிருந்தவர்கள் இப்போது பார்த்துத்தானா இங்கே வந்து 'டேரா' போட வேண்டும்? கும்பகோணத்தில் கொசுக்களுக்கும் சத்துணவு கிடைக்கும் போலும்! அத்தனை சத்தையும் அவை கிழவியின் பாதங்களுக்கே காணிக்கையாக்கியிருந்தன. போதாக்குறைக்கு, வாயைத் திறந்தால், ஊர்ப்பட்ட உறவுகள் வந்து விழும்... "அந்த மெலட்டூர் ஜானகிபிள்ளைக்கு, திருக்காட்டுப் பள்ளி மீனுவோட நாத்தனார் சிங்காநல்லூரார் லக்ஷ்மி பொண்ணைக் குடுத்திருக்கே?" என்று அவள் ஆரம்பித்தால்... கேட்பவர் பி. டி. உஷாவுக்குப் போட்டியாக ஓடத் தயாராகிவிடுவார்.

கிழவர் இருக்கிறாரே — மற்றவர்களெல்லாம் பேச்சுக்கிடையே இருமுவார்கள்; இவர் இருமலுக்கிடையே ஒன்றிரண்டு வார்த்



இந்தக் கிழங்கள்!

தைகளும் பேசுவார்! வாயை மூடிக் கொண்டு மிருக்க மாட்டார். எந்த நல்ல காரியம் நடந்தாலும் தம் இருமலுடன்தான் துவக்க விழா நடத்த வேண்டும் என்ற நியதியைக் கடைப் பிடித்து வந்தார்.

"யானைக்காலும் ஆஸ்துமாவுமா டாக்டர் மாப்பிள்ளையை எதிர் கொண்டால் திவ்விய மாகத்தானிருக்கும்" என்று ராஜம் சிடுசிடுத்தாள்.

"என்ன செய்ய முடியும் சொல்லு..." என்று கிருஷ்ணன் கையைப் பிசைந்தார்.

"பேசாமல் என் தம்பி வீட்டுல கொண்டு விட்டுடுங்கோ. அவா நாலு மணிக்குத் தானே வரப் போறா. இப்போ பதினொண்ணு தான் ஆறது: அவன்கிட்டே விஷயத்தைச் சொல்லி. இவாளை அங்கே சாயங்காலமாப் போய்க் கூட்டிண்டு வரலாம்."

கிருஷ்ணனுக்கும் அது நல்ல யோசனையாய்ப் பட்டது. பரத் காரை எடுக்கத் தயாரானான்.

"அம்மா... என் தம்பி ரொம்ப நாளா உங்களைக் கூப்டுண்ட..." ராஜம் முடிக்கும் முன்பே வாசலில் 'பீம்... பீம்...' ஒலி கேட்டது. அடடா! யாரது? மாப்பிள்ளை வீட்டுக் காரர்களா?

"இவ்வளவு சீக்கிரமா? அட கடவுளே!"

கையில் அழுக்குத் துணியுடன் கிருஷ்ணன்; பாதாம் தோலிகளும் தூக்கிச் செருகிய புடைவையுமாய் ராஜம்; மெக்கானிக் தோற்றத்தில் பரத்: எண்ணெய் வழிய வழிய நிஷா!... அனைவரும் ஸ்தம்பித்தனர்.

கிழவர்தான் நிலையிலிருந்தார். "யா... ரு?" என்பதைத் தொடர்ந்து. சினிமாக்களில் அகல் விளக்கு காற்றிலாட. உயிரை விடப் போகும் கேரக்டர்கள் இருமுவார்களே... அதே ரீதியில் ஒரு தொடர் இருமலை அவிழ்த்து விட்டார்.

நிஷாதான் முதலில் சுதாரித்துக் கொண்டவள். அவசர அவசரமாக. இருமலை நிறுத்த. ஒரு டம்ளர் தண்ணீரையும் மாத்திரைகளையும் அவர் வாயில் திணித்தாள்.

விஷாலின் அம்மாவைப் பார்த்து. "நீடாமங்கலம் சுப்பண்ணா பேத்தி சாலுக்குட்டியோட பிள்ளை ராஜாமணி பொண்ணுதீ..?" என்று ஆரம்பித்த கிழவியிடம். பல்லைக் கடித்துக் கொண்டு பணிவாய். "இல்லே பாட்டீ... இவாள்ளாம் வேறே" என்று கிசுகிசுப்பாகக் கூறி அவளைப் பக்கத்திலிருந்த நாற்காலியில் அழுத்தி, புடைவையை இழுத்து விட்டு நைஸாகக் காலை மறைத்தாள்.

"ராத்திரி ஃப்ளைட் கான்சலாயிடுத்து. சாயங்காலமே விஷால் போயாகணும். அதான் ஃபார்மாலிடியெல்லாம் வேணும். அப்படியே பார்த்துடலாம்னு..." சீக்கிரம் வந்த காரணத்தை அவர்கள் விளக்கிக்



கொண்டிருக்க, பெண்கள் பட்டுப் புடைவைகளையும் நகைகளையும் பூட்டிக் கொள்ள ஓடினர்.

கிழவிதான் எவ்வளவு சொல்லியும்கேளாமல், காப்பி போட்டு, தயாராயிருந்த தூத்பேடாவையும் மிக்ஸரையும் கொண்டு வந்து வைத்து உபசரித்தாள். கிழவர் இருமலுக்கிடையே, பேத்தியின் பெருமைகளை விஷாலுக்கு விளக்கிக் கொண்டிருந்தார்.

ஒருவழியாகப் பெண், அவள் அம்மா, அப்பா, அண்ணன் எல்லோரும் தயாராகி வருவதற்கும், வந்தவர்கள் ''நேரமாயிடுத்து'' என்று அவசரமாக விடைபெற்றுக் கிளம்புவதற்கும் சரியாக இருந்தது —

''நாங்க போய் லெட்டர் போடறோம்.''

ராஜத்துக்கு உலகமே இருண்டது. ''உங்கம்மா லொட லொடன்னு என்னத்தை உளறிக் கொட்டினாளோ? அந்த மாமி மூஞ்சி உம்முனு இருந்தது...''

''தாத்தா வேறே லொக்கு லொக்குன்னு.. அந்த விஷால் செம்மையா மாட்டிக்கிட்டான் பாவம்...'' — பரத் சிடுசிடுத்தான்.

''யாருக்கு எங்கேன்னு எழுதியிருக்கோ அங்கேதான் நடக்கும்'' என்று கிருஷ்ணன் எரிச்சலுடன் வேதாந்தியானார்.

நிஷாவுக்குக் கண்களில் நீர் துளித்தது. மெனக்கெட்டுப் பண்ணிக் கொண்ட அலங்காரத்தை அந்த விஷால் பார்க்கக் கூட இல்லையே!

சில நாட்களில் மாமனும் மாமியாரும் ''நாங்க ஊரைப் பார்க்கக் கிளம்பறோம்'' என்றதும், ''அடுத்த ரயிலுக்கே டிக்கெட் வாங்குடா'' என பரத்தைக் கிளம்பச் சொன்னான் ராஜம்.

எல்லோரும் விஷாலை மறக்க ஆரம்பித்தனர். கிருஷ்ணன் புதிய ஜாதகங்களில் ஆழ்ந்தார். நிஷா கூடச் சங்கிப் பாண்டேயைப் பழையபடி மனசிலிறுத்தினாள்.

திடீரென்று ஒருநாள், நீண்ட கவர் ஒன்று போஸ்டில் வந்தபோது கிருஷ்ணன் பரபரப்பானார். விஷாலின் தந்தைதான் எழுதியிருந்தார்.

''இப்போதெல்லாம் அழகான, படித்த, புத்திசாலியான, சம்பாதிக்கிற பெண்கள் கிடைப்பது சுலபமாயிருக்கிறது. வயசானவர்களிடம் அன்பும், மரியாதையும், பொறுமையும் காட்டும் பெண்கள்தான் இந்தக் காலத்தில் அபூர்வம். பெண் பார்க்கும் போதே தனிக்குடித்தனம் என்ற கண்டிஷனைப் பலர் போடுகின்றனர். அந்தக் காலத்துக் கூட்டுக் குடும்ப முறையே அழிந்து கொண்டு வருகிறது.

கூட்டுக் குடும்பத்தில் தங்களுடைய தனித்தன்மை மறைந்து விடுவதாகப் பல பெண்கள் கூறுகின்றனர். பத்துப் பேருள்ள குடும்பத்தில் தன் தனித்தன்மையைக் காட்டத் தெரியாத பெண், பத்தாயிரம் கோடி மக்கள் வாழும் சமுதாயத்தில் என்னத்தைச் சாதித்து விடப் போகிறாளோ தெரியவில்லை!

அந்த விதத்தில், உங்கள் குடும்பம், பெரியவர்களை ஒதுக்காமல், அவர்களுடன் சேர்ந்திருப்பது, சந்தோஷமாக இருந்தது.

எங்களுக்கு விஷால் ஒரே பையன். நாளை எங்களுக்கும் மூப்பு வரும்; அப்போது எங்களை ஒதுக்காமல் உங்கள் பெண் அன்போடும் பரிவோடும் குடித்தனம் செய்வாள் என்ற நம்பிக்கை எங்களுக்கிருக்கிறது. உங்கள் அரவணைப்பில் வளர்ந்தவள் உங்களைப் போலவே இருக்கிறாள். தாத்தாவின் இருமலுக்கு உடனடியாக மருந்தைக் கொண்டு வந்தாளே! பாட்டியின் கேள்விக்கு எவ்வளவு பொறுமையாகப் பதிலிறுத்தாள்! வீ வேர் ஹைலி இம்ப்ரெஸ்ட்....''

கடைசி வரிகளைப் படித்ததும் குடும்பமே கும்பகோணத்துக்குப் பறந்தது!

— ஜெயஸ்ரீ ராஜ்



போலீஸ்காரர்: ஏய்! சைக்கிள்! கேன்ல என்னடா?

சைக்கிள்காரர்: சத்தியமா தண்ணீர் இல்லீங்க. அவ்வளவும் சாராயம்தான்!

— பொடுசி

''நெய் அசலாக இருக்கும் போலிருக்கே?''

''கரெக்ட்! எப்படி கண்டு பிடிச்சீங்க?''

''ஒரு சொட்டுக் கூட இலையிலே விழாம, லாகவமாய் உங்க மனைவி நெய் ஸ்பூனைக் காட்டினாங்களே! அதை வைச்சுத்தான் சொல்றேன்!''

— இதயாப்ரியன்





சிவசங்கரி

எழுதும்

நெஞ்சை நெகிழச் செய்யும்

வித்தியாசத் தொடர் கதை

இல்லாத மரங்கள்

கல்கி

அக்டோபர் 18ல்

தீபாவளி சிறப்பிதழில் ஆரம்பம்.

ராஜாஜி வாழ்க்கை வரலாறு — IV
ராஜ்மோகன் காந்தி

9

கவர்னர் ஜெனரலாக இருந்து ஓய்வு பெற்றவருக்கு மாதம் ரூபாய் ஆயிரம் பென்ஷன் தொகை வர ஆரம்பித்தது. உண்மையிலேயே ஸி. ஆர். ஓய்வு பெற்று விட்டாரா? சில சமயம் அப்படித்தான் தோன்றியது. பெங்களூரிலிருந்த இளமைக் கால நண்பர் நவரத்ன ராமராவுக்கு ஸி. ஆர். எழுதினார்:

"நீண்டகாலம் இடைவிடாமல் பணியாற்றி ஓய்வு பெறும் வயதான வீரர்களுக்கு மறுபடியும் ஏதேனும் வேலை மேற்கொள்ள வேண்டும் என்ற ஆசை எழும். இந்த வயதில் ஓர் இளம் பெண்ணை மணந்து கொண்டு அவளைக் கவனித்துக் கொள்வது என்பது எவ்வளவு அபத்தமோ அத்தனை அபத்தமானது அந்த ஆசை!" (20.3.50).

நவரத்ன ராமராவ் புதிதாக ஒரு பணியை மேற்கொள்ள ஆசைப் பட்டதையொட்டி அவருக்கு எழுதப்பட்ட கடிதம் இது என்றாலும் இதில் ஸி. ஆர். தமக்குத் தாமேயும் அறிவுரை வழங்கிக் கொள்வதாகக் கருதலாம். இனி அவர் தமக்குப் பிடித்தமான காரியத்தை மட்டும் செய்தாலே போதும். மீண்டும் நிறைய எழுத ஆரம்பிக்கலாம். ஆனால் கண்கள் தொந்தரவு கொடுத்தன. பூச்சி பறப்பது போல் கரும் புள்ளிகள் தெரிய ஆரம்பித்தன. ஆனால் அவை நாளாவட்டத்தில் கரைந்து போய் விடலாம் என்று டாக்டர் சொன்னார். "கரைந்து 'விடும்' என்று கூறாமல் 'விடலாம்' என்று சொன்னார் பார்த்தீர்களா! அதுதான் முக்கியம்! அதில், பங்கு மார்க்கெட்டில் நமது பங்குகளின் விலை உயரப் போகிறதா, வீழ்ச்சி அடையப் போகிறதா என்று எதிர்நோக்கும் பரபரப்புக் குடிகொண்டிருக்கிறது!" என்று ராமாராவுக்குக் கடிதம் எழுதினார் ஸி. ஆர்.

பரபரப்பும் நிச்சயமற்ற தன்மையும் கண்களில் மட்டுமில்லை. புதுதில்லிக்கு ஸி. ஆர்., திரும்பி வரவேண்டும் என்று நேரு கடிதம் எழுதிக் கொண்டிருந்தார். குடியரசுத் தலைவராக யாரைக் கொணர்வது என்பதில் நேருவின் விருப்பம் மதிக்கப் படவில்லை. ஆனால் வேறு ஏதேனும் ஒரு விதத்தில் ஸி. ஆர். புதுதில்லிக்கு வர முடியாதா? எந்த விதத்தில்?

ஏப்ரல் இறுதியில் ஸி. ஆர். புதுதில்லிக்கு விமானமேறியபோது பல விதமான கிசுகிசுக்கள் எழுந்தன. "டில்லி பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகப் போகிறீர்களா?" என்று கூட ஒரு நிருபர் கேட்டார். துணைவேந்தர் பதவி ஏற்பது என்றால் சென்னை **பல்கலைக் கழகத்தில் ஏற்கவே** விரும்புவேன்" என்று ஸி. ஆர். பதிலளித்தார். மேலும் நிருபர்கள் கேள்வி கேட்டுக் குடைந்த போது, கூப்பிய கரங்களுடன் மலர்ந்த புன்னகை மட்டுமே பதிலாக அமைந்தது.

ஜவஹர்லால், அமைச்சரவையில் ஸி. ஆர். இருக்கவேண்டும் என்று விரும்பினார். பட்டேலுக்கும் தமக்கும் இடையில் ஸி. ஆர். இருப்பது தமது கரத்தைப் பலப்படுத்தும் என்று கருதினார். ஆனால் பட்டேலிடம் அவரது அபிப்பிராயத்தைக் கேட்க வேண்டிய நிலையில் நேரு இருந்தார். பட்டேல் உடனே பதிலளித்தார்: "எனக்கு இந்த யோசனை ரொம்பவும் பிடித்திருக்கிறது; ஸி. ஆர். அற்புதமான ஓர் அயல் விவகார அமைச்சராக விளங்குவார்!"

இந்தப் பதில் நேருவைத் தர்மசங்கடத்தில் ஆழ்த்தியது. தர்மசங்கடத்தில் அவரை ஆழ்த்துவதற்காகவே தரப்பட்ட பதில் தானே! அயல் விவகாரத்துறையை நேருவே கவனித்து வந்தார். அதில் அவருக்கு அசாத்திய ஈடுபாடு — பற்றுதல் இருந்தது. அதனை ஸி. ஆருக்கு அவர் தரவில்லை. ஆனால் நிதி அமைச்சரவையை ஸி. ஆரிடம் ஒப்படைக்கலாம். அதில்லையென்றால் திட்டக் கமிஷன்



• தேஷ்முக்

• நவரத்ன ராமராவ்.



இல்லாத அமைச்சர்!

தலைவராக ஸி. ஆரை நியமிக்கலாம். இரண்டுமே மிகவும் கடினமான பணிகள் என்று ஸி. ஆர். கருதினார். அவ்வளவு பாரத்தைச் சுமக்க வயதுக் காலத்தில் தம்மால் முடியாது என்றார். கடைசியில் மூவருமாகச் சேர்ந்து ஒரு முடிவுக்கு வந்தார்கள். ஸி. ஆர். இலாக்கா ஏதுமற்ற அமைச்சராக அமைச்சரவையில் இடம் பெறுவார் என்பதுதான் அந்த முடிவு. (Minister without portfolio). இம்முறையில் ஸி. ஆருக்குச் சுமை அதிகம் இராது. ஆனால் அதே நேரத்தில் அமைச்சரவைக் கூட்டங்களிலும் மற்ற பல கமிட்டி நடவடிக்கைகளிலும் பங்கு கொண்டு எந்தப் பிரச்னையிலும் தமது முதிர்ந்த அறிவின், அனுபவத்தின் பலனான ஆலோசனைகளை வழங்க முடியும்.

ஓய்வு பெற்றவர், மீண்டும் பதவிப் பணியில் அமரும் ஆசையை அடக்கி ஆளவேண்டும் என்று ஸி. ஆர்., நண்பர் ராமராவுக்கு எழுதினாரே யொழிய, அந்த அறிவுரைப்படி ஸி. ஆராலேயே நடந்து கொள்ள முடியாமல் சந்தர்ப்பச் சூழ்நிலை அமைந்துவிட்டது. கவர்னர் ஜெனரலாக இருந்த ஒருவர் அமைச்சரவையில் சேர்வதா? அது கௌரவக் குறைவல்லவா? என்று ஸி. ஆர். எண்ணவில்லை. நேரு, பட்டேல் இருவருமே ஸி. ஆர். தங்கள் அருகிலிருப்பதை விரும்பினார்கள்; அவரால் மறுக்க முடியவில்லை. மேலும், ஆட்சித் தலைவராக இருந்த ஒருவர், ஒரு கட்சி அமைச்சரவையில் சேர்வதா என்ற ஆட்சேபக் கருத்துக்கும் ஸி. ஆர். அதிக முக்கியத்துவம் தரவில்லை.

ஆனால் 'சரி' என்று சொல்ல ஸி. ஆருக்கு எண்பது நாட்கள் ஆயின. ஸி. ஆரும் நாமகிரியும் புதுதில்லிக்குப் பறந்த போது விமான நிலையத்தில் நேரு, பட்டேல் ஆகிய இருவராலும் வரவேற்கப்பட்டனர். ஸி. ஆரின் மற்றொரு மகள் லக்ஷ்மி, கன்னாட் சர்க்கஸ் பகுதியில் வசித்து வந்தார். அங்கே தாற்காலிகமாகத் தங்கினார் ஸி. ஆர். நேரு, அவரை அவ்வீட்டில் கொண்டு வந்து சேர்ப்பித்து விட்டுத்தான் விடை பெற்றார்.

ஜூலை 15ம் தேதி ராஜேந்திர பிரசாத், ஸி. ஆருக்குப் பதவிப்பிரமாணம் செய்வித்தார். இதற்குச் சில தினங்களுக்குப் பிறகு ஸி. ஆர். நாமகிரியுடன் நெ. 1, யார்க்பிளேஸ் என்றவிலாசத்தில்குடியேறினார். விசாலமான பூந்தோட்டத்துடன் கூடிய இந்த வீடுதான் பின்னால் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியின் இல்லமாயிற்று.

பொருளாதார விவகாரங்கள் கமிட்டி கூட்டங்களை இது வரை நிதி அமைச்சர் சிந்தாமண் தேஷ்முக்தான் தலைமை தாங்கி



* ஜி. எல். மேத்தா.

நடத்தி வந்தார். இனி ஸி. ஆரைத் தலைமை தாங்குமாறு கேட்டுக் கொண்டார் நேரு. இது பற்றி தேஷ்முக் கூறுகிறார்:

"அந்நாளில் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் கமிட்டி கூட்டங்கள் தவறாமல் நடைபெறும். ராஜாஜி வருவார், தலைவருக்குரிய ஆசனத்தில் அமர்வார், என்னை நோக்கித் திரும்பி, 'மிஸ்டர் தேஷ்முக், தயவு செய்து கூட்டத்தை நடத்துங்கள்' என்பார். இது அவருடைய பெருந்தன்மையையும் பண்பாட்டையும் உணர்த்தியது.''

இந்தக் கூட்டங்களின் போது ஸி. ஆரின் பங்கு எத்தகையதாக இருந்தது? திட்டக் கமிஷன் அங்கத்தினர் என்ற முறையில் இந்தப் பொருளாதார விவகாரக் கமிட்டி கூட்டங்களில் ஜி. எல். மேத்தா பங்கெடுத்துக் கொள்வார். இவர் பின்னால் அமெரிக்காவில் இந்தியாவின் தூதராகப் பணியாற்றியவர். அவர் ஸி. ஆரின் பங்கைக் கோடி காட்டுவது போல் எழுதியிருக்கிறார்:

''ராஜாஜியின் அறிவு கூரிய கத்தி முனை போன்றது. அரசு அதிகாரிகள் கூறுவதையெல்லாம் கவனமாகக் கேட்டுக் கொள்வார். ஆனால் ஓர் அதிகாரி ஆலோசனை வழங்குதல் என்ற எல்லையைத் தாண்டித் தமது செல்வாக்கைப் பிரயோகிக்க முற்படுவதாக ஸி. ஆர். உணர்ந்தால் அதனைப் பொறுத்துக் கொள்ளவே மாட்டார்!''

வெளிவிவகாரங்கள் கமிட்டி கூட்டங்களுக்கு ஜவாஹர்லால் தாமே தலைமை வகிப்பார். இந்தக் கமிட்டியில் இருந்தவர்களில் பட்டேல், ஸி. ஆர்., கோபாலசாமி அய்யங்கார் ஆகியோர் முக்கியமானவர்கள். கோவா பிரச்னையும், சீனாவின் திபெத்தியப் படையெடுப்பும் விவாதிக்கப் பட்ட போது நேரு — பட்டேல் மோதல்கள் விகவரூபமெடுத்தன.

(தொடரும்)

நிஜங்களின் தரிசனம்



முகங்கள், முகங்கள், முகங்கள்... நான் அவற்றை வெறுக்கிறேன்.

என் மாதச் சம்பளத்தை முதல் தேதி மட்டும் முகம் முழுதும் இளித்துக் கொண்டு வாங்கிக் கொள்ளும் அப்பாவின் முகம்...

நான் இன்னொரு தோசை கேட்டால், 'சிரித்த' முகத்தோடு வார்த்துப் போடும் வயிற்றெரிச்சல் பிண்டமாகிய அத்தையின் முகம்...

பஸ் ஸ்டாப்பில் நான் எட்டரை மணிக்குப் போய் நின்றவுடன், முகத்தை ஒரு தினுசாக்கிக் கொள்ளும் பேர் தெரியாத யாரோ ஒரு பெண்ணின் முகம்...

தனிமையைத் தேடி நான் மாடிக்கு ஓடும் போது, கனகாரியமாய்த் தானும் மாடிக்கு வந்து 'போஸ்' கொடுக்கும் எதிர்வீட்டு சாந்தியின் முகம்.

தொணதொணவென்று பேசிக் கழுத்தறுக்கும் என் நண்பன் கோபாலனின் முகம்...

அப்பப்பா...

யாராவது பத்திரிகை நிருபர் மட்டும் என்னிடம் வந்து 'நீங்கள் அதிகமாக வெறுப்பவை எவை? என்று கேள்வி கேட்டால், 'முகங்கள்' என்று சொல்லாமல் இருக்க மாட்டேன்.

அன்று சாயந்திரம் ஆபீஸிலிருந்து திரும்பும் நேரம், 5.40 பஸ் நெரிசலின் கசகசப்பில், அதைச் சாதகமாக்கிக் கொண்டு, அருகில் நின்ற பெண்ணை அவள் முறைக்க முறைக்க இளித்துக் கொண்டே இடித்த யாரோ ஓர் இருபதாம் நூற்றாண்டுக் காட்டு மிராண்டி ஒருவனின் முகத்தை, என் லிஸ்டில் சேர்த்துக் கொண்டேன்.

அத்தை கொடுத்த அருமையான காப்பியை ஆத்திரத்தோடு விழுங்கிவிட்டு, அந்தக் காட்டு மிராண்டியை மறப்பதற்காக மாடிக்கு வந்தேன்.

அப்பாடா! சாந்தியின் மதிமுகத்தைக் காணவில்லை.


கைப்பிடிச் சுவரில் கடச்கடக் கையை ஊன்றிக் கொண்டு தெருவை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன். கோபாலன் ஜம்மென்று ஸ்கூட்டரில் வந்து, நிறுத்தி கையாட்டினான்.

"ஆபத்பாந்தவா! அநாதரட்சகா! மளிகைக் கடைக்காரன் என்ற முதலை வாயில் இருந்து தப்பிக்க வழி சொல்லடா..." என்றான் படி ஏறி வந்து.

"போடா" என்றேன் சுவாரசியமில்லாமல். "மாசக் கடைசியில மட்டும் இதைக் கேட்டுக் கேட்டுக் காதே புளிச்சுப் போச்சு."

"என்னடா பண்றது? மாசக் கடைசியில தானே மளிகைச் செலவு இடிக்குது."

"பெட்ரோல் செலவைக் குறை. நடராஜா



வண்டியில வா.''

''அடே அடே! சவு இரக்கமற்ற பாவி!''

''தொந்தி கரையும்டா. டு இன் ஒன்.''

''அதிருக்கட்டும். என் வீட்டிலே நானும் என் பெண்டாட்டியும்தான். உங்க வீட்டிலே மூணு பேர். எப்படிடா கட்டுப்படி யாறது?''

''தெரியாது'' என்று உதட்டைப் பிதுக்கினேன். ''எங்க அப்பாதான் நிதி அமைச்சர்!''

''தேவலைடா உங்கப்பா. அந்தக் கவலையை உனக்கு விடறதில்லை.''

''ஓஹோ! ஐயா கவலைப்பட்டுக் கவலைப் பட்டுத்தான் இப்படி மாசத்துக்கு ஒரு சுத்து பெருக்கறாராக்கும்! எந்த மளிகைக் கடையில டா அரிசி வாங்கறே?''

''டேய், டேய், திரும்பத் திரும்ப அங்கேயே வர்றியே? சரி... உன் பதில் என்ன? யெஸ் ஆர் நோ?''

''நோ'' என்றேன்.

அவன் சபித்தபடியே இறங்கிச் சென்று வாசற்படியருகே நின்று கையாட்டினான்.

அப்போதுதான் அந்த முகத்தைப் பார்த்தேன். நாற்பத்தைந்து வயதிருக்கும். வெள்ளையும் கறுப்பும் சமமாய்க் கலந்து விதைக்கப்பட்டிருந்த பத்து நாள் தாடி. அதேபோல் தலைமுடி. மெலிந்த உயரமான தேகம். பளபளவென்ற கறுப்பு. தோளில், பழுப்பேறிய பச்சை நிறத் துண்டைப் போட்டு அந்தக் காலத்துப் பெரிய டைப்ரைட்டர் ஒன்றை உறையோடு தோளில் வைத்துத் தூக்கிக் கொண்டு போய்க் கொண்டிருந்தான். சிரமப்பட்டுத்தான் அதைத் தூக்கிக் கொண்டிருக்க வேண்டும். ஆனால் முகத்தில் மட்டும் ஓர் ஆழ்ந்த, மெல்லிய இழைபோல், புன்னகை தந்த இணக்கம்.

அந்தப் புதுமுகத்தின் பெயர் சூசை என்று அப்பாவிடம் கேட்டதில் தெரிந்தது.

மறுநாள் ஆபீஸில் அவசரமாய் ஒரு பில்லை பாஸ் பண்ண வேண்டியிருந்ததில் என் பஸ்ஸைத் தவற விட்டு விட்டேன். 5.40 பஸ்ஸில் போனால் அந்தக் காட்டுமிராண்டி முகத்தில் 'முழிக்க' வேண்டியிருக்கும்.

கோபாலனிடம் 'லிப்ட்' கேட்பது என்று முடிவு செய்தேன்.

''டேய் ஓர் அவசர வேலைடா என்னைக் கொண்டு போய் வீட்டுலே விட்டுடறியா?''

''எது? எது அவசர வேலை? சாந்தியை டயத்துக்கு சைட் அடிக்கணும்னு சொல்லேன்'' என்று வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டான்.

''ரப்பிஷ். முடியுமா, முடியாதா?''

''முடியாது!'' என்றான் பட்டென்று.

''அடேய் படுபாவி... பழி வாங்கறியா?''

''ஏண்டா திட்டறே? பெட்ரோல் செலவைக் குறைன்னு நீதானே சொன்னே! ஐயா இப்போ பஜாஜ் 150 இல்லே. நடராஜா! நீ சொன்னப்பலே டு இன் ஒன்!'' என்றான் சிரிப்பு மாறாமல்.

''டேய் பழி! நான் சொன்னதுக்காகவா? என்கிட்டே பணம் இல்லேன்னா சுகுமார், மணிகண்டன்கிட்டே கேட்கலாமில்லே'' என்றேன் பதறிப்போய்.

''போடா. நீயே மாட்டேன்னுட்டே. அப்புறம் அதுகள்கிட்ட எப்படிப் போய்க் கேட்

ரேவதி ராமானுஜம்

றெது?''

பஸ் ஸ்டாப்பில் அந்தக் காட்டுமிராண்டியைக் கண்டதுமே நடந்தேவாவது வீட்டிற்குப் போகலாம் என்று முடிவு செய்துவிட்டேன். இல்லாவிட்டால் எனக்கு வரும் ஆத்திரத்தில் ஒன்று கிடக்க ஒன்றைச் செய்துவிடுவேன்.

வீட்டை அடையும் போது மணி ஆறரை.

''லேட்டாகும்னு சொல்லியிருக்கலாமில்லே. ஸ்ரீ ராமிலே 'மேல் மருவத்தூர் அற்புதங்கள்' போட்டிருக்கான். ஒனக்காகன்னு வீட்டிலேயே அடைஞ்சு கிடக்க வேண்டியிருக்கு'', அத்தை காப்பி டம்ளரோடு எதிர் கொண்டாள். ''மேட்னியாவது போயிருப்பேன்.''

''ஆமா... உன் திருக்கரத்தாலே காப்பி கொடுக்காட்டா நான் ஒண்ணும் குறைஞ்சுட மாட்டேன். போகணும்னு இருந்தா எல்லாத்தையும் செஞ்சு வச்சுட்டுப் போய்த் தொலைஞ்சிருக்க வேண்டியதுதானே? இப்பவே உப்புமா ஆறியிருக்கு...''

''நீ ஆறரை மணிக்குச் சாவகாசமா வா. உப்புமா ஆவி பறக்க இருக்கும்'' அத்தை பதிலடி கொடுத்தாள்.

அப்புறம் நான் அந்த முகத்தை அடிக்கடி பார்க்க நேர்ந்தது. என் வீட்டிற்கு எதிர்த்தாற் போலிருந்த ஒரு விளம்பர ஆப்பீஸில் தான் சூசை, வாட்ச்மேன் கம் ப்யூன் கம் அட்டெண்டர் எல்லாம்.

பாங்க் ப்ரோபேஷனரி ஆபீஸர் பரீட்சையில் நான் நப்பாசை கொண்டு முயற்சி செய்து கொண்டிருந்த நேரம். ராத்திரி பத்து மணிக்குப் படிக்க ஆரம்பித்தால், படுக்க ஒன்றரை இரண்டாகிவிடும்.

அப்போதெல்லாம் சூசை அவன் ஆபீஸில் எரிந்து கொண்டிருக்கும் மூன் விளக்கினருகே குத்துக் காலிட்டு உட்கார்ந்திருப்பான். இல்லை ரோட்டில் நடந்து கொண்டிருப்பான். நான் படுக்கப் போகும்வரை அவன் விழித்துக் கொண்டிருப்பதைத்தான் பார்த்திருக்கிறேன்.

மறுநாள் காலை நான் எழுந்து பார்க்கும் போது அசராமல் சைக்கிளில் டிசெட்டை வைத்துக் கொண்டு சென்று கொண்டிருப்பான்.

நாள் முழுவதும் வேலை பார்த்துவிட்டு இரவிலும் விழித்துக் கொண்டு... எப்போது தான் தூங்குவான் இவன்? இருந்தும் உடம்பில் ஒரு சுறு சுறுப்பு. முகத்தில் உழைப்பு தரும் உற்சாகம், பளபளப்பு!

ஊரே தண்ணீரில்லாமல் நாறிக் கொண்டிருக்கும்போது பானையில் தண்ணீர் பிடிக்காததற்காக அங்கு வேலை பார்க்கும் ஓர் அதிகாரி திட்டுவதைப் பொறுமையோடு கேட்டுக்கொண்டு நிற்பான். அவர் இந்தப் பக்கம் போனவுடன் சைக்கிளை எடுத்துக் கொண்டு உற்சாகமாக மிதித்துக் கொண்டு எங்கோ போய்க் கொண்டிருப்பான்.

சூசை! யாரப்பா நீ? உனக்கென்று குடும்பம், கவலை எதுவும் கிடையாதா? எவ்வளவு சம்பளம் உனக்கு? உன் உழைப்பின் அருமை யாவது உனக்குத் தெரியுமா? எதுவுமே உனக்கு அலுக்காதா?

இப்போதெல்லாம் சூசை எனக்கு லட்சிய புருஷனாகி விட்டான்.

சைக்கிள் காரியரில், இரும்புப் பெட்டி ஒன்றை வைக்க முயன்று கொண்டிருந்தான்

மாதம் ஒரு மாவட்டம்

கல்கி ஏற்கும் சமுதாயப் பணி

மறுபடியும் தென்னாற்காடு, காமராஜர், கோவை மாவட்டங்கள்......


கடந்த ஆண்டு செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மாதக் கல்கி இதழ்களில் தென்னாற்காடு, காமராஜர், கோவை மாவட்டங்களின் பிரச்னைகள் பற்றி எழுதியிருந்தோம். கூடவே, அந்த மாவட்டக் கலெக்டர் பேட்டியையும் வெளியிட்டிருந்தோம்.

இப்போது அந்தப் பிரச்னைகளெல்லாம் எப்படியிருக்கின்றன? தீர்வு காணப் பட்டனவா, இல்லையா? தீர்வு காணப்பட்டவற்றையும் எழுதுங்கள்; தீர்வு காணப்படாதவற்றையும் எழுதுங்கள். மறுபடியும் நமது நிருபர்கள் வரும் நவம்பர் மாதத்தில் இந்த மூன்று மாவட்டங்களுக்கும் ரீ—விசிட் செய்ய வருகிறார்கள்.

கடிதங்கள் வந்து சேரவேண்டிய கடைசித் தேதி: 20.10.87.

உடனடியாக எழுதி அனுப்புங்கள்!

— ஆசிரியர்



கூசை. ஒவ்வொரு முறை தூக்கி வைக்கும் போதும் சைக்கிள் சாயும். நான்கைந்து முறை அந்தக் கனமான பெட்டியை வைக்க முயன்று, முடியாமல் போய்விட்டது.

நாமாவது போய் உதவலாமா என்று நான் நினைத்துக் கொண்டிருக்கும் போதே ஒருவழியாய் அவனே தூக்கி வைத்து விட்டான். அவன் பொலிந்த தேகத்தில் வியர்வை ஊற்று. உள்ளே போய், சணல் கொண்டு வந்து கட்டினான்.

முதலில் வியர்வையைத் துடைத்துக் கொள் என்று சொல்லத் துடித்தேன். சைக்கிளில் ஏற முயற்சி செய்த போது கனம் தாங்காமல் அது ஒரு பக்கமாய்ச் சாய்ந்தது. சமாளித்து ஏறி இரண்டு மிதி மிதித்திருப்பான்.

ஆபீஸ் உள்ளேயிருந்து ஒருவன் ஓடி வந்து, இவன் பெயர் சொல்லிக் கை தட்ட, இவனும் இறங்கி சைக்கிளை வளைத்துக் கொண்டு போய்க் கேட்க, அவன் ஏதோ சொன்னான். முகத்தில் எவ்வித மாற்றமுமில்லாமல், மெதுவாய்ச் சணலை அவிழ்க்கத் துவங்கினான். சைக்கிள் காரியரிலிருந்து காலை தாக்குக் கொடுத்து மெதுவாய்ப் பெட்டியை இறக்கினான் கூசை.

ஆபீஸ் உள்ளேயிருந்து டிப்டாப்பான ஒருவன் வந்து, கும்பிட்ட கூசையைப் பார்த்து ஒரு முறுவலை வீசிவிட்டு சைக்கிள் ஏறி மிதிக்க, கூசை மூச்சு வாங்கப் பெட்டியை ஆபீஸ் காம்பவுண்டு சுவரில் தூக்கி வைத்து, பின் தோளில் ஏற்றிக் கொண்டு மெள்ள நடக்கத் துவங்கினான்.

எனக்கு, அடிவயிற்றில் குபீரென்று ஆத்திரம் வெடித்த அதே நேரத்தில், ஏதோ ஒன்று விளங்குவதாகத் தோன்றிற்று.

ஒருவனுக்குச் சுகமான சவாரியைக் கொடுக்கத் தான் பாரம் சுமக்கும் கூசையின் முகத்தில்—

எனக்குச் சுமையில்லாத, சுதந்திர வாழ்க்கையைக் கொடுக்க குடும்ப பாரம் சுமக்கும் அப்பாவின் முகம் ஏன் தெரியவில்லை?

ராத்திரி முழுதும் விழித்தும் கூட காலையில்,தானே எல்லோருக்கும் காப்பி வாங்கிக் கொடுக்கும் கூசையின் முகத்தில்—

நாள் பூரா வீட்டு வேலை செய்துவிட்டு, சினிமா பார்க்க ஆசையிருந்தும் தன் கையாலேயே எனக்கு டிபன் கொடுக்க நினைக்கும் அத்தையின் முகம் ஏன் தெரியவில்லை?

எவனோ சொல்லிவிட்டான் என்பதற்காக, சுமக்க முடியாத பெட்டியைத் தூக்கிக் கொண்டு நடக்கும் இந்தக் கூசையின் முகத்தில் —

நான் சொன்னேன் என்பதற்காக நடந்தே அலுவலகம் வரும் கோபாலனின் முகம் ஏன் தெரியவில்லை?

கடவுளே! இத்தனை நாள், நாணயத்தின் ஒரு பக்கத்தை மட்டுமே பார்த்துக் கொண்டிருந்த முட்டாளா!

என் மனத்தில் நான் எழுதி வைத்திருந்த 'முகங்கள்' லிஸ்டைச் சுக்குச் சுக்காகக் கிழித்துப் போட்டேன்.

டாக்டர் சிரித்தால் பேஷண்ட் பிழைப்பார்!



• "அந்த டாக்டர் எதிலே ஸ்பெஷலிஸ்ட்?"

"ஃபீஸ் வாங்குவதில்"

— சி. எஸ். ராஜா, ஈரோடு—11.

• டாக்டர்: "எங்கே, 'ஆ' காட்டுங்க?"

நோயாளி: "ஆ"

டாக்டர்: "எங்கே, 'பா' காட்டுங்க?"

நோயாளி: "அது, என்ன டாக்டர், 'பா'? புதுசா, இருக்கே?"

டாக்டர்: "வேற, ஒண்ணுமில்லே! உங்க சட்டை பாக்கெட்டு!"

— ஆர். அப்துல் சலாம், திருச்சி

• நோயாளி: ஐயோ டாக்டர்! வயித்தவலி தாங்க முடியலியே! ஏதாவது மருந்து கொடுங்க!

டாக்டர்: வயித்தவலிய பத்தியெல்லாம் எனக்கு பாக்கத் தெரியாதுப்பா! நான் பரீட்சைல வயித்தவலி சம்பந்தப்பட்ட கேள்வியெல்லாம் 'சாய்ஸ்'ல விட்டுட்டேன்!!!

— கி. எழில், மயிலாடுதுறை.

• நர்ஸ்: கண் ஆபரேஷன் பண்ண வந்தவருக்குத் தெரியாத்தனமாகக் காது ஆபரேஷன் பண்ணி விட்டார்.

மற்றவர்: அப்புறம் என்னவாயிற்று?

நர்ஸ்: இப்போ காது வழியாகத்தான் பார்க்கிறார்.

— எம். சந்திராவேலாயுதம் சென்னை—33.

• "டாக்டர், நீங்க எழுதிக் கொடுத்த மருந்துச் சீட்டை மருந்துக்கடையிலே புரியலேன்னுட்டாங்க, இந்தாங்க!"

"அட! இது மருந்துச் சீட்டு இல்லேப்பா. நான் நர்சுக்கு எழுதின காதல் கடிதம்!"

— ச. பழனிநாதன், கும்பகோணம்.

• டாக்டர்: அடடா, நோயாளியை விட்டு விட்டுக் கூட வந்த உங்களுக்கு அபெண்டிசைடிஸ் லவா ஆபரேஷன் செய்துவிட்டேனே!

கூடவந்த ஆள்: கவலைப்படாதீங்க. உண்மையிலேயே நான்தான் நோயாளி. இப்படி ஏதேனும் ஆள் மாறாட்டம் ஆகும்னு தெரிஞ்சுதான், அவரை நோயாளியாய் அட்மிட் பண்ணி நான் கூட வந்தேன்!

டாக்டர்: !!!!

— ஆர். எஸ். மூர்த்தி, பம்பாய்.

• டாக்டர்: ஆபரேஷனை ஆரம்பிக்கப் போகிறேன். நீங்க ஒரே ஒரு உறுதிமொழி கொடுக்கணும்!

நோயாளி: சொல்லுங்க, டாக்டர்!

டாக்டர்: நீங்க இந்த ஆபரேஷன்லே பிழைக்கலேன்னு பேயா மாறி எனக்குத் தொல்லே கொடுக்கக் கூடாது!

— கமால் பாஷா, சென்னை—30.

• டாக்டர்: (போனில்) ஹலோ, அம்மாவா பேசறது? நான் க்ளினிக்லேருந்து பேசறேன். எனக்கு வயித்து வலி தாங்க முடியலே. வீட்டிலே ஏதோ கஷாயம் வச்சித் தருவியே... அதைச் சீக்கிரம் கொடுத்தனுப்பு.


— ஏ. எஸ். மணி, ஈரோடு.

• "எதுக்கு ஆபரேஷன் தியேட்டர் வாசலில் மெட்டல் டிடெக்டர் வச்சிருக்கு?"

"ஆபரேஷன் முடிஞ்ச பேஷண்டை வெளியே கொண்டுவரும் போது செக் பண்றதுக்குத்தான். ஏதேனும் கத்தி, கத்தரிக்கோல் முதலியன பேஷன்டோட உடம்புக்குள் இருந்தால் அது கண்டு பிடித்துக் காட்டிவிடும்!

— கே. ஜே. புவனேசுவரி, கோவை.

(ரூ. 200/— பரிசை ஒன்பது பேர் சமமாகப் பகிர்ந்து கொள்கின்றனர்.)



தப்பினார்!

கோர்பச்சேவைக் கொல்லச் சதி நடந்ததாமே?

* ஆர். ஜெ. பாலன், சிவகங்கை.

? தமிழகத்துக்கு வந்த ராஜீவ், டிகாக்ஷன் காப்பி இல்லாமல் ஏமாற்றமடைந்தாராமே — இதுபற்றி...?

! அதென்னவோ வாஸ்தவம்தான் ஸார்! முன்பெல்லாம் தமிழ் நாட்டில் எந்த டவுனிலும் ஹோட்டலில் நுழைந்து, காப்பி கேட்டு, வந்ததும், பித்தளை டம்ளர் காப்பியை டபராவில் விட்டு ஆற்றினால் ஆவியுடன் மணமும் மூக்கைத் துளைக்கும். இப்போது காப்பி என்றால் கழுநீரைச் சுட வைத்த மாதிரி எதையோ கொண்டு வந்து வைக்கிறார்கள். ஸ்பெஷல் காப்பி என்றால் இளர் காப்பித்தூள்தான் மேலே மிதக்கிறது. இந்த ஒரு விஷயத்தில் மட்டும் நான் பழங் காலத்து ஆசாமிதான். ஒரு வேளை காப்பி சாப்பிட்டாலும் போதும். வாராவாரம் குண்டுக் கொட்டையை வீட்டிலேயே வறுத்து, அன்றன்றைக்கு அரைத்து, உடனே, டிக்காக்ஷன் இறக்கிக் கலந்து சாப்பிட்டால்தான் திருப்தி!

* வி. பாலு, கான்பூர்.

? உங்களுக்குக் 'கொல்' என்று சிரிக்கும்படி ஜோக் அடிக்கத் தெரியுமா?

! ஒ, எஸ்! 'கொல்' லென்று சிரிக்காமல் நான் ஜோக் அடிப்பதே இடையாது!



* ஜி. சந்தானம், வலங்கைமான்.

? தீவிரவாதிகள் உருவாகக் காரணம் யார்?

! உணர்ச்சி என்ற யானையை அறிவு என்ற அங்குசத்தால் அடக்கத் தெரியாதவர்கள்.

* எஸ். ஜெயராமன், திருநெல்விக் காவல்.

? பத்திரிகைகளில் எழுதப்படும் தலையங்கம் எப்படி இருக்க வேண்டும்?

! 'பத்திரிகையின் தலையாய அங்கமாகத் தகுதி பெற்றிருக்க வேண்டும்' என்பார் ராஜாஜி. ஆங்கிலத்தில், 'A leader should lead you somewhere' என்பார். அதாவது, பிரச்னை என்ன? காரணம் என்ன? தீர்வு என்ன? — மூன்றையும் உள்ளடக்கியதாய் இருக்க வேண்டும், தலையங்கம்.

* கோ. சு. ஸ்ரேஷ், கோவை

? ரூ. 550/— கோடி வரி விதிப்பு பற்றி?

! நாட்டில் வறட்சியால் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கும் போது, உயர் வருமானம் உள்ளவர் மீது ஓர் ஆண்டுக்கு மட்டும் விதிக்கப்பட்டுள்ள வரியைக் கொடுக்க யாரும் சுணங்க மாட்டார்கள். ஆனால் அபிவிருத்தித் திட்டங்களுக்கு உதவாத அரசின் டம்பாச்சாரிச் செலவுகளைக் குறைத்தால் 550 கோடிக்கு அதிகமாகவே மிச்சப் படுத்தலாமே என்ற ஹெக்டேயின் கருத்து உண்மையானது. நாட்டிலுள்ள நாலாயிரம் கோடி கறுப்புப் பணத்தைக் கைப்பற்றுவதை விட்டு விட்டுப் புது வரிகள் விதிப்பானேன் என்ற வி. பி. சிங்கின் கேள்வி நியாயமானது. 1700 கோடி போஃபார்ஸ் பேரத்தில் பன்னிரண்டு சதம் கமிஷன் தரப்படுவதாக அந்நிறுவனத் தலைவரே ஒப்புக் கொள்கிறார். இதுவே 204 கோடி ஆகிறது. இதையெல்லாம் பார்க்க, புதிய வரி விதிப்புக்கள் அந்த அளவுக்குச் சேமிப்பையும் முதலீட்டையும் கட்டுப் படுத்தும் என்பதை நோக்க, நமது பிரதமருக்குப் பொருளாதாரம் புரியவில்லை என்ற முடிவுக்குத்தான் வர வேண்டியிருக்கிறது.

* பிரபா, கும்பகோணம்

? 'எதிர்க்கட்சிகளிடையே ஒற்றுமை தோன்றும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை' என்று ஹெக்டே கூறுகிறாரே?

! வாஸ்தவமான பேச்சு. முந்தைய ஜனதா பரிசோதனை அடைந்த தோல்வியின் அடிப்படையில் பார்த்தால் அவர் கூறுவது சரியே. எதிர்க் கட்சிகளுக்கு, ராஜீவைப் பதவி இறக்கி, காங்கிரஸைக் கவிழ்த்து விடுவதில் மட்டுமே ஒற்றுமை உள்ளது. மற்றபடி ஓர் அடிப்படைச் செயல் திட்டத்தில் கூட ஒற்றுமை காண முடியாத போது இவர்களால் நாட்டுக்கு என்ன பயன்?

* எஸ். பரமசிவம், சீர்காழி.

? இந்திக் கவிஞர் மகாதேவி வர்மாவின் படைப்புக்களை ரசித்திருக்கிறீர்களா?

! ஒருமையில் கேளுங்கள், ரசித்திருக்கிறேன்! சென்ற ஆண்டு அவரைச் சில தமிழ் எழுத்தாளர்கள் சந்தித்தனர். அவர்களில் நண்பர் சுப்ரபாலனும் ஒருவர். மாதாஜியிடம் ஒரு தமிழ்க் கவிதையை எழுதிப் படித்துக் காட்ட, அவரும் மகிழ்ந்து பதிலுக்கு ஒரு வாழ்த்துக் கவிதையை எழுதித் தந்தார். அது, இந்தியன் ஒவ்வொருவனுக்கும் அளிக்கப்பட்ட, யதார்த்தத்தை மறவாத வாழ்த்தாக விளங்கக் காண்கிறேன்:

'வசந்த காலத்தில் முதன்முதலாய்ப் பூத்த
மலர் நீ!
முட்களின் இடையேயும் மலர்ந்து நீ
மணம் வீசு!
இந்தக் காடும் நந்தவனமும் — உனக்கு
இனிமை செறிந்தனவாய் இருக்கட்டும்!
மலர்களின் தேனமுதமாக நீயே இரு!
உன்னுடைய பாதைகளில் மங்களங்கள்
சேரட்டும்!


* க. சத்தியநாராயணன், அயன்புரம்.

? ராணிவெள்ளிவிழா கொண்டாடியது குறித்து?

! "பண்டிதர்களிடம் இருந்த தமிழை மத்திய தர வகுப்பினரிடம் கொண்டு சென்றீர்கள்; நான் பாமரரிடம் கொண்டு செல்கிறேன்" என்றார் ஆதித்தனார், 'கல்கி'யிடம். இருவரும் காந்தி நகரில் பக்கத்து வீட்டுக்காரர்கள். "அவர்களுக்கும் வோட்டுரிமை வந்தாகி விட்டதல்லவா; அரசியலை எடுத்துச் சொல்ல அவசியம் இருக்கிறதே!" என்றார் கல்கி. பின்னர் வாரப் பத்திரிகையையும் தொடங்கத் தீர்மானித்தார் ஆதித்தனார். அ. மா. சாமியை ஆசிரியராக்கினார்கள். வெள்ளி விழாக் காலமும் அவரே ஆசிரியர்! ஆனால் தந்தி நிறுவனத்தில் முப்பத்திரண்டு வருஷ சர்வீஸ்! தமிழ் ஏடுகள் குறித்து அவர் சமீபத்தில் எழுதி வெளியிட்டுள்ள ஆய்வு நூல், என்றைக்கும் பயன்படக்கூடிய படைப்பு. சிவந்தி ஆதித்தனை முன் நிறுத்தி, சிறப்பாக ராணியின் வெள்ளி விழாக் கொண்டாடிய மாரிசாமி, வாசகர்களின் தரத்துக்கு இறங்கி, அவர்களைக் கைதூக்கி உயர்த்தி விட உழைப்பவர். வெள்ளி விழா ஒரு திரும்பு முனையாக அமைந்து, ராணியும் அதன் வாசகர்களுடைய ரசனையும் பொன் விழா நோக்கி இன்னும் மேலே உயர்ந்து செல்லட்டும்.



* சதி!



* ராணி...

...வெள்ளி விழா!

* இருட்டினன், வந்தவாசி.

? கோர்பச்சேவை விஷமிட்டுக் கொல்லச் சதி நடந்ததாமே?

! அவர் உடல்நலம் திடீரென்று பாதிக்கப்பட்டதால் அப்படி சந்தேகிக்கப் படுகிறது. ஆனால் அவர் மட்டுமென்ன? எந்த நாட்டுத் தலைவரானாலும் சரி, பயங்கரவாதத்துக்கு எந்தக் கணமும் பலியாவோம் என்ற நிலைமைதான் இன்று உலகெங்கும் நிலவுகிறது. சமீபத்தில் ராணுவச் சதியை வெற்றிகரமாக முறியடித்த பிலிப்பைன்ஸ் தலைவர் திருமதி அக்வினோவை பிரெஞ்சுப் பத்திரிகை ஒன்று எப்படிச் சித்திரித்திருக்கிறது, பாருங்கள்!

* ரூ. 15 பரிசு பெறுபவர்:
கோ. க. சுரேஷ்,
50, செங்குப்தா வீதி,
இராம் நகர், கோவை.
641 009.

நிற்க நிழல் வேண்டும்

10

வாஸந்தி

பிரபுவுக்கு மூக்கில் வியர்த்தது. நிச்சயம் ஏதோ விஷயம் இருக்கிறது. இல்லாவிட்டால் இந்த உயர் அதிகாரிகள் இங்கு இருக்க மாட்டார்கள். ஒருவர் பாதுகாப்புத் துறையில் உயர் அதிகாரி என்று அவனுக்குத் தெரியும். தில்லியில் சில முக்கியப்பட்ட மீட்டிங்குகளில் அவரைப் பார்த்திருக்கிறான். இன்னொருவர் கப்பற் படையைச் சேர்ந்தவர். இருவரும் சாதாரண உடையில் இருந்தாலும் அவனுடைய கூரிய பார்வை அவர்களை இனங்கண்டு கொண்டது. அவர்கள் எங்கே தங்கியிருக்கிறார்கள் என்று தெரிந்தால் எப்படியாவது அவர்களுடன் பேச்சுக் கொடுத்து ஒரு கதையை ஜோடிக்கலாம். அவன் பார்த்துக் கொண்டு நிற்கும் போதே அவர்கள் மீனவர் சங்கத் தலைவருடன் கிடுகிடுவென்று நடந்து சென்று சற்று தொலைவில் நின்றிருந்த ஜீப்பில் தாவி ஏறிக் கிளம்பிப் போய்விட்டார்கள்.

அவன் ஏமாற்றத்துடன் திரும்பி வந்து ஜயசிலனுக்கு அருகில் உட்கார்ந்து கொண்டான். இன்று முடியாவிட்டால் நாளைக்குக் காலை அந்த மீனவர் சங்கத் தலைவரைச் சந்தித்து விசாரிக்க வேண்டும். அதற்குள் அந்த அதிகாரிகள் கிளம்பிப் போய் விடுவார்கள்.

அவனுடைய பத்திரிகை ஆசிரியர் அசோக் மெஹ்தா எமகாதகர். யாரெல்லாமோ தொடர்பு உண்டு அவருக்கு. மற்றவர்களுக்குத் தெரியவராத விஷயங்கள் அவருக்கு முதலில் தெரிய வந்துவிடும். வடமராச்சிப் பகுதியில் இலங்கை விமானப் படைத் தாக்குதல் ஆன மறு நாளைக்கு அவனைக் கூப்பிட்டார்.

''ஜாஃப்னாவுக்குப் போகிறாயா?'' என்றார்.

அவர் என் என்பதற்குள் அவன் எண்ணெய் என்றான்.

''குட்! உனக்கு விஸாவுக்கு நான் ஏற்பாடு செய்கிறேன். உன்னைப் பாதுகாத்துக் கொள்வது உன் சாமர்த்தியம்.''

''நோ பிராப்ளம்'' என்று அவன் சிரித்தான். ''அப்படி ஏதாவது ஆயிற்றென்றால் வீர மரணம் அடைந்தேன் என்று நீங்களும் சொல்லலாம். பிறப்பில் நானும் ஒரு தமிழன்!''

''அந்த மாதிரி அசட்டுத்தனம் எதுவும் செய்ய மாட்டாய்னு நினைக்கிறேன்'' என்றார் அவர் சிரிக்காமல். ''போனோம் வந்தோம் என்று வந்துவிடாதே. முடிந்த அளவு கதைகளைச் சேகரி. இந்திய அரசு ரொம்பப் பெரிய கிளைமாக்ஸுக்குத் தயாராகிக் கொண்டிருக்கிறது!''

''எந்த மாதிரியான கிளைமாக்ஸ்?''

''அதையெல்லாம் உனக்குச் சொல்லிக் கொண்டிருந்தேனானால் நீ என்ன ரிப்போர்ட்டர்?''

அவரை மனத்துள் சபித்தபடி அவன் தயாரானான். அவருக்கு ஏற்கனவே தெரிந்த ஒரு விஷயத்திற்கு அவன் என்ன கதைகள் சேர்ப்பது?

இருந்தும் இலங்கைப் பயணம் அவனுள் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்திற்று. ஆக்ஷன் நடக்கும் இடத்துக்கே போவது எத்தனை அரிய வாய்ப்பு!

ஆனால் யாழ்ப்பாணத்தை அடைந்த பிறகுதான் நிலைமையின் விபரீதம் புரிந்தது. தங்குவதற்கு ஒரு ஹோட்டல் கூட இல்லை. எல்லாம் இழுத்து மூடப்பட்டிருந்தன. அப்படி மூடப்பட்டிருந்த ஒரு ஹோட்டல் முதலாளியின் வீட்டை அடைந்து எங்கேயாவது தங்க அவர் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று அவன் கெஞ்சியபோது, அவன் தமிழ் பேசும் இந்தியன் என்கிற காரணத்தாலோ என்னவோ ''சரி என் வீட்டிலேயே தங்கிக்க'' என்றார் அவர் பெருந்தன்மையாக. வீடு சூன்யம் பிடித்தாற் போல் இருந்தது.

'''83 கலவரத்துக்குப் பிறகு எல்லாரையும் வெளியே அனுப்பிட்டேன். ஒரு பிள்ளையும் மருமகளும் மாத்திரம்தான் இங்கே இருக்கிறார்கள். பேரன் பேத்தியெல்லாம் இந்தியாவிலே படிக்குது.'' என்றார் வேலுப்பிள்ளை.

முகத்தில் சிரிப்பே இருக்காது. சதா எதையோ எதிர்ப்பார்த்து, பீதியுடன் காத்திருப்பதுபோல் தெரிவார். மாலை இருட்டியதுமே எல்லாக் கதவையும் ஜன்னலையும் மூடி விடுவார்.

''எங்கே போனாலும் இருட்டறதுக்கு முந்தி நீ வந்துடணும் தம்பி. அதுக்கப்புறம் வந்தால் என்னாலே திறக்க முடியாது'' என்று முதல் நாளே கண்டிஷன் போட்டார்.

வேறு இடம் கிடைக்கிற வரை அவர் சொல்படி கேட்பதைத் தவிர வேறு வழியில்லை என்று அவன் ஒப்புக் கொண்டான். பிறகுதான் புரிந்தது அவருடைய பயத்தின் காரணம்... பத்து நாட்களுக்கு முன் தில்லியில் இருந்தோம் என்கிற நினைப்பே நம்ப முடியாததாக இருந்தது. ஜாஃப்னாவில் இருந்த ஒரு வார காலம் ஒரு யுகாந்திரம் போல் பிரமையேற்படுத்திற்று. அந்தப் பிரமை கிளப்பிவிட்ட ஞாபகங்களில் இப்பொழுது மன இறுக்கங்கள் எல்லாம் தளர்ந்த நிலையில், சற்று எட்டி அக்னி தீர்த்தத்தில் குழந்தை வேண்டி வந்த தம்பதிகள், மூங்கி மூங்கி எழும் காட்சி, பொருந்தாமல் அதிர்ச்சி ஏற்பட்டது. எது நிஜம் எது பொய் என்கிற குழப்பத்தைத் தோற்றுவித்தது. இது

பொய்யுமில்லே. நிஜமில்லாமலும் இல்லே — இது இயற்கையானது — மனுஷ இயல்புக்கு விரோதமில்லாதது — அது ஒரு அசாதாரண செயற்கைச் சூழல். மனித இயல்புக்கு விரோதமான, இப்பொழுது நினைவு கூரும் போதும் மனத்தை இறுக்கும் சூழல்.

அவனுக்கு இலேசாகச் சிலிர்த்தது.

"என்ன குளிருதா?" என்றான் ஜயசீலன்.

"இல்லே ஜயசீலன்! யாழ்ப்பாணப் பயணத்தை என்னாலே ஆயுசுக்கும் மறக்க முடியாது. மனுஷங்க சாவை நான் அங்கே பார்க்கல்லே. ஒரு சமூகத்தோட சாவைப் பார்த்தேன்."

ஜயசீலன் பதில் சொல்லாமல் தொலைவை, கரிய கடலைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தான். அவனுடைய கண்கள் பனிப்பதைக் கவனிக்காமல் பிரபு பேசிக் கொண்டு போனான்.

"உன்னைச் சந்திக்கிறதுக்கு முந்தி வேலுப் பிள்ளைங்கிறவர் வீட்டிலே இருந்தேன்னு சொல்லல்லே? காலையிலேதான் பாம்பர் ஓசைக்குப் பயந்து புறாப் போல ஒடுங்கியிருக்காரு ராத்திரி வேளையிலே குண்டோசை இல்லாத போதும் ஏன் நடுங்கறார்னு எனக்குத் தோணும். ஒரு நாள் நடு ராத்திரி யாரோ கதவைத் தட்டினாங்க. ரொம்ப நேரம் யாரும் திறக்கல்லே. வெளியிலேருந்து கிட்டத்தட்ட கதவை உடைக்கிற அளவுக்குச் சத்தம் வந்தபோது வேலுப் பிள்ளை கதவைத் திறந்தார். நான் இடுக்கு வழியாப் பார்க்கறேன். நாலைஞ்சு பேர் முகத்தை மறைக்



கிற.மாதிரி துணியைக் கட்டிக்கிட்டு உள்ளே நுழையருங்க. கையிலே துப்பாக்கி. "பணத்தை எடு" என்கிருன் நல்ல தமிழிலே. யாழ்ப்பாணத் தமிழன். "பணமே இல்லேங்கருர் வேலுப்பிள்ளே. செமை அடி. உதை. போராளிகளாம். ஆயுதம் வாங்கப் பணம் வேணுமாம். அதுவும் பணம் எத்தனே கேட்கிருன் தெரியுமோ? மூணு லட்சம். கடைசியிலே எத்தனே கொடுத்தார்னு தெரியாது. அவங்க போன பிறகு மண்டையிலே அடியோட குலுங்கக் குலுங்க அழுதுக்கிட்டிருந்தார்."

அந்தக் காட்சியை மீண்டும் நினைவு கூர்ந்தவனைப் பிரபு மௌனமாகுன்.

"போலீஸ் நிலேயத்தைப் போராளிகள் நிர்மூலமாக்கி விட்டார்கள். காவல் துறை இயங்காத போது நீதிமன்றத்துக்கு எங்கே வேலே? அரசு நிர்வாகம் படுத்தே போச்சு. தட்டிக் கேட்க ஆளில்லேண்டா இதெல்லாம் ஏன் நடக்காது?" என்ருன் ஜயசீலன்.

"இரண்டு நாட்கள் கழிச்சு என்ன நடந்ததுன்னு நான் உனக்குச் சொல்லலியே!"

"நீர் சொல்லாமலே எனக்குத் தெரியும்."

"என்ன?"

"அந்தக் கள்ளர்களேப் பிடிச்சு நடுத் தெருவிலே விளக்குக் கம்பத்திலே கட்டி விடுதலேப்புலிகள் சுட்டிருப்பான்கள்!"

"எத்தனே சாதாரணமாச் சொல்றே ஜயசீலன்!"

"அசாதாரண நிலேமை சாதாரணமாப் போனதாலே! ஜனங்களுக்கு வேறு எந்த வகையிலேயும் பாதுகாப்பு இல்லேண்டா என்ன செய்வீர்?"

"நீ சொல்றது சரிதான்" என்ருன் பிரபு மெல்லிய குரலில்.

இருவரும் தங்கள் யோசனேகளில் புதைந்து போன மௌனத்துடன் கடலேப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தார்கள். ஸ்நானம் செய்ய வந்தவர்களின் கூட்டம் குறைந்துவிட்டது. தூரத்தில் சில மீனவக் கப்பல்களின் 'மூணுக் மூணுக்' வெளிச்சம் நட்சத்திரச் சிதறல்களாய்த் தெரிந்தன.

"எத்தனே பெரிய சோகம் ஜயசீலன்; சைவமும் பௌத்தமும் அன்பைப் பரப்புகிற மதங்கன்னு சொல்வாங்க. இப்பப்பார் எப்படிப்பட்ட துவேஷமும் வன்மமும் சைவத் தமிழனுக்கும் பௌத்த சிங்களவனுக்கும் நடுவிலே! ஆரு மனுஷனுக்கு மதம் பிடிச்சுப் போச்சுன்ரு சைவமாவது பௌத்தமாவது!"

ஜயசீலனின் அதரங்களில் மெல்லிய நகை தோன்றி மறைந்தது.

"என்ன சிரிக்கிறே சொன்னது சரிதானே?"

"சரிதான். யாழ்ப்பாணத்துக்கு வந்து என்ன தெரிஞ்சுகிட்டீரோ, ஆங்கிலம் கலக்காமல் தமிழ் பேசக் கத்துக்கிட்டீர்!"

"ஆ எனக்கே ஆச்சரியமாயிருக்கு." என்று சிரித்தபடி பிரபு எழுந்தான்.

"கிளம்பு. மறுபடி ஜுரம் வந்துதுன்ரு டாக்டர் என்னேத் திட்டுவார்."

மீண்டும் ஓர் ஆட்டோரிக்ஷாவைப் பிடித்து அவனே ஏற்றி ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்லும்போது பிரபு தோழமையுடன் ஜயசீலனின் கையைப் பற்றினன்.

"சீலியாவை ஆர்மி ஏன் கொண்டு போனுங்க ஜயசீலன்?"

ஜயசீலனின் உடம்பு லேசாக விறைத்துக் கொண்டது. பிறகு மெல்லத் தளர்ந்தது.

"என்னேப் பிடிக்க முடியல்லே ஆர்மிக்கு. அதனுலே என் சிநேகிதியைக் கொண்டு போச்சு."

"இயக்கத்திலே நீயும் சேர்ந்திருந்தியா?" என்ருன் பிரபு ஜாக்கிரதையாக. "உங்கப் பாவுக்கும் அம்மாவுக்கும் அதிலே இஷ்டமிருந்ததா?"

"இஷ்டமா? கடந்த பத்து வருஷமா இஷ்டப்பட்டு யாரும் எதையும் செய்யல்லே யாழ்ப்பாணத்திலே. ஒரு இடத்திலே விஷஜுரம் பரவினு அதிலிருந்து அங்கிருக்கிறவன் எப்படித் தப்பிக்க முடியாதோ அப்படிப்பட்ட விஷக்காற்று அப்ப. வசதியுள்ள பொடியன்கள் தப்பிச்சான்கள். என்னேப்போல இரண்டுங் கெட்டான்கள் மாட்டிக் கொண்டோம்."

"அத்தனே சின்னத் தீவிலே பாஷை என்கிறது என்ன பாடு படுத்தி வெச்சிட்டது பாத்தியா ஜயசீலன்!" என்ருன் பிரபு உணர்ச்சி வசப்பட்டு. "சிங்களம் மட்டும் என்கிற சட்டம் முப்பது வருஷங்களுக்கு முன்னுலே ஏற்படுத்தின சாபக்கேட்டை இன்னும் அழிக்க முடியல்லே."

"இனிமேல் அதைக் கதைச்சு ஒண்ணும் பிரயோஜனமில்லே ஐயா! நீர் சொன்ன மாதிரி ஒரு சமூகம் செத்துப் போனபிறகு எது இருந்தால் என்ன போனால் என்னன்னு இருக்கு. எதுக்காக இந்தச் சண்டை, எதுக்காக இந்தத் துவேஷம், எதுக்காக இந்தச் சாவு?"

"ஏதோ ஒரு காரணம் இருக்கணும் ஜயசீலன்! அதுக்காகத்தானே உசிரை வெல்லக் கட்டியாய்ப் பிடிச்சுக்கிட்டு, காமெரா உள்பட கரை வந்து சேர்ந்தோம்? மயங்கி விழுற நிலையிலே கூட சீலியா சீலியான்னு நீ ஏன் அழறே?"

நர்ஸ்: நீங்க எங்க கிளினிக்குக்கு வந்த போது கொஞ்சம் கூடச் சுய நினைவே இல்லாமல்தான் இருந்தீங்க!

இவர்: "அதானே பார்த்தேன். இவ்வளவு கிளினிக்குகள் இருக்கும்போது எப்படி இங்கே வந்து சேர்ந்தேன்னு!"

— கடுவை கோபால்சாமி.



ஜயசீலனின் அதரங்களில் மீண்டும் ஒரு புன்னகை அரும்பிற்று.

''நீர் ஒரு சரியான வேடிக்கை மனுஷர்!''

''நன்றி!''

தன் தமிழை நினைத்துத்தானே சிரித்தான். உண்மையிலேயே சாதாரணமாக உபயோகப்படுத்தும் ஆங்கில வார்த்தைகள் கூட வரவில்லை. யாழ்ப்பாணக் காற்றுக்கு ஏதோ மகத்துவம் இருக்கிறது என்று சொன்னால் அசோக் மெஹ்தா என்ன நினைப்பார் என்று யோசித்தபடி ஆஸ்பத்திரியை அடைந்ததும்,

''நீ இன்னிக்கு நல்லா ஓய்வெடுத்துக்கோ ஜயசீலன்! நாளைக் காலை நான் வந்து உன்னைப் பார்க்கறேன். எனக்கு இப்பக் கொஞ்சம் வேலையிருக்கு!'' என்றான்.

மீனவர் கரை ஜே ஜே என்று இருந்தது. மீன் பிடியுடன் படகுகள் அப்பொழுதுதான் கரை சேர்ந்திருக்க வேண்டும். வியாபாரிகளும் படகு சொந்தக்காரர்களும் கரை சேர்ந்த சரக்கை ஆராய்ந்தபடி நின்றிருந்தார்கள்.

மீனவர் சங்கத் தலைவர் தென்படுகிறாரா என்று நோட்டம் விட்டபடி நடந்தான் பிரபு. தலைவர் நடராஜனைக் கண்டுபிடிப்பது அவ்வளவு கஷ்டமில்லை. கட்டபொம்மன் மீசை வைத்திருப்பார், அவரை எங்கும் காணவில்லை. கிளிஞ்சல் குவியலைப் போல் பளபளவென்று படகுகளில் ததும்பிய மீன்களை இயல்பான சுவாரஸ்யத்துடன் பார்த்து, இரண்டு புகைப்படங்களும் எடுத்துக் கொண்டு கிளம்பினான். நேற்றும், முந்தா நாளும் கூட அவன் இங்கு வந்து இவர்களுடன் பேசியிருக்கிறான்.

''ஐயா, தில்லியிலேந்து வாறீங்களா? அங்கே போய்ச் சொல்லுங்க எங்க பிரச்னைகளை. இலங்கைப் பிரச்னைக்குச் சீக்கிரம் ஒரு முடிவு வந்தாத்தான் எங்க பிரச்னை தீரும்னு சொல்லுங்க!'' என்றிருக்கிறார்கள்.

அவன் வெளியேறும் சமயத்தில் நடராஜன் வந்தார்.

''ஆ நடராஜன், உங்களைப் பார்க்கத்தான் வந்தேன்!'' என்றான் பிரபு அவசரமாக.

''என்ன விஷயம், சொல்லுங்க!'' என்றார் நடராஜன் ஏதும் அறியாதவர் போல.

''ஒரு விஷயம் நீங்க சொல்லணும். தில்லியிலேந்து வந்திருக்கிற அந்த அதிகாரிங்க கூட உங்களைப் பாத்தேன். அவங்க எதுக்கு வந்திருக்காங்கன்னு எனக்குச் சொல்ல முடியுமா?''

''எதுக்கு? உடனே பேப்பர்லே போட்டுக் குளறுபடி பண்ணவா?''

''அதெல்லாம் போட மாட்டேன். மனசுலே ஒரு ஓரத்திலே வெச்சுக்குவேன்!''

நடராஜன் சிரித்தார்.

''உங்களுக்கு எதுக்கு சார் வம்பு? அவங்க போடற திட்டமே எனக்குச் சரிபட்டு வரும்னு தோணல்லே அதை வேறே நீங்க விளம்பரப்படுத்திட்டீங்கன்னா —''



''டிக்டேஷன் கொடுக்கிறேன், எழுதுங்கள்!... எங்கள் வகுப்பு ஆசிரியர் மிகவும் நல்லவர், மிகவும் கெட்டிக்காரர். அன்பாகப் பாடம் சொல்லித் தருவார். அவரிடம் ட்யூஷன் வைத்துக் கொண்டால்தான் பரீட்சையில் தேறலாம்... எழுதியாச்சா? அழிக்காமல் வீட்டுக்குக் கொண்டு போய் உங்கள் அப்பாவிடம் காட்டுங்கள்!''

— ஆர். ஆர். பூபதி.

''அதெல்லாம் விளம்பரப் படுத்த மாட்டேன். சொல்லுங்க — திட்டம் என்ன?''

''செஞ்சிலுவைச் சங்கம் அனுப்புவதாக யாழ்ப்பாணத்துக்கு உணவுப் பொட்டலங்கள் அனுப்பப் போறாங்களாம். பொட்டலங்களை ஏத்த படகுகள் கிடைக்குமா, எந்த ரூட் வழியாகப் போகணும்னு விசாரிக்க வந்தாங்க.''

''ஏன் இந்தத் திட்டம் சரிவராதுங்க — நீங்க?''

''ஏன் சார், இலங்கை அரசு சும்மா இருக்குமா? தன் எல்லைக்குள்ளே படகுகளை வரவிடுமா? வீணாத் தகராறுதான். நம்ம மீனவர்கள் போகவே பயப்படுவாங்கள். அரசாங்கம் கொடுக்கிற கூலியும் ரொம்பக் குறைவு.''

''இலங்கை அரசு எதுக்கு மறுக்கணும்?'' என்றான் பிரபு வேண்டுமென்று. ''மனிதாபிமான நோக்கோடப் போற ரெட்கிராஸ் படகுகள்தானே!''

''அத்தனை அப்பாவிங்க இல்லே அவங்க. எனக்கே புரியுது. இங்கே இன்னிக்கு வந்தவங்க செஞ்சிலுவைக் காரங்க இல்லே. பாதுகாப்புத் துறையைச் சேர்ந்தவங்க. இதெல்லாம் வெறும் ஸ்டன்டாத்தான் முடியும். மூக்கறுபட்டுத் திரும்பி வருவோம். உருப்படியா இந்தப் பிரச்னையைத் தீர்க்கணும்னு யாருக்கும் அக்கறையில்லே போங்க!''

பிரபுவின் சுவாரஸ்யம் அதிகரித்தது.

''ஏன் நடராஜன், உங்களுக்குத் தோணற சந்தேகமெல்லாம் அரசாங்கத்துக்குத் தோணியிருக்காதுன்னு ஏன் நினைக்கிறீங்க? சரி, எப்ப ஏத்தப் போறாங்களாம்?''

''நாளைக்கு மத்தியானம்!''

பிரபு லேசாக விசிலடித்தான்.

நாளைக்குக் காலை ஜயசீலனை மண்டபத்தில் சேர்த்துவிட்டு உடனே இங்கு திரும்ப வேண்டும் என்று தீர்மானித்தான்.

(தொடரும்)



இந்தியாவில் உள்ள 4,86,636 ஆரம்பப் பள்ளிக் கூடங்களில் 40 சதவிகித பள்ளிக் கூடங்களுக்குச் சரியான கட்டிடங்கள் இல்லை. இன்னொரு 40 சதவிகித பள்ளிக் கூடங்களில் கரும் பலகைகளே கிடையாது! 85 சதவிகிதப் பள்ளிக் கூடங்களில் கழிவறை வசதிகளே கிடையாது! இவைகளில் சுமார் 1,60,000 பள்ளிக் கூடங்களில் ஒரே ஒரு ஆசிரியர் மட்டும்தான் இருக்கிறார்!

— ஆதாரம்: பிசினஸ் இந்தியா

தனித்துச் சொல்லப்படும் பொய் என்பது ஒரு முடவனைப் போல. அதனால் அடுத்த பொய்யின் ஆதரவில்லாமல் நிற்க முடியாது. ஒரு பொய் சொல்வது என்பது சுலபமான வேலை. ஆனால் ஒரே ஒரு பொய் சொல்வது என்பது உலகத்திலேயே மிகக் கடினமான காரியம்.

— "யாரோ"

போஃபார்ஸ் பேர்வழி, ஜாக்கிரதை!

ஏமாற்றுக்காரன் என்பதற்கு, 'போஃபார்ஸ்' என்ற சொல் பெங்களூரில் பலர் பேசும் பொழுது புழக்கத்திற்கு வந்து கொண்டிருப்பதைக் காணலாம். 'அவன் சரியான போஃபார்ஸ் பேர் வழி' என்பது, ஒருவரைப் பற்றி நல்ல அபிப்பிராயம் இல்லாததைக் குறிக்கிறது.

பெப்பி, காரி, இனு — இப்பெயர்கள் எதைக் குறிக்கின்றன?

இவை பருவ மழையைக் கொண்டு வரும் சில மேகக் கூட்டங்களுக்கு விஞ்ஞானிகள் இட்ட பெயர்கள். ஆகஸ்டு கடைசி வாரத்தில் 'இனு' மேகக் கூட்டங்கள் இந்தியாவின் சில பாகங்களுக்குக் கொடுக்க வேண்டிய மழையைத் தெற்குக் கொரியாவிற்குக் கொண்டுகொடுத்து விட்டுச் சீனாவை நோக்கி நகர்ந்து விட்டனவாம்!

பெங்களூரில் கடைகளில் விற்கப்படும் தேங்காய்களில் கூட கடைப் பெயரைத் தாங்கி நிற்கும் ரப்பர் ஸ்டாம்புகளை அடித்துக் கொடுக்கிறார்கள். இதனால் கெட்டுப்போன தேங்காய்கள் திருப்பப் படும் பொழுது, கடைக்காரர்கள் இது தங்களிடம் வாங்கப்பட்டதுதானா என்று சரி பார்த்துக் கொள்ள முடிகிறதாம்.



மேற்கு ஜெர்மனியில் அரசாங்கம் வெளியிடும் பண நோட்டுக்கள் உறுதியான நைலான் நூல்களை இழைத்துத் தயாரிக்கப் பட்டவை. இதனால் இப் பண நோட்டுக்கள் ஈரப்பதத்தினாலோ, கசக்குவதாலோ வாழ்வை உடனடியாக இழக்காமல் நீண்ட காலம் உழைக்கின்றன.

— தொகுப்பு: லதா

பரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிட்டவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: 431543, 434157.
ஆசிரியர் குழு அலுவலகம்: 28, ஐந்தாவது தெரு, ஏரி வட்டம், நுங்கம்பாக்கம், சென்னை — 600 034. போன்: 473389.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 104/-; வெளி நாடு: கப்பல் தபால் ரூ. 280/-; விமானத் தபால் ரூ. 680/-.
அரை யாதச் சந்தா — உள்நாடு: ரூ. 52/-; வெளி நாடு: கப்பல் தபால் ரூ. 140/-; விமானத் தபால் ரூ. 340/-.

அழகோ அழகு ஃப்ரெஸ்கா
அற்புத நறுமணம் ஃப்ரெஸ்கா





கோத்ரெஜ் அறிமுகப் படுத்துகிறது ஃப்ரெஸ்கா— அற்புதமான சோப்.

ஃப்ரெஸ்கா—நிறைந்த சுகந்தம், நிகரில்லா நறுமண சோப்.

வளமான நுரை—தந்திடும் வந்திடும் அதிக நாட்களுக்கு ஃப்ரெஸ்கா சோப்.

அடக்கமான விலையிலே அற்புதமான சோப் ஃப்ரெஸ்கா.

ழகான அற்புதமான சோப் வழங்குவோர் கோத்ரெஜ்

Enterprise/GS/61R TmC

GISTERED No. M 4392
gistered as a Newspaper in Sri Lanka

